# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 – 2027

## மானியக் கோரிக்கை எண். 48


## ஆ. விஜய் தமிழன் பார்த்திபன்
போக்குவரத்துத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | 31 |
| 3. | பேருந்து நவீனமயமாக்கல்: புதிய பேருந்துகள் கொள்முதல் மற்றும் பேருந்துகள் புதுப்பித்தல் | 119 |
| 4. | பசுமை முன்னெடுப்புகள் | 170 |
| 5. | சாலைப் பாதுகாப்பு முன்னெடுப்புகள் | 178 |
| 6. | நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | 186 |
| 7. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 194 |
| 8. | இரயில்வே திட்டங்கள் – துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 199 |
| 9. | சாலை போக்குவரத்து நிறுவனம் | 201 |
| 10. | தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம் | 210 |
| 11. | முடிவுரை | 214 |

# போக்குவரத்துத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2026 - 2027

## 1. முன்னுரை

### 1.1 போக்குவரத்து – ஒரு அத்தியாவசிய மற்றும் பொதுநலச் சேவை

பொருளாதார நடவடிக்கை, சமூக உள்ளடக்கம் (Social Inclusion) மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்கு போக்குவரத்து ஒரு அடிப்படைத் தேவையாகும். தமிழ்நாட்டில் வசிக்கும் சுமார் 8.53 கோடி மக்கள் வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பொதுச் சேவைகளை குறைந்த செலவில் எளிதில் பெறுவதற்கு நம்பகமான மற்றும் பரவலான போக்குவரத்து வசதிகளை சார்ந்துள்ளனர். நடுத்தர வருமானம் கொண்ட பல குடும்பங்களுக்கு, போக்குவரத்து என்பது அவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்துடன் நேரடியாக தொடர்புடையதாக உள்ளது.

மாநகரங்கள், நகரங்கள், தொழில் மையங்கள் மற்றும் கிராமப்புறங்களில் பொருளாதார

நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்படுவதால் தொழிலாளர்கள், மாணவர்கள், நோயாளிகள், விவசாயிகள் மற்றும் சிறு தொழில் முனைவோருக்கு அனுகத்தக்க மற்றும் எளிதில் பெறக்கூடிய போக்குவரத்து இன்றியமையாததாகிறது. போக்குவரத்து வசதி போதுமானதாக இல்லையென்றாலோ அல்லது விலையுயர்ந்ததாக இருந்தாலோ, உற்பத்தித்திறன், கல்வி, சுகாதார சேவைகளை அணுகும் வாய்ப்பும் அரிதாவதால் குடும்பங்களின் நிதிநிலையும் பாதிக்கும்.

எனவே, பொதுப் போக்குவரத்தினை ஒரு இன்றியமையாத பொதுநலச் சேவையாகவே கருத வேண்டும். தனியார் வாகனங்கள் இல்லாதவர்கள், குறிப்பாக பெண்கள், மாணவர்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முறைசாரா தொழிலாளர்கள் ஆகியோருக்கும் பொதுப் போக்குவரத்து குறைந்த செலவில் பல்வேறு வாய்ப்புகளை அணுகுவதற்கான வசதியை வழங்குகிறது. மேலும், இது சமூக உள்ளடக்கம்,

பாதுகாப்பு மற்றும் சமச்சீரான பிராந்திய வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

நீண்டகாலமாக தமிழ்நாட்டின் அரசு போக்குவரத்துக் கழகங்கள் இந்த இன்றியமையாத போக்குவரத்து வசதியை வழங்கி வருகின்றன. 21,198 பேருந்துகள் மூலம் நாள்தோறும் சுமார் 2.12 கோடி பயணிகளுக்கு போக்குவரத்துச் சேவையை வழங்கி வருகின்றன. எனினும், பெருகி வரும் பயணத் தேவை, நகர்ப்புற விரிவாக்கம் மற்றும் தனியார் வாகன உரிமையாளர்கள் எண்ணிக்கை உயர்வு போன்ற காரணங்களால் மேம்படுத்தப்பட்ட வாகனங்கள், நவீன தொழில்நுட்பம், பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டமிடல் மூலம் பொதுப் போக்குவரத்தை மேலும் வலுப்படுத்தவும், நவீனமயமாக்கவும், விரிவுபடுத்தவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் நீடிப்புத்திறன் மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு

வலுவான மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட போக்குவரத்து அமைப்பு, என்பது அவசியமான ஒன்றாகும்.

## 1.2 பொதுப் போக்குவரத்தின் அவசியம்

அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவைக்கு பொதுப் போக்குவரத்தே மிகவும் சரியான/நிகரான மற்றும் சிறந்த தீர்வாகும். குறைந்த சாலைப் பரப்பைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையிலான பயணிகளுக்கு போக்குவரத்துத் சேவையை வழங்குவதுடன், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு போக்குவரத்தை குறைந்த செலவில் கிடைக்கச் செய்கிறது. மேலும், அதிகப்படியான செலவிலான தனியார் மோட்டார் வாகனங்களைச் சார்ந்திருக்கும் நிலையினை குறைக்கின்றது. தமிழ்நாட்டில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சாலை வழியிலான போக்குவரத்தினை மேற்கொள்ளும் பெரும்பானோருக்கு முதுகெலும்பாகத் திகழ்கிறது. இவை நகர்ப்புற, கிராமப்புற, புறநகர் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வழித்தடங்களை

உள்ளடக்கிய விரிவான போக்குவரத்து வலையமைப்பின் மூலம், நாள்தோறும் சுமார் 2.12 கோடி பயணிகளுக்கு சேவை வழங்கி வருகின்றன.

மாநிலத்தின் தொடர் நகரமயமாக்குதல் காரணமாக, பொதுப் போக்குவரத்தின் தேவை நாளுக்கு நாள் அதிக முக்கியத்துவம் பெறும். தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள்தொகை 2026 ஆம் ஆண்டில் சுமார் 4.27 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2031 ஆம் ஆண்டளவில் சுமார் 4.47 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை சுமார் 20.00 இலட்சம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த மக்கள்தொகையில் நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் பங்கானது நடப்பாண்டில் உள்ள சுமார் 55.02 சதவீதத்திலிருந்து, 2031 ஆம் ஆண்டில் சுமார் 57.30 சதவீதமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியின் விளைவாக,

பணி, கல்வி, சுகாதாரம், வணிகம் தொடர்பான அத்தியாவசிய சேவைகளுக்கான தினசரி பயணத் தேவை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும்.

தனியார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் மாநிலமான தமிழ்நாட்டில், பொதுப் போக்குவரத்தின் முக்கியத்துவமும் தவிர்க்க இயலாததாக உள்ளது. வலுவான, நம்பகமான மற்றும் தேவைக்கேற்ப போதுமான அளவில் செயல்படும் பேருந்துப் போக்குவரத்து அமைப்பு இல்லையெனில், நகரமயமாக்கலும் பயணத் தேவையும் அதிகரிப்பதன் விளைவாக இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் பயன்பாடு மேலும் உயரும். இதனால் சாலை நெரிசல், வாகன நிறுத்துமிடங்களின் மீதான அழுத்தம், எரிபொருள் நுகர்வு, மாசு உமிழ்வு மற்றும் சாலை விபத்துகளின் அபாயம் ஆகியவை கணிசமாக உயரக்கூடும். எனவே, பொதுப் பேருந்துப் போக்குவரத்தை வலுப்படுத்துவது என்பது சமூக உள்ளடக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், அனைவருக்கும் குறைந்த கட்டணத்தில் பயண வசதியை வழங்குவதற்கும் மட்டுமன்றி, போக்குவரத்து செயல்திறனை

மேம்படுத்தவும், நிலையான நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், சமச்சீரான பிராந்திய வளர்ச்சியை உறுதிசெய்யவும் இன்றியமையாததாகும்.

### 1.3 நவீன பேருந்துப் போக்குவரத்தில் தொழில்நுட்பத்தின் அவசியம்

பொதுப் போக்குவரத்தை நவீனமயமாக்குவதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது. நடைமுறை சிக்கல்கள் நிறைந்த பேருந்துப் போக்குவரத்து அமைப்பில், வழித்தடம் திட்டமிடல், வாகனங்கள் அட்டவணையிடல் (Fleet Scheduling) அவ்வாகனங்களுக்கான பணியாளர்களை பணியமர்த்துதல், பராமரிப்பு, வருவாய் பாதுகாப்பு, பயணிகளுக்குக்கான தகவல் சேவைகள் மற்றும் சேவையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றிற்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகள் (Intelligent Transport Systems – ITS), தானியங்கி நிகழ்நேர வாகன இருப்பிட அமைப்புகள் (Automatic Realtime Vehicle Location Systems – AVLS), பயணிகள் தகவல் அமைப்புகள் (Passenger

Information Systems – PIS), மின்னணு பயணச்சீட்டு வழங்கல், மையக் கட்டுப்பாட்டு நிலையங்கள் டெலிமேட்டிக்ஸ் மற்றும் நிறுவன வள மேலாண்மைத் தளங்கள் ஆகியவை, அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்பாட்டுத் திறனையும் பயணிகளின் பயண அனுபவத்தையும் மேம்படுத்த உதவுகின்றன.

நவீன தொழில்நுட்பம், வெளிப்படைத்தன்மை, பாதுகாப்பு மற்றும் நிதி ஒழுக்கத்தினை வலுப்படுத்துகிறது. ஒரே நேரத்தில் பல பேருந்துகள் செல்வது (Bus Bunching), அதனால் திட்டமிட்ட பயணங்களை தவறவிடுதல் ஆகியவற்றைக் குறைக்க நிகழ்நேர கண்காணிப்பு உதவுகிறது (Real Time Vehicle Location). மின்னணு பயணச்சீட்டு வழங்கும் முறை பொறுப்புணர்வை (Accountability) மேம்படுத்துகிறது. மேலும், வழித்தட சீரமைப்பு, வாகனங்கள் அட்டவணையிடல் மற்றும் பராமரிப்புத் திட்டமிடல் போன்றவற்றை திறம்பட செயல்படுத்த தரவுப் பகுப்பாய்வு உதவுகிறது. தமிழ்நாடு மாநிலமானது, மின்சாரப் பேருந்துகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க திட்டமிட்டு மொத்த செலவு ஒப்பந்த (GCC) முறையின்

அடிப்படையிலான மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புறப் போக்குவரத்து முறையை நோக்கி முன்னேறி வரும் நிலையில், தொழில்நுட்பம் இனி ஒரு விருப்பத் தேர்வாக இல்லாமல் அது இன்றியமையாததாக மாறி வருகின்றது.

## 1.4 தமிழ்நாட்டின் வாகன சூழல் அமைப்பு (01.07.2026 நிலவரப்படி)

01.07.2026 நிலவரப்படி தமிழ்நாட்டின் வாகனப் பதிவுப் புள்ளிவிவரங்கள், பொதுப் போக்குவரத்து அல்லாத வாகனங்களே பெருமளவில் உள்ளதை வெளிப்படுத்துகின்றன. பதிவு செய்யப்பட்டுள்ள மொத்தம் 405.73 இலட்சம் வாகனங்களில், பொதுப் போக்குவரத்து வாகனங்கள் 16.92 இலட்சம் அல்லது 4.17% ஆகவும், பொதுப் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 388.81 இலட்சம் அல்லது 95.83% ஆகவும் பதிவாகிவுள்ளது, இரு சக்கர வாகனங்கள் மட்டும் 338.55 இலட்சம் ஆகப் பதிவாகி இருப்பது மாநிலத்தில் தனியார் வாகனப் பயன்பாடு எந்த அளவிற்கு அதிகரித்துள்ளது என்பதை பிரதிபலிக்கிறது. இந்தச்

சூழலில், போக்குவரத்து இயக்கத் திறன், சாலைப் பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழலின் நீடிப்புத்திறனை உறுதிப்படுத்தும் விதமாக பொதுப் போக்குவரத்தினை மேலும் வலுப்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகிறது.

| **வகை** | **(எண்ணிக்கை இலட்சங்களில்)** | **சதவீதம்** |
|---|---|---|
| பொதுப் போக்குவரத்து வாகனங்கள் | 16.92 | 4.17 |
| பொதுப் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | 388.81 | 95.83 |
| **மொத்தம்** | **405.73** | **100.00** |

போக்குவரத்து வாகனங்களின் வகைகளில், கட்டண நிலை பேருந்துகள் (Stage Carriages) பொதுமக்களின் போக்குவரத்தினை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 33,865 பதிவு செய்யப்பட்ட கட்டண நிலை பேருந்துகள் (Stage Carriages) உள்ளன. அவற்றில், மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் 21,198 பேருந்துகள், 7,660 தனியார் பேருந்துகள் மற்றும் 5,007

சிற்றுந்துகள் (Mini Buses) அடங்கும். பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்களில், கட்டண நிலை பேருந்துகள் (Stage Carriages) மிகச் சிறிய பங்கையே கொண்டிருந்தாலும், அன்றாட பயணிகளில் பெரும் பகுதியினருக்கு போக்குவரத்துச் சேவையை வழங்கி மாநிலத்தின் போக்குவரத்து அமைப்பின் அடித்தளமாகத் தொடர்ந்து விளங்குகின்றன.

| **இனம்** | **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| கட்டண நிலை பேருந்துகள் | போக்குவரத்துக் கழக பேருந்துகள் | 21,198 |
| | தனியார் பேருந்துகள் | 7,660 |
| | சிற்றுந்துகள் | 5,007 |
| | **மொத்தம்** | **33,865** |
| ஒப்பந்த வாகனங்கள் | ஆட்டோ ரிக்ஷாக்கள் | 4,02,985 |
| | மோட்டார் கேப் | 1,48,361 |
| | மேக்ஸி கேப் | 78,710 |
| | ஆம்னி பேருந்துகள் | 4,781 |
| | **மொத்தம்** | **6,34,837** |
| சரக்கு வாகனங்கள் | சரக்குந்துகள் (Lorries) | 3,97,892 |
| | இலகுரக வணிக வாகனங்கள் | 4,93,376 |
| | இழுவை வண்டிகள் | 1,184 |
| | தொடர் வாகனங்கள் | 32,384 |
| | **மொத்தம்** | **9,24,836** |
| பிற போக்குவரத்து வாகனங்கள் | தனியார் சேவை வாகனங்கள் | 17,144 |
| | கல்வி நிறுவனப் பேருந்துகள் | 63,353 |
| | அவசர ஊர்திகள் | 16,242 |
| | தீயணைப்பு வாகனங்கள் | 2,058 |
| **மொத்தம்** | | **98,797** |
| **ஆக மொத்தம்** | | **16,92,335** |

## 1.5 நாட்டின் போக்குவரத்து சூழ்நிலை – வளர்ந்து வரும் போக்குவரத்து தேவைகள்

தேசிய போக்குவரத்துத் துறையின் சூழல், தமிழ்நாட்டில் காணப்படும் நடப்பு கட்டமைப்பினையே பிரதிபலிக்கிறது. அதாவது, தனியார் வாகனப் பதிவுகளின் விரைவான அதிகரிப்பு, நகர்ப்புறப் பயணத் தேவையின் அதிகரிப்பு, சுற்றுச்சூழல் குறித்த அதிகரித்து வரும் விழிப்புணர்வு மற்றும் நவீன நகரப் பேருந்துப் போக்குவரத்து அமைப்புகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் ஆகியவை இதில் அடங்கும். தேசிய அளவில், மின்சார இயக்கப் போக்குவரத்து, மின்னணு பயணச்சீட்டு முறை, பாதுகாப்பான மின்னணு கட்டண அமைப்புகள், நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகள், பணிமனை நவீனமயமாக்கல், பயணிகளுக்கான அணுகல்தன்மை கொண்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பேருந்துச் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான பொதுத்துறை–தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரிகள் ஆகிய

கொள்கைகள் மீது கவனம் அதிகரித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பொதுத்துறை–தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ் 5,000 மின்சாரப் பேருந்துகளை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ஏதுவாக, பணிமனை மற்றும் மின்கல மின்னேற்ற உட்கட்டமைப்பு, நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகள், அனைவரும் எளிதில் அணுகக்கூடிய பேருந்து நிறுத்தங்கள் மற்றும் கடைகோடி இணைப்புச் சேவைகளை மேம்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட உள்ளன. இது சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்து இயக்க அமைப்பு, தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாட்டு முறைகள், மேம்பட்ட சேவை நம்பகத்தன்மை, வலுவான முதல் மற்றும் கடைகோடி இணைப்புச் சேவைகள் மற்றும் நிதி ரீதியான நிலைத்தன்மை கொண்ட செயல்பாட்டு மாதிரிகளை நோக்கிய பரந்த அளவிலான மாற்றத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த தேசிய அளவிலான முன்னேற்றங்கள், தமிழ்நாட்டில் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வரும் தூய்மையான பேருந்து இயக்கம், தொழில்நுட்பம் சார்ந்த, பேருந்து வாகனத் தொகுப்பை நவீனமயமாக்குதல், மின்சார மற்றும் மாற்று எரிபொருளில் இயங்கும் பேருந்துகளின் அறிமுகம், நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகளை செயல்படுத்தல், இணைப்புச் சேவையினை வலுப்படுத்தல் மற்றும் பணிமனைகள், பயணிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் விரிவான மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் வலையமைப்பு, உயர்ந்த நகரமயமாக்கல் நிலை மற்றும் வலுவான பொதுப் போக்குவரத்து அடித்தளத்தைக் கொண்டுள்ள தமிழ்நாடு இந்த மாற்றங்களை திறம்படப் பயன்படுத்திக் கொண்டு, முன்னணி மாநிலமாக திகழ்வதோடு, தனது முன்னிலையை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

## 1.6. சாலை வழி பெருந்திரள் போக்குவரத்து திறன்மிக்க தேர்வாக பொதுப் பேருந்து போக்குவரத்து

பொதுப் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், பயண நேரத்தை மிச்சப்படுத்திடவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலும், மக்கள் இயக்கத்திற்கான செயல்திறன் மிக்க மற்றும் நடைமுறைக்கு ஏற்ற போக்குவரத்து முறையாக பேருந்து போக்குவரத்து திகழ்கிறது. சுமார் 50 பயணிகளை ஏற்றிச் செல்லும் ஒரு பேருந்து, சாலையில் இயங்கும் ஏராளமான தனியார் வாகனங்களுக்கு மாற்றாக பயன்படக்கூடியது. தனியார் சீருந்து (car) மற்றும் இருசக்கர வாகனங்களுடன் ஒப்பிடும்போது, பேருந்துகள் சாலைப் பரப்பினை மிகவும் திறம்பட பயன்படுத்துவதோடு, வாகன நிறுத்தத் தேவையையும் குறைத்து, ஒரு கிலோமீட்டர் பயணிக்க ஏற்படும் தனிநபர் மாசுபாட்டின் அளவையும் குறிப்பிடத்தக்க வகையில் குறைக்கின்றன. அதிக மக்கள் நெருக்கம் கொண்ட நகர்ப்புற வழித்தடங்கள், புறநகர் வளர்ச்சிப் பகுதிகள், ஊரகப் பகுதிகள் மற்றும்

நகரங்களுக்கு இடையேயான வணிக நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பயணத் தேவைகளுக்கு, குறைந்த கட்டணத்தில் சேவையினை வழங்கவும் மிக எளிதில் பயன்படக் கூடிய விருப்பத் தேர்வாக பேருந்து போக்குவரத்து திகழ்கிறது.

நாட்டிலேயே மிகப் பெரிய பொதுப் பேருந்துப் போக்குவரத்து அமைப்புகளில் ஒன்றான தமிழ்நாடு பொதுப் பேருந்து போக்குவரத்தில் தொடர்ச்சியான முதலீடு என்பது, போக்குவரத்து மேம்பாட்டு நடவடிக்கை மட்டுமல்லாமல்; அது போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் ஒரு முக்கிய உத்தியாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கையாகவும், சமூக உள்ளடக்கத்தை (Social Inclusion) மேம்படுத்தும் ஒரு பயனுள்ள கருவியாகவும் விளங்குகிறது.

## 1.7 அரசின் தொலைநோக்குப் பார்வை

பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முன்னுரிமைகளை ஒருங்கிணைக்கும் வகையில்,

நவீன, திறன்மிக்க, சிக்கனமான, காலநிலைக்கு ஏற்றாற் போல பாதுகாப்பான பேருந்துப் போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதே அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். இத்தொலைநோக்குப் பார்வையானது நகர்ப்புறம், ஊரகம், நகரங்களுக்கிடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பேருந்துப் போக்குவரத்து சேவைகளை உள்ளடக்கியதாகும். மேலும், குறைந்த கட்டணத்தில், அனைவரும் எளிதில் அணுகக்கூடிய சேவை, கடைகோடி இணைப்புச் சேவை (Last-mile Connectivity) மூலம் மேம்படுத்துதல், டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாட்டை விரிவுபடுத்துதல் மற்றும் அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையைப் படிப்படியாக வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

இத்தொலைநோக்குப் பார்வையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:–

- நம்பத்தகுந்த பேருந்துச் சேவைகள் மூலம் தொடக்க மற்றும் இறுதிக்கட்ட இணைப்பை

மேம்படுத்துவதன் மூலம் பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்தல்.

- அனைத்துத் தரப்பு பயணிகளுக்கும் பாதுகாப்பான, நம்பகமான, குறைந்த கட்டணத்தில், தேவைக்கு ஏற்றாற்போல பேருந்து போக்குவரத்து சேவையை உறுதி செய்தல்.
- மின்சாரம், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), ஹைட்ரஜன் மற்றும் பிற தூய்மையான எரிபொருள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்துகளை கொள்முதல் செய்வதை அதிகப்படுத்துதல்.
- பேருந்துகளை மின்சார (EV) மற்றும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மறுசீரமைத்து, தூய்மையான மற்றும் பசுமையான போக்குவரத்தாக மாற்றுதல்.
- முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைவரும் எளிதில்

பயன்படுத்தக்கூடிய வகையில் பேருந்துகளை, மாற்றியமைத்து அனைவரையும் உள்ளடக்கிய பயண இயங்குதிறனை மேம்படுத்துதல்.

- செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பயணிகளுக்கு துல்லியமான தகவல்களை வழங்குவதற்கும், நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகள் (ITS), மின்னணு பயணச்சீட்டு வழங்கும் முறை (Digital Ticketing), தானியங்கி வாகன இருப்பிடக் கண்காணிப்பு அமைப்பு (AVLS), பயணிகள் தகவல் அமைப்பு (PIS) மற்றும் பிற தொழில்நுட்பத் தளங்களைப் பயன்படுத்துதல்.
- சேவையினை மேம்படுத்தி, நவீன வசதிகொண்ட பேருந்துகளை இயக்குதல் மற்றும் தடையற்ற போக்குவரத்து ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் மூலம் பயணிகளின் சேவை அனுபவத்தை மேம்படுத்துதல்.

- குறைந்த கட்டணக் கொள்கையினைப் பாதிக்காமல், செயல்பாட்டு சீர்திருத்தங்கள், வழித்தட சீரமைப்பு (Route Rationalisation) மற்றும் இதர நிதியுதவி பெறும் திட்டங்கள் மூலம் நிதி நிலைத்தன்மையை அடைதல்.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறன் கொண்ட நகர்ப்புற இயங்குதிறன் கொள்கைகளுக்கு ஏற்ப போக்குவரத்துத் திட்டமிடலை ஒருங்கிணைத்தல் ஆகியவை இத்தொலை நோக்கின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

### 1.8 தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்தின் பரிணாம வளர்ச்சி

தமிழ்நாட்டில், அரசு பேருந்துப் போக்குவரத்தின் தோற்றம், விடுதலைக்குப் பிந்தைய காலகட்டத்தில் ஏற்பட்டதாகும். அன்றைய சென்னை மாகாணத்தில் (Chennai City) இயக்கப்பட்டு வந்த பேருந்துச்

சேவைகள் படிப்படியாக பொதுவுடைமையாக்கப்பட்டு அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. 01.01.1972 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழகம் நிறுவப்பட்டதுடன், அரசு போக்குவரத்துக் கழகங்களை அடிப்படையாகக் கொண்ட பேருந்துப் போக்குவரத்து அமைப்பிற்கான அடித்தளத்தை உருவாக்கியது. 1972 முதல் 1996 வரை செயல்திறனையும். வழித்தடப் பரவலை மேம்படுத்தும் நோக்கிலும் பல அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. அதனை தொடர்ந்து, ஒருங்கிணைப்பையும் நிர்வாகத் திறனையும் மேம்படுத்தும் நோக்கில், இக்கழகங்கள் மறுசீரமைக்கப்பட்டு தற்போதைய அமைப்புகளாக ஒருங்கிணைக்கப்பட்டன.

**தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்து வளர்ச்சியின் முக்கிய மைல்கற்கள்**

- **01.01.1972:** நிறுவனங்கள் சட்டம், 1956-இன் கீழ், சென்னை மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில்

பேருந்துப் போக்குவரத்து சேவைகளை மேற்கொள்ளும் வகையில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் நிறுவப்பட்டது. இது பிற அரசு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்படுவதற்கான அடித்தளமாக அமைந்தது.

- **1972–1996:** செயல்திறனையும், சேவைப் பரவலையும் மேம்படுத்தும் நோக்கில், போக்குவரத்துக் கழகங்கள் பல அமைப்புகளாக பிரிக்கப்பட்டு, 21 அரசு போக்குவரத்துக் கழகங்களாக உருவாக்கப்பட்டன.
- **1996-க்குப் பிந்தைய காலகட்டம்**: செயல் திறனை மேம்படுத்தும் நோக்கில், 21 அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, 8 அரசு போக்குவரத்துக் கழகங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

## 1.9 தற்போதைய போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு

தமிழ்நாட்டில் போக்குவரத்துத் துறையின் கீழ் பின்வரும் எட்டு மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி.

மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மாநகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் நகரப் பேருந்துச் சேவைகளை இயக்கி வருகிறது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நீண்ட தூர விரைவுப் பேருந்துச் சேவைகளையும், புதுச்சேரி, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசத்திற்கும், மாநிலங்களுக்கு இடையேயான பேருந்துச் சேவைகளை இயக்கி வருகிறது. மீதமுள்ள ஆறு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் (TNSTCs), மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், அண்டை மாநிலங்களிலும் நகரப் பேருந்து மற்றும் புறநகர் (Mofusil) பேருந்துச் சேவைகளை இயக்கி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் இணைந்து, நம் நாட்டிலேயே, அரசால் இயக்கப்படும் மிகப் பெரிய பேருந்துப் போக்குவரத்து அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்வதுடன், நகர்ப்புறங்கள், புறநகர்

பகுதிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு அத்தியாவசியமான மற்றும் சவாலான போக்குவரத்து இணைப்பை வழங்கி வருகின்றன.

## 1.10 **தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் – முக்கிய புள்ளி விவரங்கள்** (01.08.2026 **அன்றுள்ளவாறு)**

| **இனம்** | விவரங்கள் |
|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,198 பேருந்துகள் 8 அரசு போக்குவரத்து கழகங்கள் மூலம் இயக்கப்படுகிறது |
| இயக்க அமைப்பு | 19,283 திட்டமிடபட்ட பேருந்துகள் மற்றும்10,160 வழித்தடங்கள் |
| தினசரி இயக்க தூரம் | 84.75 இலட்சம் கிலோமீட்டர் |
| பயணிகளின் எண்ணிக்கை | நாள்தோறும் 2.12 கோடி பயணிகள் |
| எரிபொருள் பயன்பாடு | டீசல் / மின்சாரப் /அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு |
| பேருந்துகளின் வயது | சராசரியாக 5.52 வருடங்கள் |
| பேருந்துகளின் பயன்பாட்டு விகிதம் | 92.17 சதவீதம் |
| பயணிகளின் அடர்வு | 84.15 சதவீதம் |
| சலுகை கட்டணம் – கட்டணம் விகிதம் | 66:34 |
| தினசரி வருவாய் | ரூபாய் 47.89 கோடி |
| தினசரி செலவினம் | ரூபாய் 70.15 கோடி |
| தினசரி நிதி பற்றாக்குறை | ரூபாய் 22.26 கோடி |
| கட்டண அமைப்பு | இந்தியாவிலேயே மிகக் குறைவு; கடைசியாக 29.01.2018 அன்று கட்டணம் திருத்தியமைக்கப்பட்டது. |

தமிழ்நாடு, நாட்டிலேயே மிகவும் குறைந்த பொதுப் பேருந்துக் கட்டண அமைப்பை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. அதேவேளையில், அன்றாட வருவாய் மற்றும் செலவினங்களுக்கு இடையேயான இடைவெளி, பேருந்து இயக்கத்தை தொடர்ந்து நவீனமயமாக்குதல், செயல்திறனை மேம்படுத்துதல், வழித்தடங்களை உகந்த முறையில் மறுசீரமைத்தல், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் இலக்கு சார்ந்த நிதியுதவி (Targeted Financial Support) ஆகியவற்றின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

**1.11 போக்குவரத்துத் துறையின் நிருவாக அமைப்பு**


மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் தலைமையின் கீழ் போக்குவரத்துத் துறை பொதுப் பேருந்துப் போக்குவரத்தை நிர்வகித்து வருகிறது. அரசின் செயலாளர் இத்துறையின் நிர்வாகத் தலைவராகச் செயல்படுகிறார்; கொள்கை உருவாக்கம், ஒழுங்குமுறைப்படுத்துதல், நிர்வாகம் மற்றும்

செயல்பாட்டுக் கண்காணிப்பு ஆகியவற்றிற்குப் பொறுப்பான சிறப்புச் செயலாளர், துணைச் செயலாளர், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் அவருக்குத் துணைபுரிகின்றனர்.

எட்டு அரசு போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் பின்வரும் சார்பு நிறுவனங்கள் இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

i. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை
ii. சாலை போக்குவரத்து நிறுவனம்
iii. தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம். (முன்னர் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு)

போக்குவரத்துத் துறையின் அமைப்பு வரைபடம்:–



துறையின் செயலாளர், எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பதவிவழித் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறார். ஒவ்வொரு மாநிலப் போக்குவரத்துக் கழகம், அதனுடன் இணைந்த நிறுவனமும், தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் பிற இயக்குநர்களைக் கொண்ட இயக்குநர்கள் குழுவின் நிர்வாகத்தின் கீழ் செயல்படுகின்றன. அன்றாட செயல்பாடுகள், அக்கழங்களின் மேலாண்மை இயக்குநரின் தலைமையில், பொது மேலாளர்கள், துணை மேலாளர்கள், உதவி மேலாளர்கள், கிளை மேலாளர்கள், பணிமனை நிலைய அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களின் ஒத்துழைப்புடன், பொதுமக்களுக்கு திறன்மிக்க போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் வகையில் செயல்படுகின்றன.

மேலும், தென்னக இரயில்வேயுடன் இணைந்து இரயில்வேத் திட்டங்களை கண்காணிப்பதற்காக மாநில அரசின் ஒருங்கிணைப்பு முகமையாகவும் இத்துறை செயல்படுகிறது. இரயில்வே உட்கட்டமைப்பை

மேம்படுத்துதல், புதிய இரயில் பாதைகளை அமைத்தல், தற்போதுள்ள இரயில் பாதைகளை நீட்டித்தல் மற்றும் அகல இருப்புப் பாதைகளாக மாற்றும் பணிகளை மேற்கொள்வதன் மூலம் போக்குவரத்து இணைப்புத் திறனை மேம்படுத்துவதில் இத்துறை முக்கிய பங்காற்றி வருகிறது. இந்தப் பன்முகப் போக்குவரத்து அணுகுமுறை, தமிழ்நாடு முழுவதும் திறன்மிக்க, நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய போக்குவரத்து வலையமைப்பை உருவாக்குவதற்கான இத்துறையின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

## 2. அரசு போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு

### 2.1 அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்க பகுதிகள்

தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில், உள்ள தங்களின் கட்டுப்பாட்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில், எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பேருந்து சேவையினை வழங்கி வருகின்றன. சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் பயணிகள் போக்குவரத்து சேவைகள் பெரும்பாலும் அல்லது முழுமையாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. இதர மாவட்டங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடன் தனியார் போக்குவரத்து நிறுவனங்களும் இணைந்து பயணிகளின் தேவையினைப் பூர்த்தி செய்து வருகின்றன. ஆறு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களும், தங்களின் இயக்க சேவைப் பகுதிகளுக்குள் மாவட்டங்களுக்கிடையேயான சேவை மட்டுமல்லாது, குறிப்பிட்ட மாநிலங்களுக்கிடையேயான பேருந்து சேவைகளையும் இயக்குகின்றன மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (SETC), தமிழ்நாடு முழுவதும் நீண்ட

துார, மாவட்டங்களுக்கிடையேயான, அண்டை மாநிலங்களுக்கிடையேயான மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான பேருந்து சேவைகளை வழங்கி வருகின்றது. இந்த எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் இணைந்து, தமிழ்நாடு முழுவதிலும் மற்றும் பிற அண்டை மாநிலங்களுக்கும் பரந்த மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட பொதுப் போக்குவரத்து அமைப்பை வழங்குகின்றன.

01.07.2026-இன் வாகனப் புள்ளிவிவரங்களின்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 33,865 கட்டண நிலை பேருந்துகள் (Stage Carriages) பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 21,198 அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளாகும். இப்புள்ளி விவரம், பயணிகளுக்கு போக்குவரத்து வசதி அளிப்பதில், அரசுத் துறை தொடர்ந்து முன்னணியில் இருப்பதை காட்டுகிறது. சென்னை மாநகரைப் பொறுத்தவரை பதிவு செய்யப்பட்டுள்ள 5,364 கட்டண நிலை பேருந்துகளில் (Stage Carriages), 5,322

பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமானவையாக உள்ளன.

சேவைகளை திறம்பட வழங்கிடும் வகையில், தமிழ்நாட்டின் 38 மாவட்டங்கள், செயல்பாட்டு வரம்பின் அடிப்படையில் ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன. அதேவேளையில், தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், மாநிலம் முழுவதும் மற்றும் அண்டை மாநிலங்களின் முக்கிய இடங்களுக்கும் சேவைகளை வழங்கி வருகிறது.

| வ. எண். | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட். | சென்னை | சென்னை பெருநகரப் பகுதி (காஞ்சிபுரம் செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர்) |
| 2 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், | – | தமிழ்நாடு முழுவதும், கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் புதுச்சேரி |
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட். | விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி |
| | | வேலூர் | வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் |
| | | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு |
| | | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| | | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| | | கடலூர் | கடலூர் |

| வ. எண். | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 4. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட். | சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| | | தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 5. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட். | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| | | உதகமண்டலம் | நீலகிரி |
| | | ஈரோடு | ஈரோடு |
| | | திருப்பூர் | திருப்பூர் |
| 6. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட். | கும்பகோணம் | தஞ்சாவூர் |
| | | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை |
| | | திருச்சி | திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| | | கரூர் | கரூர் |
| | | காரைக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| | | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 7. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட். | மதுரை | மதுரை |
| | | திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| | | விருதுநகர் | விருதுநகர் |
| 8. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட். | திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் தென்காசி |
| | | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| | | நாகர்கோவில் | கன்னியாகுமரி |

## அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்க வரைபடம்:–



## 2.2 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உட்கட்டமைப்பு

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நன்கு திட்டமிடப்பட்ட அலுவலகக் கட்டடம், பணிமனைகள், பட்டறைகள் (workshops), 21,198 பேருந்துகள் மற்றும் திறமையான பணியாளர்களை உள்ளடக்கிய வலுவான உட்கட்டமைப்பை கொண்டுள்ளன. இவ்வலையமைப்பானது, தமிழ்நாடு முழுவதும் மற்றும் அண்டை மாநிலங்களுக்கும் திறன்மிக்க, நம்பகமான மற்றும் எளிதில் அணுகக்கூடிய சாலை வழிப் போக்குவரத்து சேவைகளை பயணிகளுக்கு வழங்குவதில் உறுதுணையாக உள்ளது.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | பணிமனைகள் | தொழிற்கூடம் | டயர்மறுசீரமைப்பு நிலையங்கள் | பேருந்துகளைக்கட்டும் பிரிவுகள் | தகுதிச் சான்றிதழ்மையங்கள் | ஏலமையங்கள் | ஓட்டுநர்பயிற்சிப்பள்ளிகள் | பயிற்சிமையங்கள் | பிறபிரிவுகள் | பேருந்துகள் | பயணிகள்எண்ணிக்கை (லட்சங்களில்) (2026-2027, ஜூலை2026வரை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாபோக, | 1 | 33 | 2 | 2 | 1 | 8 | 1 | 1 | 3 | 0 | 4109 | 411526 |
| அவிபோக, | 1 | 21 | 2 | 1 | 0 | 5 | 1 | 1 | 4 | 0 | 1080 | 83.78 |
| விழுப்புரம் | 6 | 58 | 3 | 4 | 3 | 9 | 3 | 6 | 6 | 1 | 3443 | 3884.78 |
| சேலம் | 2 | 32 | 2 | 1 | 2 | 3 | 2 | 4 | 4 | 0 | 2105 | 2660.12 |
| கோயம்புத்தூர் | 4 | 44 | 2 | 2 | 3 | 5 | 2 | 2 | 4 | 1 | 2787 | 3563.36 |
| கும்பகோணம் | 6 | 59 | 4 | 3 | 3 | 6 | 4 | 8 | 6 | 1 | 3551 | 5203.73 |
| மதுரை | 3 | 40 | 3 | 3 | 3 | 5 | 2 | 4 | 4 | 4 | 2381 | 3448.11 |
| திருநெல்வேலி | 3 | 30 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 1742 | 2854.22 |
| **மொத்தம்** | **26** | **317** | **20** | **18** | **17** | **43** | **17** | **28** | **33** | **9** | **21,198** | **25,813.36** |

## 2.3 பேருந்து இயக்கங்கள்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் மொத்தம் 21,198 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து சேவைகள், சமவெளிப் பகுதிகள் மற்றும் மலைப்பாதைப் பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்கள் முழுவதிலும் இயக்கப்படுகின்றன இயக்கப்படும் தூரம் மற்றும் சேவையின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நகரம்/நகரப் பகுதிகள், புறநகர் மற்றும் மலைப்பாதை சேவைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. மேலும், பயணிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் கட்டண அடிப்படையிலும் அவை பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

01.08.2026 அன்றுள்ளவாறு, பல்வேறு வகையான பேருந்து சேவைகளின் விவரங்கள் கீழ்யுள்ள அட்டவணையில் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.

| நகர் பேருந்து | புறநகர் பேருந்து | மலைப் பகுதி |
|---|---|---|
| சாதாரண, விரைவு, வரையறுக்கப்பட்ட முக்கிய நிறுத்தங்களை கொண்ட பேருந்து, சொகுசு மற்றும் குளிர்சாதனப்பேருந்து | சாதாரண, விரைவு – சொகுசு, விரைவு– நவீன சொகுசு, அதிநவீன சொகுசு, குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை), குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன்,குளிர்சாதன இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன வால்வோ (Multi-Axle) | சாதாரண மற்றும் விரைவு – சொகுசு பேருந்துகள் மற்றும் குளிர்சாதனப் பேருந்து |

இச்சேவைகள் மூலம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு தரப்பினரின் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திறன்மிக்க, நம்பகமான மற்றும் தரமான பேருந்து போக்குவரத்து சேவைகளை வழங்கி வருகின்றன.

01.08.2026 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பல்வேறு வகையான பேருந்து சேவைகளின் விவரங்கள் கீழ்கண்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது. இது நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நகர் | | புறநகர் | மலைப் பகுதி | | வரையறுக்கப்பட்ட சேவைகள் | மாற்றுப் பேருந்துகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண கட்டணமில்லா பேருந்து | குறிப்பிட்ட நிறுத்தங்கள் / விரைவு / சொகுசு | | சாதாரணக் கட்டணப் பேருந்து (40 கி.மீ.க்கு உட்பட்டது) கட்டணமில்லா பயணத் திட்டம் | சாதாரணக் கட்டணப் பேருந்து (40 கி.மீ.க்கு மேற்பட்டது விரைவுப் பேருந்து மலைகள் பேருந்து குளிர்சாதனப் பேருந்து | | | |
| மா.போ.க., | 1724 | 2134 | 0 | 0 | 0 | 3858 | 251 | 4109 |
| அ.வி.போ.க., | 0 | 0 | 1000 | 0 | 0 | 1000 | 80 | 1080 |
| விழுப்புரம் | 1036 | 31 | 1955 | 13 | 16 | 3051 | 392 | 3443 |
| சேலம் | 812 | 25 | 1034 | 29 | 0 | 1900 | 205 | 2105 |
| கோயம்புத்தூர் | 1006 | 165 | 1029 | 124 | 235 | 2559 | 228 | 2787 |
| கும்கோணம் | 1280 | 0 | 1901 | 5 | 0 | 3186 | 365 | 3551 |
| மதுரை | 936 | 285 | 837 | 2 | 62 | 2122 | 259 | 2381 |
| திருநெல்வேலி | 743 | 70 | 794 | 0 | 0 | 1607 | 135 | 1742 |
| **மொத்தம்** | 7537 | 2710 | 8550 | 173 | 313 | 19283 | 1915 | 21198 |


## 2.4 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்

2026–2027 ஆம் நிதியாண்டில் (தணிக்கைக்கு உட்படுத்தப்படாதது), அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 2.12 கோடி பயணிகளுக்கு சேவையினை வழங்கி வருகின்றன. இது 2016–17-ஆம் நிதியாண்டிலிருந்து ஒப்பிடும் போது, அதிகபட்ச எண்ணிக்கையாகும். செயல்பாடு மற்றும் நிதி சார்ந்த சவால்கள் நிலவியபோதிலும், போக்குவரத்து சேவை மற்றும் பயணிகளுக்கான வசதியை மேம்படுத்துதல் போன்ற இலக்கினை நோக்கி அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் விளைவாக, பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்த வண்ணம் உள்ளது.

இந்தப் பயணிகள் எண்ணிக்கையின் தொடர்ச்சியான உயர்வை கீழேயுள்ள அட்டவனை விளக்குகிறது:

| ஆண்டு | நாளொன்றில் பயணித்த பயணிகள் (லட்சங்களில்) |
|---|---|
| 2016-17 | 172.94 |
| 2017-18 | 168.13 |
| 2018-19 | 142.44 |
| 2019-20 | 131.42 |
| 2020-21 | 73.64 |
| 2021-22 | 121.11 |
| 2022-23 | 170.00 |
| 2023-24 | 176.34 |
| 2024-25 | 185.00 |
| 2025-26 | 205.41 |
| 2026-27 (ஜூலை 2026 வரை) | 211.58 |




இத்துறையின் நோக்கமானது நடப்பு ஆண்டில் ஆக்கப்பூர்வமான கொள்கைகளின் மூலம் இவ்வெண்ணிக்கையினை அதிகரிப்பதாகும்.

இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் கட்டண நிலை பேருந்துகளுக்கான (Stage Carriage) கட்டண விகிதம் தொடர்ந்து மிகவும் குறைந்த ஒன்றாக இருந்து வருகிறது.

அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் நகர / புறநகர் பேருந்துகளில் பயணத்திற்கான கட்டணம் தொடர்ந்து மிகவும் குறைவானதாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| மாநிலம் | முதல் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் | சொகுசுப் பேருந்து கட்டணம் | குளிர்சாதனப் பேருந்து கட்டணம் |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 2 கீ.மீ உள்ளே | 5 | 7 | 11 | 15 |
| புதுச்சேரி | 2 கீ.மீ வரை | 7 | – | 13 | 13 |
| கேரளா | 2.5 கீ.மீ | 10 | 12 | – | 26 |
| ஆந்திரப் பிரதேசம் | 2 கீ.மீ | 10 | 10 | – | – |
| தெலங்கானா | 2 கீ.மீ உள்ளே | 10 | 10 | 15 | – |
| கர்நாடகா (BMTC) | 2 கீ.மீ | 6 | – | – | 10 |

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் கர்நாடகா ஆகியவற்றில் நடைமுறையில் உள்ள பயணக் கட்டணங்களின் ஓர் ஒப்பீடு கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| மாநிலம் | கடைசியாக கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட நாள் | புறநகர் பேருந்துகள் (ஒரு கிலோ மீட்டருக்கு பைசாவில்) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாதாரண | விரைவு பேருந்து | சொகுசு | நவீன சொகுசு பேருந்து | அதிநவீன சொகுசு | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை) | | வோல்வோ பேருந்துகள் | அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் (குளிர்சாதனமில்லாதது) | | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | |
| | | | | | | | வேலை நேரம் | இதர நேரம் | | வேலை நேரம் | இதர நேரம் | வேலை நேரம் | இதர நேரம் |
| தமிழ்நாடு | 29.01.2018 | 58 | - | 75 | 85 | 100 | 130 | 110 | 170 | 155 | 135 | 200 | 180 |
| புதுச்சேரி | 17.12.2024 | 75 | 98 | - | - | 130 | 195 | 195 | 221 | - | - | - | - |
| கேரளா | 01.05.2022 | 100 | 105 | 108 | 110 | 120 | 150 | 150 | 181 | - | - | 250 | 250 |
| ஆந்திரப் பிரதேசம் | 01.07.2022 | 102 | 125 | - | - | 162 | 196 | 196 | 249 | 230 | 230 | 303 | 303 |
| தெலுங்கானா | 17.03.2022 | 83 | 107 | - | 118 | 136 | 166 | 166 | 202 | 202 | - | 273 | 273 |
| கர்நாடகா | 05.01.2025 | 76 | 116 | - | - | 168 | 248 | 248 | 248 | 189 | 189 | 275 | 275 |

## 2.5 இயக்கச் செயல்பாட்டுத் திறன் குறியீடுகள்

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் ஜூலை 2026 மாதம் வரையிலான முக்கிய செயல்திறன் குறியீடுகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண். | விவரம் | மா.போ.க., | அ.வி.போ.க., | விழுப்புரம் | சேலம் | கோயம்புத்தூர் | கும்பகோணம் | மதுரை | திருநெல்வேலி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நகர் | 3858 | 0 | 1067 | 837 | 1171 | 1280 | 1221 | 813 | 10247 |
| 2 | புறநகர் | 0 | 0 | 1955 | 1034 | 1029 | 1901 | 837 | 794 | 7550 |
| 3 | மலைப்பகுதி | 0 | 0 | 29 | 29 | 359 | 5 | 64 | 0 | 486 |
| 4 | விரைவு | 0 | 1000 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1000 |
| 5 | வரையறுக்கப்பட்டபேருந்துசேவைகள் | 3858 | 1000 | 3051 | 1900 | 2559 | 3186 | 2122 | 1607 | 19283 |
| 6 | மாற்றுப்பேருந்துகள் | 251 | 80 | 392 | 205 | 228 | 365 | 259 | 135 | 1915 |
| 7 | மொத்தபேருந்துகள் | 4109 | 1080 | 3443 | 2105 | 2787 | 3551 | 2381 | 1742 | 21198 |
| 8 | பேருந்துசெயல்படுத்தப்பட்டவேண்டிய (இலட்சம்கி.மீ) | 1188.01 | 680.18 | 1862.31 | 1126.24 | 1347.66 | 1837.53 | 1162.43 | 851.57 | 10055.94 |
| 9 | பேருந்துசெயல்படுத்தப்பட்ட(இலட்சம் கி.மீ) | 1059.72 | 699.48 | 2059.17 | 1172.01 | 1384.01 | 1965.41 | 1148.59 | 850.87 | 10339.06 |
| 10 | ஒரு நாள் இயக்கப்படும்மொத்ததூரம் (இலட்சம்கி.மீ) | 252 | 624 | 521 | 484 | 418 | 479 | 422 | 439 | 435 |
| 11 | பேருந்துகளின்பயன்பாடு(%) | 84.30 | 85.06 | 98.22 | 95.69 | 96.29 | 95.13 | 89.23 | 90.93 | 92.17 |
| 12 | கிலோ மீட்டர் செயல்திறன்(%) | 89.20 | 102.84 | 110.57 | 104.06 | 102.70 | 106.96 | 98.81 | 99.89 | 102.82 |
| 13 | இருக்கைகள்நிரப்பு (%) | 67.72 | 78.74 | 85.79 | 82.96 | 88.59 | 87.92 | 94.25 | 87.19 | 84.15 |
| 14 | எரிபொருள் செயல்திறன்(கி.மீ/லிட்டர்) | 3.77 | 4.84 | 5.42 | 5.30 | 4.81 | 5.45 | 4.92 | 4.84 | 4.99 |
| 15 | உருளிப்பட்டையின்ஆயுட்காலம்(இலட்சம் கி.மீ) | 2.73 | 2.72 | 3.21 | 3.47 | 3.04 | 3.45 | 3.08 | 3.12 | 3.11 |
| 16 | நாளொன்றுக்குபயணிக்கும்பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 33.73 | 0.69 | 31.84 | 21.80 | 29.21 | 42.65 | 28.26 | 23.40 | 211.58 |
| 17 | நாளொன்றுக்குஒரு பேருந்தில்பயணிக்கும் பயணிகளின்எண்ணிக்கை | 874 | 69 | 1044 | 1148 | 1141 | 1339 | 1332 | 1456 | 1097 |
| 18 | பணியாளர்களின்எண்ணிக்கை | 17896 | 4349 | 16826 | 10531 | 13746 | 17342 | 12157 | 8607 | 101454 |

## 2.6 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிச் செயல்திறன்

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நம்பகமான மற்றும் உயர்தரமான பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்கி வருகின்றன. கிராமப்புற மற்றும் மலைப்பகுதிகள் உள்ளிட்ட மிகவும் தொலைதூரப் பகுதிகளுக்கும், போக்குவரத்து இணைப்பு தேவைப்படும், பொருளாதார ரீதியாக லாபகரமற்ற வழித்தடங்கள் மற்றும் கடினமான நிலப்பரப்புகளுக்கும் இவற்றின் சேவைகள் சென்றடைகின்றன. நம்பகமான, குறைந்த கட்டணத்திலான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இந்திய அளவில் பொதுப் போக்குவரத்துத் துறையில் சிறந்த முன்னுதாரணமாகவும் திகழ்கின்றன. இருப்பினும், தொடர்ந்து அதிகரித்து வரும் எரிபொருள் விலை,

பணியாளர்களுக்கான ஊதியச் செலவுகள் மற்றும் கடன்களுக்கான வட்டி ஆகியவை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கணிசமான நிதிச் சுமையை ஏற்படுத்தி, அவற்றின் ஒட்டுமொத்த நிதி நிலைத்தன்மையினை பாதித்துள்ளன. நிதியிழப்பில் இயங்கி வரும்போதிலும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் போக்குவரத்து வசதி கிடைப்பதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அரசு போக்குவரத்துக் கழகங்களும் தொடர்ந்து சேவைகளை வழங்கி வருகின்றன.

2025–26-ஆம் நிதியாண்டில் (தணிக்கைக்கு உட்படாதது), அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒட்டுமொத்தமாக மாதமொன்றிற்கு ரூ.393.76 கோடிக்கும் அதிகமான இழப்பினைச் சந்தித்து வருகின்றன. மேலும், 15-வது ஊதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாகவும், 2025–26 ஆம் ஆண்டில் அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டதன் காரணமாகவும், போக்குவரத்துக்

கழகங்களின் தொடர் செலவினங்கள் மேலும் அதிகரித்துள்ளன.

மேலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பின் பேருந்துக் கட்டணம் இதுவரை திருத்தியமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது, போக்குவரத்துத் துறை இலாப நோக்கமின்றி மக்களுக்கு சேவை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருப்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து சேவையற்றி வருகின்றன.

2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதிச் செயல்திறன் கீழே வழங்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2021-22 (கொரோனா காலம்) | 2022-23 | 2023-24 | 2024-25 | 2025-26 (தணிக்கைக்கு முன்) |
|---|---|---|---|---|---|
| இயக்க வருவாய் | 5,534.90 | 7,386.04 | 7,423.89 | 7469.62 | 7646.61 |
| மகளிர்கட்டணமில்லாபயணம் | 1,216.83 | 2,512.38 | 2,804.21 | 3224.22 | 3917.58 |
| உயர்வேக டீசல் எண்ணெய் மானியம் | 1014.63 | 1783.85 | 1728.27 | 1794.45 | 1695.87 |
| மாணவர்கள் பேருந்து கட்டணச் சலுகை | 1,289.07 | 1429.88 | 1460.69 | 1662.19 | 3202.28 |
| இயக்கம் அல்லாத ஏனைய வருவாய் | 567.53 | 654.62 | 158.88 | 492.15 | 116.25 |
| வரவுக்கும் செலவுக்கும் உண்டான வித்தியாசத் தொகை | - | - | - | - | 2323.63 |
| இதர வருவாய் (கழிவு பொருட்கள் விற்பனை, பழைய பேருந்து விற்பனை மற்றும் ஒப்பந்த பேருந்துகளின் மூலம் கிடைக்கும் வருவாய்) | 74.27 | 68.51 | 155.83 | 212.38 | 205.06 |
| **மொத்த வருவாய்** | **9,697.23** | **13,835.28** | **13,731.72** | **14855.01** | **19107.28** |
| உயர்வேக டீசல் எண்ணெய் | 3865.14 | 5252.11 | 5294.50 | 5460.50 | 5598.06 |
| இதர செலவுகள் (மசகு எண்ணெய், உருளிப்பட்டை உதிரிபாகங்கள் உட்பட) | 277.02 | 416.45 | 394.16 | 429.38 | 594.90 |
| சம்பளம் & தினக் கூலி (வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை மற்றும் இதர செலவுகள்) | 8,987.92 | 10,858.23 | 10868.70 | 11974.28 | 12558.56 |
| மோட்டார் வாகன வரிகள் | 162.42 | 185.44 | 199.35 | 221.58 | 222.95 |
| தேய்மானம் | 384.09 | 229.36 | 172.55 | 535.89 | 1041.83 |
| வட்டி | 1818.14 | 2255.49 | 2316.58 | 2534.76 | 3122.50 |
| இதர செலவுகள் (வருங்கால வைப்பு நிதி இழப்பு சுங்க வரி, விபத்து இழப்பீடு) | 824.71 | 716.09 | 866.76 | 872.41 | 696.58 |
| மொத்த செலவுகள் | 16,319.44 | 19,913.17 | 20112.60 | 21848.80 | 23832.38 |
| நட்டம் | 6622.21 | 6077.89 | 6380.83 | 6993.79 | 4725.10 |
| சராசரி மாத நட்டம் | 551.85 | 506.49 | 531.74 | 582.82 | 393.76 |

2026-27 நிதியாண்டில் (ஜூலை 2026 வரை), தமிழ்நாட்டிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தினசரி நிதிச் செயல்திறன் குறியீடுகள் **(ரூபாய் கோடியில் / நாள்)** கீழே வழங்கப்பட்டுள்ளன:–


**(ஒரு நாளுக்கான ரூபாய் கோடிகளில்)**


| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மா.போ.க., | அ.வி.போ.க., | விழுப்புரம் | சேலம் | கோயம்புத்தூர் | கும்பகோணம் | மதுரை | திருநெல்வேலி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இயக்கவருவாய் | 2.28 | 2.35 | 4.34 | 2.33 | 2.63 | 3.7 | 2.14 | 1.58 | 21.35 |
| இதர வருவாய் | 4.32 | 0.46 | 4.01 | 3.08 | 3.67 | 4.97 | 3.29 | 2.74 | 26.54 |
| மொத்தம் | 6.6 | 2.82 | 8.35 | 5.41 | 6.3 | 8.67 | 5.43 | 4.32 | 47.89 |
| பராமரிப்புச் செலவுகள் | | | | | | | | | |
| உயர்வேக டீசல் எண்ணெய் | 1.89 | 1.11 | 3 | 1.77 | 2.3 | 2.87 | 1.86 | 1.37 | 16.17 |
| மசகு எண்ணெய், | 0.03 | 0 | 0.04 | 0.02 | 0.02 | 0.04 | 0.03 | 0.02 | 0.2 |
| உருளிப்பட்டை மற்றும் குழாய் | 0.03 | 0.03 | 0.04 | 0.02 | 0.03 | 0.04 | 0.03 | 0.01 | 0.23 |
| மறுபதனிடும் பொருட்கள் | 0.02 | 0.01 | 0.02 | 0.02 | 0.04 | 0.04 | 0.02 | 0.02 | 0.19 |
| உருளி | 0 | 0 | 0 | 0 | 0.01 | 0 | 0 | 0 | 0.01 |
| மொத்தம் உதிரிப் பாகங்கள் | 0.06 | 0.04 | 0.06 | 0.04 | 0.05 | 0.08 | 0.02 | 0.03 | 0.38 |
| பழுதுபார்த்தல் | 0.01 | 0 | 0.03 | 0 | 0.02 | 0.03 | 0.01 | 0.01 | 0.11 |
| தொழிலாளர் | 1.13 | 0.01 | 0.01 | 0.03 | 0.01 | 0.02 | 0.01 | 0.01 | 1.23 |
| மொத்தம் | 3.17 | 1.2 | 3.2 | 1.9 | 2.48 | 3.12 | 1.98 | 1.47 | 18.52 |
| நிலையான செலவுகள் | | | | | | | | | |
| சம்பளம் | 6.08 | 1.69 | 6.25 | 3.89 | 5.09 | 6.09 | 4.28 | 3.35 | 36.72 |
| வரி | 0.03 | 0.03 | 0.13 | 0.07 | 0.08 | 0.12 | 0.07 | 0.06 | 0.59 |
| தேய்மானம் | 0.72 | 0.19 | 0.59 | 0.21 | 0.33 | 0.43 | 0.4 | 0.25 | 3.12 |
| வட்டி | 1.19 | 0.76 | 1.22 | 0.92 | 1.57 | 1.35 | 1.15 | 1.16 | 9.32 |
| இதர செலவுகள் | 0.3 | 0.31 | 0.26 | 0.17 | 0.16 | 0.45 | 0.12 | 0.11 | 1.88 |
| மொத்தம் | 8.32 | 2.98 | 8.45 | 5.26 | 7.22 | 8.45 | 6.02 | 4.93 | 51.63 |
| மொத்தம் செலவுகள் | 11.49 | 4.18 | 11.65 | 7.15 | 9.7 | 11.56 | 8 | 6.4 | 70.15 |
| வரவு / செலவு | -4.89 | -1.36 | -3.3 | -1.75 | -3.41 | -2.89 | -2.57 | -2.08 | -22.26 |
| வருவாய் அதிகரித்தல் | -4.17 | -1.17 | -2.7 | -1.54 | -3.08 | -2.46 | -2.17 | -1.83 | -19.14 |
| பேருந்து செயல்படுத்தப்பட்ட | 0.09 | 0.06 | 0.17 | 0.1 | 0.11 | 0.16 | 0.09 | 0.07 | 0.85 |

## 2.7 செயல்பாட்டு செலவினத்தின் முக்கிய காரணிகள்:–

2026-27-ஆம் நிதியாண்டில் (ஜூலை வரை), அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு செலவினங்களின் கூறுகள், அதிவேக டீசல் விலையேற்றம் மற்றும் கடன்களுக்கான வட்டி ஆகியவை செயல்பாட்டுச் செலவினத்தின் முக்கிய காரணிகளாக உள்ளன.

2021 முதல் 2026 வரையிலான ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரங்கள் சதவீதத்தில் பின்வருமாறு:–






2022-23-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2025-26-ஆம் நிதியாண்டில் (பிப்ரவரி வரை) ஊதியம், தொழிலாளர் வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் எரிபொருள் செலவு போன்ற நிருவாகச் செலவுகள் மாறாமல் உள்ளன. இருப்பினும், கொரோனா பெருந்தொற்றின் விளைவாக ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையினால், குறிப்பாக ஊதியம் மற்றும் ஓய்வூதியங்களை வழங்குவதற்காக வாங்கிய கடன்களுக்கான வட்டியுடன் கூடிய செலவினம் சிறிது அதிகரித்துள்ளது.

## 2.8 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் (TNTDFC) வழங்கும் நிதி உதவி

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் என்பது தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனமாகும். பொதுமக்கள், அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வைப்புத் தொகையை திரட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும். வைப்பீட்டு தொகைக்கான வட்டியினை வழங்குவதற்கும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை நிலை நிறுத்துவதற்கும் இந்த வைப்புத்தொகைகள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனாக வழங்கப்படுகின்றன. இதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்பாட்டு மூலதனத்திற்கு நியாயமான வட்டி விகிதத்தில் எளிதாகக் கடன் பெற முடிகிறது.

2023-ஆம் ஆண்டு வரை போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இந்நிறுவனம் செயல்பட்டு வந்தது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் நிர்வாக

செயல்பாட்டினை மேம்படுத்திட 2023-ஆம் ஆண்டு நிதித் துறையின் கீழ் இந்நிறுவனம் கொண்டு வரப்பட்டது. இருப்பினும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு இந்நிறுவனம் தொடர்ந்து கடன் உதவி வழங்கி வருகிறது

**2.8.1 நிலுவையிலுள்ள கடன்கள்**

ஜுலை 2026 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மொத்தக் கடன்கள் ரூபாய் 22,888.81 கோடியாகும். அதன் விவரம் பின்வருமாறு:–

(**ரூபாய் கோடியில்**)

| விவரம் | தொகை |
|---|---|
| வாகன கொள்முதல் கடன் | 421.27 |
| குறுகிய கால கடன் | 25.56 |
| நடைமுறை மூலதனத்திற்காக பருவக் கடன் | 15,953.85 |
| அரசு உத்தரவாத கடன் | 5,303.09 |
| நடைமுறை மூலதனத்திற்காக **ஓய்வுக்காலப் பணப்பலன்கள் வழங்குவதற்காக பெறப்பட்ட** பணப் பலன்களுக்கான கடன் | 894.12 |
| விபத்து இழப்பீடு செலுத்துவதற்காக பெறப்பட்ட பருவக் கடன் | 290.92 |
| **மொத்தம்** | **22,888.81** |

**2.8.2 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த பத்து ஆண்டுகளாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ள கடனுதவி விவரம்:–**

**(ரூபாய் கோடியில்)**

| **ஆண்டு** | **நிதியுதவி** |
|---|---|
| 2014-2015 | 2151.24 |
| 2015-2016 | 2776.33 |
| 2016-2017 | 3574.32 |
| 2017-2018 | 3757.58 |
| 2018-2019 | 3445.75 |
| 2019-2020 | 6190.11 |
| 2020-2021 | 7725.25 |
| 2021-2022 | 10786.33 |
| 2022-2023 | 12573.33 |
| 2023-2024 | 14264.12 |
| 2024-2025 | 14566.04 |
| 2025-2026 | 16681.83 |
| 2026-2027 (ஜூலை 2026 வரை) | 3780.53 |
| மொத்தம் | 1,02,272.76 |

2021–22-ஆம் ஆண்டில் கடன் அளவு அதிகரித்ததற்கு முக்கிய காரணம், கொரோனா பெருந்தொற்றினால் கழகங்களுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியாகும். குறிப்பாக, பேருந்துகள் இயக்கப்படாதது, பின்பு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயக்கப்பட்டதன் காரணமாகவும், அதன் விளைவாக வருவாய் குறைந்ததன் காரணமாகவும் கடன் அளவு அதிகரித்தது.

### 2.8.3 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் – கடன்களுக்கான வட்டி வீதம்:–

| விவரம் | வட்டி வீதம் | நாளன்றுள்ளவாறு |
|---|---|---|
| தவணைக் கொள்முதல் கடன் | 6.90% | 01.04.2021 |
| நீண்ட கால கடன் | 7.60% | 01.04.2024 |
| ஓய்வூதியப் பணப் பலன்களுக்கான கடன் | 7.50% | 01.08.2025 |
| மோட்டார் வாகன இழப்பீடு அசல் மனு கடன் | 6.55% | 01.03.2026 |

வங்கிக் கடன்களை, எவ்வித கூடுதல் கட்டணமின்றி, அதே விகிதத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்குகிறது.

## 2.9 அரசின் நிதியுதவி

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, கடன்கள், வழிவகை முன்பணம் மற்றும் மானியத்தின் மூலம் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிதியுதவிகள் புதிய பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கும், ஓய்வூதிய நிலுவைத் தொகைகள் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீடுகள் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. கூடுதலாக, பெண்கள், மாணவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் இதர சலுகை கட்டணதாரர்களுக்கு கட்டணமில்லா பயணச் சலுகை வழங்குவதால் ஏற்படும் நிதி இழப்பினை அரசு ஈடு செய்கிறது.

மேலும், அதிவேக டீசலின் விலை உயர்வை ஈடுகட்ட போக்குவரத்து கழகங்களுக்கு கூடுதல் நிதியுதவியினை அரசு வழங்கி வருகிறது.

அரசு 2025-26 மற்றும் 2026-27-ஆம் நிதியாண்டில், வரவு செலவு ஒதுக்கீட்டில் கீழ்க்காணும் இனங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது:–

**(ரூபாய் கோடியில்)**

| வ எண். | பொருள் | வரவுசெலவு திட்டமதிப்பீடு 2025-2026 | திருத்திய வரவுசெலவு திட்டமதிப்பீடு 2025-2026 | இடைகால வரவுசெலவு திட்டமதிப்பீடு 2026-2027 | திருத்திய வரவுசெலவு திட்டமதிப்பீடு 2026-2027 |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன நிதியுதவி | 1031.21 | 1675.71 | 1005.00 | 1005.00 |
| 2. | மாணவர்களுக்கு பேருந்துக் கட்டணச் சலுகைக்காக ஏற்படும் சமுதாயச் செலவை ஈடுசெய்தல் | 1782.00 | 1782.00 | 1782.00 | 1782.00 |
| 3. | மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணச்சீட்டு வழங்கியதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்தல் | 3600.00 | 3599.00 | 3999.00 | 3999.00 |
| 4. | அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான செயல்திறனுடன் இணைந்த முதலீட்டு ஊக்குவிப்பு | 2000.00 | 2000.00 | 2000.00 | 2000.00 |
| 5. | பங்கு மூதலீட்டு நிதியுதவி (KfW) | 540.00 | 167.00 | 440.81 | 440.81 |
| 6. | அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கடன் (KfW) வழங்குதல் | 830.00 | 100.00 | 940.73 | 940.73 |
| 7. | மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டு வழங்குவதால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்தல் | 38.00 | 26.00 | 26.00 | 26.00 |
| 8. | அதிவேக டீசல் எண்ணெய் விலையேற்றம் / மேல்வரி விதிப்பு காரணமாக ஏற்படும் விலை வித்தியாசத் தொகையை திரும்ப வழங்குதல் | 1857.00 | 1857.00 | 1857.00 | 1857.00 |
| 9. | உலகவங்கி / ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உதவியுடன் சென்னை நகர சுவட்டாண்மை பேருந்து சேவை வழங்கலுக்கான செயல்திறன் அடிப்படையிலான ஒப்பந்தத்தை செயல்படுத்துதல். | 646.00 | 468.00 | 650.00 | 650.00 |
| 10. | உலகவங்கி / ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உதவியுடன் சென்னை நகர சுவட்டாண்மை திட்டத்தின்கீழ் நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்துதல். | 500.00 | 417.30 | 181.47 | 181.47 |

| வ எண். | பொருள் | வரவுசெலவு திட்டமதிப்பீடு 2025-2026 | திருத்திய வரவுசெலவு திட்டமதிப்பீடு 2025-2026 | இடைகால வரவுசெலவு திட்டமதிப்பீடு 2026-2027 | திருத்திய வரவுசெலவு திட்டமதிப்பீடு 2026-2027 |
|---|---|---|---|---|---|
| 11. | வித்து இழப்பீட்டுத்தொகை | 30.00 | 30.00 | 30.00 | 30.00 |
| 12. | மின்சாரப் பேருந்துகளுக்கான பணிமனைகள் அமைத்தல் | - | - | - | 500.00 |
| 13. | இதரநிதியுதவிகள் | 19.35 | 2374.75 | 61.59 | 61.32 |
| **மொத்தம்** | | **12873.56** | **14496.76** | **12973.60** | **13473.33** |

## 2.10 சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

### i) வழித்தடம் நீட்டித்தல் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடத்தில் மீண்டும் இயக்கம்

புதிதாக வளர்ச்சியடைந்த மற்றும் பேருந்து சேவையில்லாத பகுதிகளில் வசிப்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்துதல், தற்போதுள்ள வழித்தடங்களை நீட்டித்தல் மற்றும் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் சேவைகளைத் தொடங்குதல் ஆகிய நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாண்புமிகு

முதலமைச்சரின் தனிப்பிரிவு வாயிலாக பெறப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள், சம்பந்தப்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் பரிசீலிக்கப்பட்டன. பயணிகளின் தேவைகள், சாலை நிலை, செயல்பாட்டு சாத்தியக்கூறுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பொருத்தமான பேருந்துச் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதனடிப்படையில், 10.05.2026 முதல் 31.07.2026 வரையிலான காலகட்டத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால்:–

- 9 புதிய வழித்தடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன;
- 96 தற்போதுள்ள வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன;
- முன்பு நிறுத்தப்பட்டிருந்த 8 வழித்தடங்களில் பேருந்துச் சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன; &
- பள்ளி மாணவர்களுக்காக 67 சிறப்பு பேருந்துச் சேவைகள் (134 இயக்கங்கள் Trips) இயக்கப்பட்டு வருகின்றது.

மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவும், பள்ளியிலிருந்து வீடு திரும்பவும், காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் பாதுகாப்பாகவும், உரிய நேரத்திலும் பயணம் மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில், பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு பேருந்துப் பயணங்கள் இயக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்தியதுடன், கல்வி நிறுவனங்களை எளிதில் அணுகும் வசதியையும் மேம்படுத்தியுள்ளன.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் | வழித் தடங்கள் | பள்ளி மாணவர்களுக்கான பேருந்து சேவைகள் |
|---|---|---|---|---|
| மா.போ.க., சென்னை | 0 | 0 | 0 | 67 |
| அ.வி.போ.க., சென்னை | 0 | 0 | 0 | 0 |
| விழுப்புரம் | 7 | 17 | 4 | 0 |
| சேலம் | 0 | 27 | 0 | 0 |
| கோயம்புத்தூர் | 0 | 14 | 1 | 0 |
| கும்பகோணம் | 2 | 21 | 3 | 0 |
| மதுரை | 0 | 5 | 0 | 0 |
| திருநெல்வேலி | 0 | 12 | 0 | 0 |
| **மொத்தம்** | **9** | **96** | **8** | **67** |

**ii) போக்குவரத்து வசதியில்லாத கடைக்கோடி பகுதிகளுக்கு போக்குவரத்து வசதி**

குறுகிய சாலைகளில் வழக்கமான பேருந்துகள் இயக்குவது சிரமமாக உள்ளதால், சென்னையிலுள்ள பல்வேறு கடைக்கோடி பகுதிகளிலிருந்து பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை அடைவதற்கு சிற்றுந்துகளின் இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் 146 சிற்றுந்துகளை இயக்குகிறது. இவற்றில், நகரத்தின் உட்பகுதிகளை மெட்ரோ இரயில் நிலையத்துடன் இணைக்கும் விதமாக 56 சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. 56 சிற்றுந்துகளில், 22 சிற்றுந்துகள் மெட்ரோ இரயில் நிலையங்களுக்கிடையேயான இணைப்பிற்கு மட்டுமே இயக்கப்படுகின்றன. சிற்றுந்துகளை சிறந்த முறையில் பயன்படுத்த, மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இம்முயற்சியினால், மெட்ரோ இரயிலில் பயணம் செய்யும்

பயணிகளின் எண்ணிக்கை உயர்வதோடு மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கான வருவாயும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.11 கட்டணச் சலுகைகள்

அனைவரையும் உள்ளடக்கிய இயக்கத்தை ஊக்குவிப்பதற்காக, சில பிரிவினருக்கு குறைந்த கட்டணத்தில் அல்லது கட்டணமின்றி பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வருமான அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதே இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும். மாணவர்கள், சுகாதார தேவைக்காக மருத்துவமனைக்கு செல்பவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் விருதுகள் பெற்றவர்களுக்கு இச்சலுகைகள் பயன்படுகின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள கட்டணச் சலுகைத் திட்டங்கள் பின்வருமாறு:–

### i) பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள்

பொது போக்குவரத்து கட்டணச் சலுகைகள், சில குறிப்பிட்ட பிரிவினருக்கு வழங்கப்படுகின்றன.

நடைமுறையில் உள்ள சலுகை திட்டங்கள் பின்வருமாறு:–

**கட்டணமில்லா திட்டங்கள்**:

- நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள். (பயனாளிகள்– 185)
- பெண் பயணிகள், (பயனாளிகள்– 71.70 லட்சம் நாள் ஒன்றுக்கு) மூன்றாம் பாலினர், (பயனாளிகள்– 2,662 நாள் ஒன்றுக்கு) 40% மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர். (பயனாளிகள்– 49,462 நாள் ஒன்றுக்கு)
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள். (பயனாளிகள்– 3,047)
- மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், விதவைகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்கள், (பயனாளிகள்– 235) அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள் (பயனாளிகள்–754) / கலைமாமணி விருது பெற்றவர்கள் (பயனாளிகள்–81) / சுயஉதவி குழு

உறுப்பினர்கள் பேருந்துகளில் பொருட்களை எடுத்துச் செல்ல கட்டணச் சலுகை. (பயனாளிகள்– 5,722 ஒரு மாதத்திற்கு)

- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள் (பயனாளிகள்– 3,331)
- காவல் ஆய்வாளர் பதவி வரையிலான காவல் துறையினர் தங்கள் மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பணி நிமித்தமாக பேருந்துகளில் பயணிக்கலாம். (பயனாளிகள்– 1,09,759)
- மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (60 வயதிற்கு மேற்பட்டோர்) – குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும். (பயனாளிகள்– 3.93 லட்சம்)

**சலுகைக் கட்டண திட்டங்கள்:**

- புற்றுநோயாளிகள் (பயனாளிகள் – 5,643)
- நாடகக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் கருவிகள் (பயனாளிகள் – 10,064)

**ii) மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்**

தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்கவும், இளைஞர்கள் கல்வி வாய்ப்புகளை எளிதில் பெற்றிடவும் வழங்கவும், அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், சிறந்த வேலை வாய்ப்புகள்

மற்றும் பொருளாதார நிலைத்தன்மை பெறுவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் பயணிக்க கீழ்க்கண்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பயணச் சலுகைகளை அரசு வழங்கி வருகிறது. (அரசு விரைவு போக்குவரத்து கழகம் தவிர):–

- அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் (1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை).
- அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.
- அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
- அரசு பொறியியல் / கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
- சமுதாயக் கல்லூரிகள்.
- அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
- அரசு இசைக் கல்லூரிகள்.

- சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
- தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்.

**iii) 50% பயணக் கட்டணச் சலுகை**

- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகள்
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பொறியியல் கல்லூரிகள்

நடப்பு நிதியாண்டில் 50% பயணக் கட்டணச் சலுகைக்கான மொத்த நிதிப் பொறுப்பு ரூ.2,105.96 இலட்சம் ஆகும்.

வரிசை எண். i, ii மற்றும் iii ஆகியவற்றில் தெரிவித்துள்ள அனைத்து சலுகை கட்டணங்களையும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்வதை அரசு உறுதி செய்கிறது.

**iv) விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச்சீட்டுகள்**

நகரங்களில், குறிப்பிட்ட பணியாளர்கள் தங்கள் பணி தொடர்பான பயணங்களுக்காக தினசரி ஒரு

நாளில் பல பயணங்களை மேற்கொள்கின்றனர். எனவே, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில், மாதாந்திரப் பயணச் சீட்டானது, ரூ.1,000/- கட்டண விகிதத்தில் எண்ணற்ற பயணங்கள் மேற்கொள்ள சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன. கூடுதலாக, குளிர்சாதனப் பேருந்து உட்பட அனைத்து பேருந்துகளிலும் பயணம் செய்ய ரூ.2,000/- கட்டணத்தில் எண்ணற்ற பயணங்கள் மேற்கொள்ள வழிவகை செய்யும் மாதாந்திரப் பயணச்சீட்டு திட்டம் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**v) மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை**

பொதுமக்கள் நகர் / மாநகர் மற்றும் புறநகர் பேருந்துகளில் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்யும் வசதியை வழங்குகிறது. இத்திட்டம் வழக்கமாகப் பயணம் செய்யும் பொதுமக்களின் பயணச்

செலவைக் குறைத்து, சிக்கனமான மற்றும் வசதியான பயண வாய்ப்பை ஏற்படுத்துகிறது. தொழிலாளர்கள், மாணவர்கள், வணிகர்கள் மற்றும் பிற பயணிகளின் அன்றாடப் பயணத் தேவைகளை எளிதாக்குவதுடன், பொதுப் போக்குவரத்தின் பயன்பாட்டையும் ஊக்குவிக்கின்றது

**vi) குழு பயணச்சீட்டு சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் குழுவாக பயணம் செய்ய பயணச்சீட்டு முன்பதிவு செய்பவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

**vii) ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.**

**viii) அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு 50 சதவீத கட்டண சலுகை.**

அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில், ஒரு மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணிக்கும் பயணிகளுக்கு, அதே மாதத்தில் ஆறாவது முறையிலிருந்து பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயணத்திற்கும், 50 சதவீத கட்டண சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகையை ஒரே மாதத்தில் ஆறாவது பயணம் முதல் வழங்கப்படும்.

### 2.12 பணியாளர்கள் நலன் தொடர்பான நடவடிக்கைகள்

#### 2.12.1 ஊதிய ஒப்பந்தம்

தொழிற் தகராறு சட்டம், 1947 பிரிவு 12(3)–இன் படி, அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகத்திற்கும் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே, குறிப்பிட்ட வகை பணியாளர்களுக்கென ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் உரிய கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன. 1977–ஆம் ஆண்டு முதல், அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுடன் மொத்தம் 15 ஊதிய ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன. செப்டம்பர்

2023 முதல் நடைமுறைக்கு வந்த 15–வது ஊதிய ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது.

**2.12.2 இதர நலத்திட்டங்கள் :–**

அரசு போக்குவரத்துக் கழகங்கள், பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனை மேம்படுத்துவதற்காக, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன:–

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்பு ஊதிய உயர்வு / ஆய்வு பலன்கள்
2. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு வழங்கப்படும் தினப்படி.
3. 12(3)-வது ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் வரும் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை
4. போனஸ், பொங்கல் ஊக்கத்தொகை
5. விடுப்பு பலன்கள்
6. திருப்பான் படி (Steering Allowance)
7. சலுகைக் கட்டண உணவக வசதி மற்றும் தீபாவளி பண்டிகைக்கு இனிப்புகள் வழங்குதல்.

8. இலவச சீருடைகள் மற்றும் சலவைப்படி

9. பணியாளர்களின் வாரிசுதாரர்களின் திருமண முன்பணம்.

10. வழக்குக் கட்டணம் ஈடுசெய்தல்.

11. உரிமம் புதுப்பிப்பதற்கான கட்டணத்தை ஈடுசெய்தல்.

12. இறந்த பணியாளர்களின் குடும்பத்திற்கு இறுதிச் சடங்குச் செலவுகளுக்கு ரூ.3,000/-

13. பணியாளர்களின் குழந்தைகள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு.

14. இறந்த பணியாளர்களின் குடும்ப நல நிதி ரூ.5,00,000/-

15. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதி வசதிகள்.

16. மருத்துவ பரிசோதனை

17. ஓட்டுநர்களுக்கான இலவச கண்பரிசோதனை

18. பணியிலுள்ள பணியாளர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

19. ஓர் ஆண்டிற்கு 5500 கி.மீ வரை பயணம் செய்ய பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இலவசபயண அட்டை

20. பண்டிகை முன்பணம் ஒரு வருடத்திற்கு ரூ.20,000/-

21. 31.03.2003 அன்று அல்லது அதற்கு முன் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதிய திட்டம் 1998 நடைமுறையில் உள்ளது. 31.07.2026 அன்றுள்ளவாறு, மொத்தம் 1,00,172 ஓய்வூதியதாரர்கள் உள்ளனர்.

22. பணிமனைகள் மற்றும் முக்கிய பேருந்து நிலையங்களில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க ஓய்வு அறைகள்.

23. மன அழுத்தத்திலிருந்து விடுபடவும், விடுபட யோகா மற்றும் சிறப்பு பயிற்சி வகுப்புகள்.

24. பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் வகையில், மாதந்தோறும் அதிகளவில் டிஜிட்டல் வசூல் மேற்கொள்ளும் நடத்துநர்களுக்கு விருதுகள்.

25. அதிகபட்ச வசூல் மேற்கொள்ளும் நடத்துநர்களுக்கும், அதிகபட்ச KMPL செயல்திறனைப் பெறும் ஓட்டுநர்களுக்கும், சிறப்பாகப் பணியாற்றும் பிற பணியாளர்களுக்கும் சிறப்புப் பரிசுகள்.

26. இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பணியாளர்களுக்காக சிறப்பு பேருந்துகள்.

27. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு பொறியியல் கல்லூரி ஈரோடு, அரசு மருத்துவக் கல்லூரி, பெருந்துறை மற்றும் அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி ஆகியவற்றில் இட ஒதுக்கீடு.

**2.12.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி**.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர வழங்கல் சட்டம், 1952-ன்கீழ் இருந்த அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள் 1998-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். அதன்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர்களுக்கும் தனி ஓய்வூதியத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த, 01.09.1998 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி உருவாக்கப்பட்டது.

இவ்வோய்வூதியத் திட்டத்தின்கீழ் உள்ள தகுதியுள்ள ஓய்வுபெற்ற / தன்விருப்ப ஓய்வுபெற்ற / காலமான பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தை சரிபார்த்து, மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குவதே இதன் முக்கியப் பொறுப்பாகும். கூடுதலாக, ஓய்வூதியம் பெறுவோரின் குறைகளை நிவர்த்தி செய்து / சரிபார்த்து ஓய்வூதியக் கொடுப்பாணைகளை வழங்கி வருகிறது.

01.09.1998 அன்று சம்பளப் பட்டியலில் இருந்த பணியாளர்கள் மற்றும் 31.03.2003 அன்று அல்லது அதற்கு முன் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் மொத்தம் 1.28 லட்சம் பணியாளர்கள், இவ்வோய்வூதியத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். 2025-26-ஆம் நிதியாண்டில், 98,013 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய தொகையாக (Pension) ரூ.2,380.41 கோடி வழங்கப்பட்டுள்ளது. இவ்வோய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் ஓய்வூதியதாரர்களின் சராசரி மாத ஓய்வூதியம் ரூ.237.32 கோடியாகும்.

### 2.12.4 சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்குதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சேமநல நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு ஊதியம், ஓய்வூதிய ஒப்பளிப்பு மற்றும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் போன்ற சட்டரீதியான ஓய்வூதிய பணப் பலன்களை கழகங்கள் வழங்குவதற்கு நிதி ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, குறுகிய கால கடன்கள் மற்றும் வழிவகை முன்பணம் ஆகியவற்றின் மூலமாக ஓய்வூதிய பணப்பலன்களை உரிய காலத்தில் வழங்கும் பொருட்டு, அரசு நிதியுதவி வழங்கி வருகின்றது.

### 2.13 விபத்து இழப்பீட்டுத் தீர்வு நிதியம்

தனியார் மற்றும் வணிக வாகனங்களைப் போல், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வாகன காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவில்லை. வாகன விபத்துகளால் பாதிக்கப்படுபவர்கள் மாண்பமை

நீதிமன்றங்களின் மூலம் விபத்து இழப்பீடு பெற வழக்கு தொடர்ந்து, நிவாரணம் பெறுவதற்கு நீண்ட காலம் ஏற்படுகிறது. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு, 2010-11-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ரூ.20 கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.40 கோடியில் தனியாக ஒரு விபத்து இழப்பீட்டுத் தீர்வு நிதியம் (Corpus Fund) உருவாக்கப்பட்டது. இத்தொகை ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியுமாக உள்ளது. மேற்படி நிதியம், சென்னையிலுள்ள தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

விபத்தினை தடுக்கும் நடவடிக்கையினை ஆதரிக்கும் பொருட்டு, இழப்பீடு வழங்கவும், சுங்க கட்டணத்தை

செலுத்தவும் 20.01.2018 முதல் பேருந்து பயணிகளிடம் தீர்வை (Cess) வசூல் செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கென, தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வைக் கட்டணம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| வ. எண். | பயண கட்டண விலை | பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை | |
|---|---|---|---|
| | | நகர் | புறநகர் |
| 1. | ரூ.25 வரை | 1 | 1 |
| 2. | ரூ.26 முதல் ரூ.50 வரை | 1 | 2 |
| 3. | ரூ.51 முதல் ரூ.75 வரை | 1 | 3 |
| 4. | ரூ.76 முதல் ரூ.100 வரை | 1 | 4 |
| 5. | ரூ.101 முதல் ரூ.200 வரை | _ | 5 |
| 6. | ரூ.201 முதல் ரூ.300 வரை | _ | 6 |
| 7. | ரூ.301 முதல் ரூ.400 வரை | _ | 7 |
| 8. | ரூ.401 முதல் ரூ.500 வரை | _ | 8 |
| 9. | ரூ.501 –க்கு மேல் | _ | 10 |

20.01.2018 முதல் 31.07.2026 வரை ரூ.4,296.65 கோடி தீர்வையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.1,805.76 கோடி சுங்கக் கட்டணத்திற்கும்,

நீதிமன்ற உத்தரவின்படி, 34,064 வழக்குகளுக்கு விபத்து இழப்பீடாக ரூ.2,088.67 கோடியும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் நீதிமன்றத்தின் (Lok Adalat) மூலம் தீர்வு செய்யப்பட்ட 7,611 வழக்குகளுக்கு விபத்து இழப்பீடு வழங்க ரூ.563.09 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 26,453 வழக்குகளுக்கு விபத்து இழப்பீடு வழங்க ரூ.1,525.58 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 2.14 தேசிய அளவில் விருதுகள்

| ஆண்டு | விருதின் பெயர் | விருதினை வழங்கிய நிறுவனம் | நாள் | மொத்த விருதுகள் | போக்குவரத்துக் கழகங்கள் |
|---|---|---|---|---|---|
| 2021-22 | சாலை நாயகர்கள் விருது | ASRTU | 18.04.2022 | 14 | த.நா.அ.போக.க. (விழுப்புரம்/சேலம்/ கோயம்புத்தூர்/ கும்பகோணம்/மதுரை/ திருநெல்வேலி) லிமிடெட் தலா இரண்டு விருதுகள். மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தலா 1 விருதினை வென்றுள்ளன. |
| 2022-23 | நுண்ணறிவு போக்குவரத்து பிரிவில் சிறந்த செயல்பாட்டிற்கான விருது | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் | 06.11.2022 | 1 | மாநகர் போக்குவரத்துக் கழகம் |
| 2022-23 | புகார்களை தீர்த்து வைப்பதில் சிறந்த செயல்பாடு | நகர்ப்புற உள்கட்டமைப்பு நிறுவனம் | 07.11.2022 | 1 | அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் |
| 2022-23 | தேசிய பொது பேருந்து போக்குவரத்தில் சிறந்த செயல்பாடு | ASRTU | 15.03.2024 | 17 | த.நா.அ.போக.க., மதுரை – 6, த.நா.அ.போக.க., கும்பகோணம் – 5, அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் – 3, த.நா.அ.போக.க., சேலம் – 2 மற்றும் த.நா.அ.போக.க., விழுப்புரம் – 1. |

| ஆண்டு | விருதின் பெயர் | விருதினை வழங்கிய நிறுவனம் | நாள் | மொத்த விருதுகள் | போக்குவரத்துக் கழகங்கள் |
|---|---|---|---|---|---|
| 2023-24 | "நம்ம பயணி தகவல் பலகை" – ஸ்கோச் விருது–2024 | SKOCH | 09.12.2024 | 1 | அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் |
| 2023-24 | தேசிய பொது பேருந்து போக்குவரத்தில் சிறந்த செயல்பாடு | ASRTU | 08.03.2025 | 19 | தநாஅபோகக,கும்பகோணம்–5, தநாஅபோகக,மதுரை/சேலம்–4, அரசு விரைவு போக்குவரத்துக்கழகம்–3, மாபோகழகம்–2மற்றும் தநாஅபோகக, விழுப்புரம்–1 |
| 2024-25 | நகர்ப்புறப் போக்குவரத்து இந்தியா விருது – சிறந்த பொதுப் போக்குவரத்து | அமைப்பைக் கொண்ட நகரம் – நகர்ப்புறப் போக்குவரத்து நிறுவனம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் | 09.11.2025 | 1 | மா.போ.கழகம் |
| 2024-25 | போக்குவரத்தின் மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல் – மகளிர் பயணம் | SKOCH குழுமம் | 20.09.2025 | 1 | மா.போ.கழகம் |
| மொத்த விருதுகள் | | | | | 55 |

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பொதுப் போக்குவரத்து சேவைகளில் சிறந்து விளங்குவதற்காக தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு, பல மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளன.

- 2021-2022-ஆம் ஆண்டில், அனைத்து மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 14 ஓட்டுநர்களுக்கு 18.04.2022. "சாலை நாயகர்கள்" விருதுகளை வழங்கி கௌரவித்தது.
- 2022-2023-ஆம் ஆண்டில், சிறந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு கொண்ட நகர்ப்புற

போக்குவரத்து சேவையில் சிறந்து விளங்குவதற்கான விருதினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்திடமிருந்து மாநகர் போக்குவரத்துக் கழகம் 06.11.2022 அன்று பெற்றது.

- புகார்களை விரைவாக தீர்த்து வைத்ததில் சிறந்த செயல்பாட்டு விருதினை அரசு போக்குவரத்துக் கழகம், நகர்ப்புற உள்கட்டமைப்பு நிறுவனத்திடமிருந்து 07.11.2022 அன்று பெற்றுள்ளது.
- தேசிய பொது பேருந்து போக்குவரத்து சிறப்பு விருதுகளில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் 17 விருதுகளை அனைத்து மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) 15.03.2024 அன்று பெற்றுள்ளன. இவ்விருதுகள், போக்குவரத்துக் கழகங்களின் புதுமை, செயல்திறன், மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் சேவை ஆகியவற்றிற்கான சிறந்த செயல்பாட்டினை அங்கரித்துள்ளது. மொத்தம் 69 விருதுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்

முதலிடங்களில் 24 சதவீதமும், இரண்டாம் இடங்களில் 26 சதவீதமும் ஆகமொத்தம் 25 சதவீத இடங்களை பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

- 2023-2024-ஆம் ஆண்டிற்கான "நம்ம பயணி தகவல் பலகை" செயல்படுத்தியதற்காக ஸ்கோச் விருதினை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 09.12.2024 அன்று பெற்றுள்ளது. மேலும், 69 தேசிய பொதுப் பேருந்து போக்குவரத்து சிறப்பு விருதுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் 19 விருதுகளை அனைத்து மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) 08.03.2025 அன்று பெற்றுள்ளன. மொத்தம் 69 விருதுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முதலிடங்களில் 32 சதவீதமும், இரண்டாம் இடங்களில் 23 சதவீதமும் ஆகமொத்த விருதுகளில் 28 சதவீதத்தினை பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 2.15 அரசு போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய அம்சங்கள்

### 2.15.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை பெருநகரில் பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கும் தனியுரிமை பெற்ற நிறுவனமாகும். இக்கழகம், சென்னை மற்றும் அதன் அருகில் உள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

**சிறப்பு அம்சங்கள்** (01.08.2026 **அன்றுள்ளவாறு)**

- **பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தம்**
  - மாநகர போக்குவரத்து கழகத்தின் வரவிற்கும் செலவிற்கும் இடையிலான வித்தியாசத் தொகையினை (VGF) ஈடு செய்யும் வகையில், பொது போக்குவரத்து சேவை ஒப்பந்தம் (PTSC), தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறைக்கும், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கும் இடையே 2023 ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

- நடப்பு நிதி ஆண்டிற்கான (2026-2027) 100% பேருந்து எண்ணிக்கைக்குரிய வரவிற்கும் செலவிற்கும் இடையிலான வித்தியாசத் தொகையினை Viability Gap Fund (VGF) தமிழ்நாடு அரசு மூலம் வழங்கப்பட உள்ளது.

➢ **மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் மின்பேருந்து இயக்கம் :**

- சென்னை மாநகரில் காற்று மாசுபாட்டை குறைத்து, நிலைத்த நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில், மாநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் போக்குவரத்து முறையாக தாழ்தள மின்சார பேருந்துகளை அறிமுகப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.
- 625 மின்சார பேருந்துகள் (225 குளிர்சாதன மற்றும் 400 குளிர்சாதனம் அல்லாத) மொத்த விலை ஒப்பந்தம் அடிப்படையில் வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூந்தமல்லி, சென்ட்ரல் மற்றும் தண்டையார்பேட்டை-1

ஆகிய 5 பணிமனைகளில் இருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

- இதன் தொடர்ச்சியாக, 2026–2027 நிதியாண்டில் மொத்த விலை ஒப்பந்தம் அடிப்படையில் (Gross Cost Contract (GCC) Model) கட்டம் – II கீழ், 7 பணிமனைகளில் இருந்து இரண்டு ஒப்பந்ததாரர்கள் மூலம் 750 (550 குளிர்சாதன மற்றும் 200 குளிர்சாதனம் அல்லாத) தாழ்தள மின்சார பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.
- மேலும் தனிநபர் வாகன பயன்பாட்டை குறைக்கும் பொருட்டு பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப்போக்குவரத்துக்கு கூடுதலாக 1000 தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மொத்த விலை ஒப்பந்தம் அடிப்படையில் மாநகர் போக்குவரத்துக் கழகம் மூலம் தமிழக அரசால் கொள்முதல் செய்யப்பட இருக்கிறது.

➢ **சென்னை மெட்ரோ ரயில் – கடைக்கோடி பகுதிகளுக்கு போக்குவரத்து வசதி வழங்குதல்:**

சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இணைப்பை மேம்படுத்தி, சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்து, தடையற்ற

நகர்ப்புற போக்குவரத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கான தொடக்க மற்றும் கடைக்கோடி இணைப்பு (FLMC) சேவைகளை சுமார் 4 கி.மீ சுற்றளவிற்கும் வழங்குவதற்காக மொத்த விலை ஒப்பந்தம் அடிப்படையில் {Gross Cost Contract (GCC)} 220 குளிர்சாதன தாழ்தள மின்சார பேருந்துகளை இயக்க மாநகர் போக்குவரத்துக் கழகம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 7 மீட்டர் அளவிலான 70 பேருந்துகளும், 5 மீட்டர் அளவிலான 150 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.

➢ **முக்கிய பேருந்து நிலையங்கள், புறநகர் ரயில் மற்றும் MRTS–க்கு இணைப்பு சேவைகள்**

மாநகர் போக்குவரத்துக் கழகம் தற்போது, பொதுமக்கள் தங்கள் புறப்படும் இடத்திலிருந்து சேரும் இடம் வரை பயணிப்பதற்கு ஏதுவாக, 146 சிறிய பேருந்துகளை இயக்கி வருகிறது. சென்னையில் பொதுப் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்துவதையும், நவீனமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நகர்ப்புறப் போக்குவரத்தை

ஊக்குவிக்கும் நோக்கிலும், இணைப்பு (Feeder) சேவைக்காக மொத்த செலவு ஒப்பந்த (GCC) முறையில் 300 குளிர்சாதன தாழ்தள 7 மீட்டர் மின்சாரப் பேருந்துகளை அறிமுகம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதன் வரவேற்பின் அடிப்படையில், இரண்டாம் கட்டமாக மேலும் கூடுதலாக 300 குளிர்சாதன தாழ்தள 7 மீட்டர் மின்சாரப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்.

➢ **உயர்தர பேருந்து சேவைகள்:**

தனியார் வாகனப் பயன்பாட்டை குறைத்து, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் போக்குவரத்தை ஊக்குவிக்கவும், தடையற்ற நகர்ப்புற போக்குவரத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு, இணையதள இருக்கை முன்பதிவு, Wi-Fi, CCTV, USB சார்ஜிங் வசதி, GPS கண்காணிப்பு மற்றும் வசதியான இருக்கைகள் உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட 10 புதிய தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகள் "பிரீமியம் பேருந்து" சேவையாக முதற்கட்டமாக இரண்டு வழித்தடங்களில்

சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சேவை பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதை அடுத்து, நடப்பு ஆண்டில் 40 "பிரீமியம் பேருந்துகள்" கூடுதலாக இயக்கப்பட உள்ளது. இந்த முன்முயற்சி **SDG 3.6, 9.1 மற்றும் 11.2** ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் நேரடியாகவும், **SDG 7, 8 மற்றும் 12** ஆகியவற்றுடன் மறைமுகமாகவும் பொருந்துகிறது.

- **அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகள் செயல்படுத்தல் :**

  தூய்மையான எரிபொருட்களைப் பயன்படுத்தும் MTC-யின் முயற்சியின் ஒரு பகுதியாக, சென்னையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நகர்ப்புறப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில், அம்பத்தூர், குன்றத்தூர் மற்றும் வரதராஜபுரம் பேருந்து பணிமனைகளிலிருந்து மொத்தம் 206 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

- **இரட்டை அடுக்கு மின்பேருந்துகள் அறிமுகம்:**

  பொதுமக்களின் தேவைக்கு ஏற்பவும் மற்றும் வசதியான பயணத்தை வழங்கிடவும், பயணிகளின் அடர்வு விகிதத்தை குறைக்கும் நோக்கிலும் அதிக தேவை உள்ள வழித்தடங்களில் 20 இரட்டை அடுக்கு குளிர்சாதன மின்சாரப் பேருந்துகளை மாநகர் போக்குவரத்துக் கழகம் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

- **பணிமனை உட்கட்டமைப்பு மேம்பாடு – புதிய மற்றும் ஏற்கனவே உள்ள பணிமனைகள்**

பொது போக்குவரத்து திறனை அதிகரிக்கவும், அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யவும், 12 மீட்டர் மின்சார பேருந்துகள், 7 மீட்டர் மற்றும் 5 மீட்டர் மின்சார பேருந்துகள் மற்றும் CNG பேருந்துகள் உட்பட புதிய பேருந்துகளுடன் கூடுதல் சேவைகளை அதிகரிக்க மாநகர் போக்குவரத்துக் கழகம் (MTC) திட்டமிட்டுள்ளது. இவ்வெவ்வேறு வகைப் பேருந்துகள் மற்றும் தற்போதுள்ள டீசல் பேருந்துகளுக்கும், மாநகர் போக்குவரத்துக் கழகம்

(MTC) புதிய பணிமனைகளுக்கான மற்றும் இடங்களை அடையாளம் கண்டுள்ளது. இவ்விடங்களில் அரசு உதவியுடன், உட்கட்டமைப்பு மற்றும் மின் மேல்நிலை வசதிகளை மேம்படுத்தப்படும்.

**<u>புதிய பணிமனைகள்:</u>**

மோரை, தாமரைப்பாக்கம், மாமல்லபுரம், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர், கும்மிடிப்பூண்டி, சீமாவரம், கீரப்பாக்கம், தையூர்-2 மற்றும் வேளச்சேரி.

**<u>ஏற்கனவே உள்ள பணிமனைகள்:</u>**

அண்ணாநகர் மேற்கு, அயனாவரம், அடையார், தாம்பரம், பெசன்ட் நகர், குரோம்பேட்டை, கே.கே.நகர் மேற்கு, எம்.கே.பி.நகர், மற்றும் கவியரசு கண்ணதாசன் நகர்.

**<u>மகளிர் மட்டும் சிறப்பு பேருந்துகள் :</u>**

அரசின் கட்டணமில்லா பயணத் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொள்ளும் மகளிர் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து, மகளிர் பயணிகளின் பாதுகாப்பு, வசதி மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில், மாநகரப்

போக்குவரத்துக் கழகம் (MTC) மகளிர் மட்டும் பயணம் செய்ய ஏதுவான சிறப்பு பேருந்துகள் சேவையினை முதற்கட்டமாக 12 பேருந்துகளில் தனித்துவமான இளஞ்சிவப்பு நிறம் மற்றும் நடத்துநர்களுக்கான இளஞ்சிவப்பு சீருடைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

**<u>பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு பேருந்து சேவைத் திட்டம் :</u>**

பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்பான, நம்பகமான மற்றும் வசதியான போக்குவரத்து சேவையை வழங்கும் நோக்கில், தமிழ்நாடு அரசால் "பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு பேருந்து சேவைத் திட்டத்தினை" அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், பள்ளி நேரத்திற்கு ஏற்ப காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளி வளாகங்களிலிருந்தே மாணவர்களுக்காக தனிப்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போது சென்னை நகரில் 66 பள்ளிகளை உள்ளடக்கி மாநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) மூலம் 67 சிறப்பு பயணநடை பேருந்துகள்

இயக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் பாதுகாப்பான பயணம், வசதியான அமர்வு, கூட்ட நெரிசல் குறைப்பு மற்றும் மாணவர்களின் நேர்த்தியான பள்ளி வருகையை உறுதி செய்கிறது. மாணவர் நலனை மேம்படுத்தி, மாணவர்களுக்கு உகந்த நிலையான பொதுப் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்தும் முக்கிய முயற்சியாக இத்திட்டம் அமைந்துள்ளது.

### 2.15.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட், சென்னை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்படுகிறது. இக்கழகம், தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களுக்கு உயர்தர பேருந்து சேவைகளை இயக்க அங்கீகரிக்கப்பட்ட மாநில போக்குவரத்துக் கழகமாகும்.

**முக்கிய சிறப்பம்சங்கள்:–**

1. **சேவை வலையமைப்பு:**

இக்கழகம், 300 கி.மீட்டருக்கு மேல் நீண்டதூர பயணமாக, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும், வழிபாட்டுத்

தலங்களையும், வர்த்தக இடங்களையும், அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களை இணைக்கும் வகையில் பேருந்துகளை இயக்கி வருகிறது. இக்கழகம், தமிழ்நாட்டுடன் அண்டை மாநிலங்களை இணைக்கும் விதமாக 196 வழித்தடங்களை இயக்கி வருகிறது. அதில், அண்டை மாநிலங்களுக்கு 88 வழித்தடங்களிலும், தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 108 வழித்தடங்களிலும் இயக்கி வருகின்றது.

**2. டிஜிட்டல் முன்னேற்றங்கள்:**

- 90 நாட்களுக்கு முன்பாக இணையதளம் மற்றும் கைபேசி செயலி மூலம் பயணிகளுக்கு மின்னணு முன்பதிவு (E-Ticketing) செய்யும் வசதியுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் 65 இடங்களில் 68 மையங்களுடன் இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பு (OTRS) செயல்பட்டு வருகிறது.
- இக்கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில்

முன்பதிவின் மூலம் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அனைத்து பேருந்துகளிலும் Point of Sale கருவி மூலம் மின்னணு கட்டண முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**3. பயணிகளுக்கான வசதிகள்:**

- பயணிகளுக்கு முன்பதிவுகளின் மூலமாக அனைத்து வகை பேருந்துகளிலும் இருவழி பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் போது 10 சதவீதம் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகையானது பண்டிகை மற்றும் முக்கிய நாட்களுக்கு பொருந்தாது.
- பேருந்துகளில் தனியாக பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்கென தற்போது நான்கு தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டு, முன்பதிவு செய்து பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இருக்கைகள் பேருந்து

புறப்படும் 24 மணி நேரம் முன்பு வரை பெண்கள் மட்டுமே முன்பதிவு செய்ய இயலும். முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு பேருந்தின் பதிவு எண், நடத்துநரின் பெயர் மற்றும் கைபேசி எண் ஆகிய விவரங்கள் குறுஞ்செய்தியாக பயண நேரத்திற்கு 30 நிமிடங்கள் முன்னதாக, முன்பதிவின் போது பயணி அளித்த கைபேசி எண்ணிற்கு அனுப்பப்படும். மேலும், அனைத்து பேருந்துகளிலும் புவித்திசைக்காட்டி (GPS) கருவி பொருத்தப்பட்டு, இக்கருவியின் தொழில்நுட்பத்தின் வாயிலாக முன்பதிவு செய்த பயணிகளுக்கு பேருந்தின் நிகழ்விடம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது பயணிகளுக்கு தடையற்ற மற்றும் தகவலறிந்த பயண அனுபவத்தை உறுதி செய்கிறது.

- பயணிகள் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்தில் குறிப்பிட்ட பேருந்தின் வருகை நேரத்தினை

திறன்பேசி (Smart Phone) மூலம் புவித்திசைக்காட்டி தொழில்நுட்பத்தின் வாயிலாக அறிந்திட "Chennai Bus" செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**இருவழி பயண முன்பதிவு தள்ளுபடி**

- ஒரே பரிவர்த்தனையில் சென்று திரும்பும் பயணங்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டால், திரும்பும் பயணத்தின் அடிப்படை கட்டணத்தில் 10% தள்ளுபடி வழங்கப்படும்.
- சென்று திரும்பும் பயண தள்ளுபடி அனைத்து வகுப்பு மற்றும் அனைத்து கழக பேருந்துகளுக்கும் வழங்கப்படும்.
- வார இறுதி நாட்கள், திருவிழா மற்றும் சுப முகூர்த்த பயண நாட்களில் இத்தள்ளுபடி வழங்கப்படாது.
- சென்று திரும்பும் பயணங்கள் ஒரே வகை சேவையில் அமைந்திருக்க வேண்டும்.

- ஒரு பயணச்சீட்டிற்கு ஒரு தள்ளுபடி மட்டுமே வழங்கப்படும். அதிக தள்ளுபடி எதுவோ அது மட்டுமே பொருந்தும்.
- ஏதேனும் ஒரு சீட்டு ரத்து செய்யப்பட்டால் வழங்கப்பட்ட தள்ளுபடி திரும்ப பெறப்படும்.
- பகுதி ரத்து அனுமதிக்கப்படும்.

**தொடர்ச்சியான பயணம் செய்பவர்களுக்கான தள்ளுபடி**

- ஒரு பயணி 5 முன்பதிவு பரிவர்த்தனைகளை முடித்திருந்தால், 6 வது பரிவர்த்தனையில் தொடர்ச்சியாக பயணிக்கும் பயணிக்கு தள்ளுபடி பெற தகுதியுடையவராவார். 5 பயணங்களும் அதே மாதத்திற்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- அனைத்து பயணங்களிலும் பயணியின் பெயர், வயது, பாலினம், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை ஒன்றாக இருக்க வேண்டும்.

- புறப்படும் மற்றும் சேரும் இடமும் ஒன்றாக இருக்க வேண்டும்: உதாரணம்: சென்னை – மதுரை அல்லது மதுரை – சென்னை.
- ஒரு இருக்கை முன்பதிவு செய்யும் நிகழ்வுகளில் மட்டுமே இத்தள்ளுபடி வழங்கப்படும்.
- ஒரே பரிவர்த்தனையில் பலர் முன்பதிவு செய்தால் இத்தள்ளுபடி வழங்கப்படாது.
- ஒரே நாளில் ஒரே வழித்தடத்திற்கு இரண்டு முன்பதிவுகள் செய்தால், முதல் பரிவர்த்தனை மட்டும் கணக்கில் கொள்ளப்படும்.
- ரத்து செய்யப்பட்ட முன்பதிவு கணக்கில் கொள்ளப்படமாட்டாது.
- திருவிழா மற்றும் சுப முகூர்த்த நாட்களில் இத்தள்ளுபடி பொருந்தாது.
- ஒரே குழுவாக 10 நபர்கள் முன்பதிவு செய்யும் போது, மொத்தம் 10% சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும்.

**பெண்கள் ஒதுக்கீட்டு இருக்கைகள்**

- அனைத்து வகை சேவைகளிலும் பெண்களுக்காக 4 இருக்கைகள்/படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- ஒதுக்கீட்டு இருக்கைகள் நிரம்பவில்லை என்றால், பயணத்திற்கு 24 மணி நேரத்திற்கு முன் பதிவு செய்யப்படாத இருக்கைகள் பொதுமக்களுக்கு விடுவிக்கப்படும்.
- பெண்கள் ஒதுக்கீட்டில் ஒரு இருக்கை மட்டும் முன்பதிவு செய்யப்பட்டிருந்தால், அடுத்த இருக்கை பெண்கள் அல்லது குழந்தையுடன் வரும் பெரியவர்கள் மட்டுமே முன்பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

**மாற்றுத் திறனாளிகள் மற்றும் உதவியாளர்**

- மாற்றுத் திறனாளிகள் அரசு வழங்கிய செல்லுபடியாகும் அடையாள அட்டையின் விவரங்களை இணையதளம் முன்பதிவின் போது குறிப்பிட வேண்டும்.

- பயணம் மேற்கொள்ளும் போது மாற்றுத் திறனாளர் சான்றிதழின் நகலை நடத்துனரிடம் ஒப்படைக்க வேண்டும். அசல் சான்றிதழையும் உடன் வைத்திருக்க வேண்டும்.
- உதவியாளர் உடன் வந்தால், அவருடைய அடையாள அட்டையினையும் காட்ட வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கு 75% கட்டண சலுகை வழங்கப்படும்.
- 2 இருக்கைகள் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன
- இச்சலுகை தமிழ்நாட்டிற்குள் மேற்கொள்ளும் பயணங்களுக்கு மட்டும் பொருந்தும்.

**மூத்த குடிமக்கள் (**10% கட்டணச் சலுகை)

மூத்த குடிமக்கள் முன்பதிவு செய்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் போது பயணக்கட்டணத்தில் (basic fare) 10 சதவீதம் சலுகை வழங்கப்படும். மேலும் பயணம்

மேற்கொள்ளும் போது உரிய சான்றிதழ் நடத்துனரிடம் காண்பிக்கப்பட வேண்டும்,

**பயணிகளின் கருத்து மற்றும் குறைகளை நிவர்த்தி செய்தல்:**

- முன்பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டுகளில் வழங்கப்பட்டுள்ள மிகை இணைப்பு (hyper link) மூலம் பயணிகளின் குறைகள் உனடியாக கவனிக்கப்பட்டு, நிவர்த்தி செய்யப்பட்ட விவரம் பயணிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.
- பயணிகளின் புகார்கள் மற்றும் குறைகளைப் பதிவு செய்வதற்காக **தனிப்பட்ட வாட்ச்சப் எண்: 94450 14448** வழங்கப்பட்டுள்ளது.

4. **பயிற்சி மற்றும் நவீனமயமாக்கல்:**

- சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் நாகர்கோவில் ஆகிய நான்கு இடங்களில் அதிநவீன பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் விபத்தில்லா இயக்கம், எரிபொருள் சிக்கனம், புதிய தொழில்நுட்ப மேம்பாடு, பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் மன அழுத்த மேலாண்மை ஆகியவற்றில் பல்வேறு துறைகளை சார்ந்த வல்லுநர்களை கொண்டு

ஓட்டுநர், நடத்துநர் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- அனைத்து பணிமனைகளிலும் வருகை இயந்திரம் பொருத்தப்பட்டு, பணியாளர்களின் வருகை பதிவு கண்காணிக்கப்படுகிறது.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், பணியாளர்கள் தங்களுக்கான பல்வேறு சேவைகளை இணையவழியில் எளிதாகப் பெறும் வகையில் www.setctn.com என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (Username) மற்றும் கடவுச்சொல் (Password) மூலம் இணையதளத்தில் கீழ்க்கண்ட விவரங்களை பார்வையிடவும், அச்செடுக்கவும் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் இயலும்:
  - பணியாளரின் தனிப்பட்ட விவரங்கள்
  - ஊதிய (மாதாந்திர சம்பளச்சீட்டு)
  - விவரங்கள் மாதாந்திர ஊக்கத் தொகை விவரங்கள்
  - வருமான வரி அறிக்கைகள்
  - வருமான வரி (Form-16)
  - வருங்கால வைப்பு நிதி (PF) விவரங்கள்

## 2.15.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

**முக்கிய வளர்ச்சி**

**1. புதிய பணிமனை (ம) டயர் புதுப்பிக்கும் பிரிவு**

வெள்ளிமலையில் 2026-ல் ஒரு புதிய பணிமனையும், ஏலத்தூரில் (திருவண்ணாமலைப் பகுதி) ஒரு புதிய டயர் புதுப்பிக்கும் பிரிவும் தொடங்கப்பட்டுள்ளன.

**2. பேருந்துகள் மாற்றம்**

2025-2026-ஆம் ஆண்டில், 933 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் **31.07.2026** வரை மொத்தம் 197 பேருந்து கூண்டுகள் (Chassis) மாற்றப்பட்டுள்ளன.

3. **தொழில்நுட்பம் மற்றும் நிலைத்தன்மை :–**

**i. பயோமெட்ரிக் வருகை**

இக்கழகத்தின் 83 இடங்களில் வருகை பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டு, பணியாளர்களின் வருகை பதிவு (100%) கண்காணிக்கப்படுகிறது.

**ii. கண்காணிப்பு கேமரா அமைத்தல்**

இக்கழகத்தின் 65 இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளன. இதர இடங்களிலும் பொருத்துவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**iii. சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைத்தல்**

இக்கழகத்தின் நான்கு இடங்களில் சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைக்கப்பட்டு, மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், 20 இடங்களில் சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைக்கப்பட்டு, விரைவில் மின் உற்பத்தி தொடங்கப்படும்.

<u>**நிதி மற்றும் சிறப்பு முயற்சிகள்:–**</u>

1. **பெட்ரோல் / டீசல் சில்லறை விற்பனை நிலையம்**

குடியாத்தம் பணிமனையில் டீசல் சில்லறை விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. உளுந்தூர்பேட்டை பணிமனையில் சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சிதம்பரம், உத்திரமேரூர் மற்றும் திருத்தணி

பணிமனைகளில் தடையின்மைச் சான்றிதழ் (NOC) பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2. பணியாளர் ஓய்வறைகள்:**

இக்கழகத்தில், 18 பணிமனைகள் தேர்வு செய்யப்பட்டு, பணியாளர்கள் பயன்படுத்தும் ஒப்பனை அறைகளை மேம்படுத்த ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. **சுற்று சூழலுக்கு உகந்த போக்குவரத்துக்கு மாற்றம்: டீசல் பேருந்துகளை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகளாக மாற்றுதல்**

இக்கழகத்தில் ஏற்கனவே இயங்கி வந்த 103 டீசல் பேருந்துகள் வெற்றிகரமாக CNG பேருந்துகளாக மாற்றப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 101 புதிய CNG பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

4. **பணியாளர் நலன் மற்றும் அங்கீகாரம்**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்தில், போக்குவரத்துத் தொழிலாளர் இறப்பு

நிவாரண நிதி (TEDA) தொடங்கப்பட்டுள்ளது. இந்நிதிக்கு அனைத்து பணியாளர்களும் பங்களிப்பு வழங்குகின்றனர். பணியில் இருக்கும்போது உயிரிழக்கும் பணியாளரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கு ரூ.10 இலட்சமும், ஓய்வில் இருக்கும்போது உயிரிழக்கும் பணியாளரின் குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சமும் வழங்கப்படுகிறது. 2025-26 ஆம் ஆண்டில், 111 குடும்பங்களுக்கு ரூ.5.80 கோடி அளவிலான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், இதுவரை மொத்தம் 40 குடும்பங்களுக்கு ரூ.2.10 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 2.15.4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

இக்கழகம், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு முறையே 629, 449, 475, 658 மற்றும்

113 கிராமங்களுக்கு பேருந்து சேவைகளை வழங்கி வருகிறது.

இக்கழகத்தின் சார்பில், முக்கிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் ஆன்மிகத் தலங்களுக்கு போதுமான அளவில் சிறப்புப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வார இறுதி நாட்கள், திருவிழாக்கள் மற்றும் பண்டிகைக் காலங்களில் அதிகரிக்கும் பயணிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் வழக்கமான சிறப்புப் பேருந்து சேவைகளும் இயக்கப்படுகின்றன.

- இக்கழகம், வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய சுப தினங்களில், பயணிகளின் வசதிக்காக ஏற்காடு மலை, கொல்லிமலை, ஒகேனக்கல் காவேரி ஆற்று நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலா தலங்களுக்கு சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது.
- பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் மாதேஸ்வரன் மலை, சிவாலயங்கள் அமைந்துள்ள

தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் ஆறகலூர் பகுதிகளுக்கும், முருகர் ஆலையங்கள் அமைந்துள்ள காளிப்பட்டி மற்றும் கபிலர்மலை, புத்திரகவுண்டம்பாளையம் (146 அடி உயரம் முத்துமலை முருகன் சிலை) மற்றும் நாமக்கல் ஆஞ்சநேயர் கோவில் ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கும் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- கோடைக்காலத்தில் (மே மாதம்), ஏற்காட்டிற்கு ஒருநாள் சுற்றுலா பயணமாகச் செல்ல சிறப்புப் பேருந்து சேவை வழங்கப்பட்டு வருகிறது. இச்சேவையின் மூலம் சுற்றுலாப் பயணிகள் காலை சுமார் 8.30 மணிக்கு சேலத்திலிருந்து ஏற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள 11 சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மாலை 7.00 மணியளவில் சேலத்திற்கு மீண்டும் அழைத்து வரப்படுகின்றனர்.
- இக்கழகம், ஏற்காடு மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, வெள்ளிமலை மலை, நல்லமதி

மலை பச்சைமலை, தொட்டமஞ்சி, மற்றும் வத்தல்மலை ஆகிய மலை பகுதிகளுக்கு 29 சேவைகளை பழங்குடி மக்கள் மற்றும் பள்ளி செல்லும் பழங்குடி மாணவர்கள் தொடர்ந்து பயன்பெறும் வகையில் இயக்கி வருகின்றது.

- தொழிலாளர்கள் உதவும் கரங்கள் நிதி (EMPLOYEES HELPING HAND FUND - EHHF) திட்டம் தொடங்கப்பட்டு, அதன் மூலம், பணியின்போது விபத்தில் உயிரிழப்பு ஏற்படும் நிகழ்வுகளில் ரூ.7.00 லட்சம், பணியாளர் பணிக்காலத்தில் இயற்கை மரண நிகழ்வுகளில் ரூ.5.00 லட்சம், பணியாளர் பணியின்போது விபத்தில் உடல் உறுப்பு இழப்பு ஏற்படும் நிகழ்வுகளில் ரூ.4.00 லட்சம், தொழில் பழகுநர்கள் (Act Apprentice) பணிமனை வளாகத்தில் பணியில் இருக்கும்போது இறப்பு ஏற்படின் ரூ.1.00 லட்சமும் என தொழிலாளர்களின் பங்களிப்பின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

- இக்கழகம், 194 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகளை இயக்கி வருகிறது.
- நாமக்கல் மாவட்டம் அத்தனூர் மற்றும் சேலம் மாவட்டம் எடப்பாடி பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையம் துவக்கப்பட்டு, ரூ.4.38 இலட்சம் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டு வருகின்றது.

2.15.5 **தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்**

இக்கழகத்தின் செயல்பாடுகள் கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலும், அருகில் உள்ள சேலம், திண்டுக்கல், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலும் அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவிலும் அமையப் பெற்றுள்ளது. இச்சேவைகள் நகர்ப்புற (Town), புறநகர் (Mofussil) மற்றும் மலைப்பாதை (Ghat) வழித்தடங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன.

**சமூக நல நடவடிக்கைகள்:**

- இக்கழகத்தின் மூலம் வால்பாறை, உதகமண்டலம், கூடலூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. பரலியார் மற்றும் ஆசனூரில் பேருந்து பயணிகளின் வசதிக்காக சாலையோர சிற்றுண்டி விடுதிகளை இயக்கி வருகிறது.
- குடிநீர் மற்றும் கழிப்பறை வசதியுடன் கூடிய பயணிகள் தங்குமிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**ஊழியர் நல நடவடிக்கைகள்:**

- சமூக பாதுகாப்பு திட்டம்: ஓய்வுபெற்றவர்கள் அல்லது மருத்துவ கராணைங்களால் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.
- மாதம் ரூ.4,000/- மற்றும் ரூ.500/- (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) மலைப்படி மற்றும் குளிர்காலபடி வழங்கப்படுகிறது.

### 2.15.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்.

**இயக்க எல்லை மற்றும் சேவைகள்:**

- 13 மாவட்டங்களிலும் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான காரைக்கால் உள்ளடக்கிய புதுச்சேரி ஒன்றிய பிரதேச பகுதிகளை இயக்க எல்லையாகக்கொண்டு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- உலக புகழ்பெற்ற வேளாங்கண்ணி திருத்தலம், திருவரங்கம் கோயில், நவக்கிரக கோயில்கள், பழநி, நாகூர் மற்றும் ஏர்வாடி தர்கா போன்ற இடங்களுக்கும் சிறப்பு பேருந்து வசதிகளை வழங்கி வருகின்றது.

- **வருவாயை அதிகரித்தல்:**

கும்பகோணத்தில் பின்வரும் இடங்களில் 10 கிலோவாட் திறனுள்ள சூரிய மின்னாற்றல் தகடுகள் நிறுவப்பட்டு, மின்சார கட்டணத்தில் 20% வரை சேமிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| கும்பகோணம் தலைமையகம் | 10.00 கிலோவாட் |
| திருச்சி மண்டல அலுவலகம் | 35.64 கிலோவாட் |
| திருச்சி புறநகர் கிளை | 11.88 கிலோவாட் |
| அரியலூர் கிளை | 10.00 கிலோவாட் |
| காரைக்குடி மண்டல அலுவலகம் | 39.72 கிலோவாட் |

**சிறப்பு தொகுப்புப் பயணங்கள்**:

- நவக்கிரக கோயில்களுக்கு வார இறுதி நாட்களில் வழிகாட்டிகளுடன் குளிரூட்டப்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- ஆறு முருகன் திருக்கோயிலுக்கு வாரம் இருமுறை சிறப்பு தொகுப்பு பயணங்களுக்கான பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

* **எரிபொருள் சில்லறை விற்பனை நிலையம்**: இராமநாதபுரத்தில் பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், சில இடங்களில் கூடுதல் நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* **பசுமை முன்னெடுப்புகள்:**
    * செலவினங்களை குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் அரசின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இக்கழகம் 120 டீசல் பேருந்துகளை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு பேருந்துகளாக மாற்றியமைக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மேலும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுக்கு மாற்றப்பட்டதன் விளைவாக கிலோமீட்டருக்கு ரூ.4/-க்கு மேல் சேமிப்பாக கிடைக்கப் பெறுகிறது.
    * கார்பன் வெளியேற்றம் இல்லாத நகராட்சியாக இராமேஸ்வரம் அமைய 117 புதிய பி.எஸ் VI அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நகர பேருந்துகள் இயக்கப்பட்டுவருகிறது.

**சாலை பாதுகாப்பு:**

இக்கழகம் விபத்துக்களைக் குறைப்பதற்காகப் பின்வரும் விபத்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது:-

- உயிரிழப்பு இல்லாத இயக்கத்தை ஊக்குவித்தல் (அழைப்புக் கடிதம் மற்றும் தற்காப்பு ஓட்டுநர் நெகிழ்வுப் பலகைகள் வைத்தல்)
- சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பேருந்து நிலையங்கள் போன்ற பொது மக்கள் கூடும் இடங்களில் உரையாற்றுதல்.
- சாலைப் பாதுகாப்பு அரங்குகளுடன் கூடிய 6 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்துகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- சாலைப் பாதுகாப்பு வாரத்தின் போது நடத்தப்பட்ட தலைகவச பாதுகாப்பு பேரணி.
- விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தலைமை அலுவலக வளாகத்திற்குள் சாலைப் பாதுகாப்புப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

### 2.15.7 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

**பயணிகளுக்கான வசதிகள்:**

- நகர் மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக சலுகைக் கட்டண பயணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- பொது மக்கள் மற்றும் வணிகர்கள் நலன் கருதி 30 இரவு நேர நகரப் பேருந்துகள் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன.

- மதுரை மண்டலத்தின் பொன்மேனி கிளையில் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்–யில் பெட்ரோலியப் பொருட்களுக்கான சில்லறை விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு, மாதந்தோறும் ரூ.2.78 இலட்சம் முதல் ரூ.3.00 இலட்சம் வரை தரை வாடகையாக வருவாய் ஈட்டப்படுகிறது. செக்கானூரணி, திண்டுக்கல் மண்டல அலுவலகம் மற்றும் வத்தலகுண்டு ஆகிய மூன்று கிளைகளிலும் பெட்ரோலியப் பொருட்களுக்கான சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பேருந்து நிறுத்தங்களின் பெயர்களை ஒலிபெருக்கி மூலம் தானாகவே அறிவிக்கும் முறை 210 நகர் பேருந்துகளில் செயல்பாட்டிலுள்ளது.

**பயிற்சி:**

- உயிரிழப்பு விபத்து ஏற்படுத்திய கழக மற்றும் தனியார் ஓட்டுநர்களுக்கு நவீன

தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த கருவி மூலம் சிறந்த ஓட்டுநர் பயிற்சி இக்கழகத்தின் பயிற்சி மையத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2026 முதல் ஜூலை 2026 வரை மொத்தம் 122 ஓட்டுநர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**விழாக்கள் மற்றும் சுற்றுலா சேவைகள்:**

- வீரபாண்டி, பழநி, வேளாங்கண்ணி, அழகர்கோயில் மற்றும் திருச்செந்தூர் கோயில் ஆகிய வழிப்பாட்டு தலங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும், கள்ளழகர் திருக்கோயிலுக்கும் சுற்றுலாப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- கோடைக்காலத்தை முன்னிட்டு பயணிகளின் வசதியினை கருத்திற்கொண்டு, ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் முழுவதும் முன்பதிவு வசதியுடன் கொடைக்கானலை சுற்றியுள்ள இயற்கை எழில்மிகு இடங்களை காண சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- வெளி மாநிலங்களிலிருந்து மதுரை மீனாட்சி அம்மனை வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக போக்குவரத்து நெரிசல் காரணங்களுக்காக அனுமதிக்கப்படாத இடங்களில் சிறப்பு பேருந்துகள் பக்தர்களின் வசதிக்காக இயக்கப்படுகிறது.

### 2.15.8 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

- திருச்செந்தூர், சங்கரன்கோவில், பாபநாசம், ஸ்ரீவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி, குற்றாலம், சுசீந்திரம் மற்றும் திருவட்டாறு உள்ளிட்ட முக்கிய ஆன்மீக மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கு கழகத்தின் சார்பில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- பக்தர்களின் வசதிக்காக நவகைலாயம், நவதிருப்பதி மற்றும் பஞ்சபூதத் தலங்களுக்கு பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலங்களில் 29 வழித்தடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வசதிக்காக கூடுதலாக 60 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

- இக்கழகம், 813 நகர்ப்புற சேவைகள் மற்றும் 794 புறநகர் சேவைகள் என மொத்தம் 1,607 பேருந்து சேவைகளில் மாத வாடகை அடிப்படையில் வணிக விளம்பரங்களை அனுமதிப்பதன் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டி வருகிறது. மேலும், பணிமனை வளாகச் சுவர்களில் விளம்பரங்கள் மூலமும் கூடுதல் வருவாய் ஈட்டப்படுகிறது.
- திருநெல்வேலி மண்டல தலைமை அலுவலகத்தில் 10 கிலோவாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய மின்தகடுகளும், கழகத் தலைமை அலுவலகத்தில் 15 கிலோவாட் திறன் கொண்ட சூரிய மின்தகடுகளும் நிறுவப்பட்டுள்ளதன் மூலம் மின்சாரச் செலவு சேமிக்கப்பட்டு வருகிறது.

## 2.16 பெண்களுக்கான கட்டணமில்லா பயணம்

- பெண்களுக்கான கட்டணமில்லா பயணத் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை அணுகுவதற்கான வாய்ப்பு மேம்படுத்தப்படுவதுடன், அன்றாடப் பயணச் செலவும் குறைக்கப்படுகிறது.
- 23.08.2026 நிலவரப்படி, பெண்கள் 1,023.18 கோடி கட்டணமில்லா பேருந்து பயணங்களை மேற்கொண்டுள்ளனர். 2026–2027 ஆம்

நிதியாண்டில், சராசரியாக நளொன்றுக்கு 71.70 இலட்சம் பெண்கள் பயணம் செய்துள்ளனர். இத்திட்டத்திற்குத் தகுதியான சாதாரணக் கட்டணப் பேருந்துகளில் பயணித்த மொத்த பயணிகளில் மகளிர் 68.64% ஆகும். இதுவரை வழங்கப்பட்ட கட்டணமில்லா பயணத்தின் ஒட்டுமொத்த மதிப்பு ரூ.16,408.19 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 7,537 சாதாரண நகர்ப்புறப் பேருந்துகளும் 173 சாதாரண மலைப்பாதைப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

- இச்சலுகை திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 23.08.2026 நிலவரப்படி, திருநங்கைகள் 54.14 இலட்சம் பயணங்களையும், மாற்றுத்திறனாளிகள் 813.81 இலட்சம் பயணங்களையும், அவருடைய உதவியாளர்கள் 41.54 இலட்சம் பயணங்களையும் மேற்கொண்டுள்ளனர். 2026–27-ஆம் நிதியாண்டில் திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், அவருடைய உதவியாளர்கள் ஆகியோருடைய தினசரி பயணங்கள் முறையே 2,662, 47,402 மற்றும் 2,060 ஆகும்.

### 3. பேருந்து நவீனமயமாக்கல்: புதிய பேருந்துகள் கொள்முதல், பேருந்துகள் புதுப்பித்தல்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறன், சுற்றுச்சூழல் செயல்திறன் மற்றும் பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு நிதியுதவியின் கீழ் 8,390 பேருந்துகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதில் 2,415 மின்சாரப் பேருந்துகள், 857 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகள் ஆகும். மீதமுள்ளவை டீசல் பேருந்துகள் ஆகும்.

| **நிதி உதவி / திட்டம்** | **எண்ணிக்கை** | **23.08.2026 அன்று வரை பெறப்பட்ட பேருந்துகள்** | **பெறப்பட வேண்டிய மீதமுள்ள பேருந்துகள்.** |
|---|---|---|---|
| மாநில அரசின் நிதி உதவி (2025-26) - டீசல் பேருந்துகள் | 2,254 | 2,254 | - |
| மாநில அரசின் நிதி உதவி (2025-26) - CNG பேருந்துகள் | 746 | 746 | - |
| 2025-26 கூடுதல் அளவு (CNG + டீசல்) | 809 | 464 | 345 |
| KfW - டீசல் பேருந்துகள் | 2,166 | 696 | 1,470 |

| **நிதி உதவி / திட்டம்** | **எண்ணிக்கை** | **23.08.2026 அன்று வரை பெறப்பட்ட பேருந்துகள்** | **பெறப்பட வேண்டிய மீதமுள்ள பேருந்துகள்.** |
|---|---|---|---|
| KfW – மின்சாரப் பேருந்துகள் | 500 | 0 | 500 |
| உலக வங்கி GCC – MTC மின்சாரப் பேருந்துத் திட்டம் – முதல் கட்டம் | 625 | 625 | - |
| உலக வங்கி GCC – MTC மின்சாரப் பேருந்துத் திட்டம் – இரண்டாம் கட்டம் | 750 | 0 | 750 |
| CMRL கடைக்கோடி பகுதிகளுக்கு – சிற்றுந்துகள் சேவை (GCC – MTC மின்சாரப் பேருந்துத் திட்டம்) | 220 | 0 | 220 |
| இணைப்புப் பேருந்து (GCC – MTC மின்சாரப் பேருந்துத் திட்டம்) | 300 | 0 | 300 |
| இரட்டை அடுக்குப் பேருந்து MTC மின்சாரப் பேருந்துத் திட்டம் | 20 | 0 | 20 |
| **மொத்தம்** | **8,390** | **4,785** | **3,605** |

**இத்திட்டத்தில் தாழ்தள நகரப் பேருந்துகள்** (Low-floor City Buses), **சாதாரண தள உயரம் கொண்ட நகரப் பேருந்துகள்** (Standard-floor Town Buses), **புறநகர் பேருந்துகள்** (Mofussil Buses), **மலைப்பாதை பேருந்துகள்** (Ghat Buses), **மைக்ரோ பேருந்துகள்** (Microbuses), **இணைப்பு சேவைப் பேருந்துகள்** (Feeder-

service Buses), பல அச்சு கொண்ட சொகுசுப் பேருந்துகள் (Multi-axle Luxury Buses) மற்றும் இரட்டைத் தள மின்சாரப் பேருந்துகள் (Double-decker Electric Buses) உள்ளிட்ட பல்வேறு வகை பேருந்துகளும் அடங்கும்.

மேலும், சேவையினை மேம்படுத்திடும் வகையில் தொடுதலில்லாப் பரிவர்த்தனைகள் மூலம் ஸ்மார்ட் டிக்கெட்டிங் மற்றும் ஜிபிஎஸ் உதவியுடன் நிகழ்நேரக் கண்காணிப்பு, தொழில்நுட்பம் சார்ந்த அட்டவணைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள பேருந்துகள் மற்றும் பேருந்து நிலையங்களுக்குள் சிசிடிவி கண்காணிப்பு மூலமாக பெண்கள், குழந்தைகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. மேலும், பல்வகை போக்குவரத்து ஒருங்கிணைப்பு (Multimodal Integration) பயண அட்டைகள் (Mobility Cards) மூலம் பயணிகளுக்கான மாற்றுப் பயணங்கள்

எளிதாக்கப்பட்டுள்ளன. உயர்தர சேவைகள், பேருந்தில் உள்ள வைஃபை மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்துச் செயலிகள் ஆகியவை போக்குவரத்தினை அணுகும் வசதியினை மேம்படுத்துகின்றன. இந்நடவடிக்கைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து, திறன்மிக்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற ஒரு பொதுப் போக்குவரத்து அமைப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**3.1 சர்வதேச நிதியுதவி திட்டங்கள்**

**i) KfW நிதியுதவியின் கீழ் டீசல் மற்றும் மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்தல்.**

இத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் ரூ.2,316 கோடி செலவில் 2,166 BS-VI தர டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இதில், மாநகர் போக்குவரத்துக் கழகம், மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி) ஆகிய ஏழு போக்குவரத்துக் கழகங்களுக்கு BS-VI தர டீசல் பேருந்துகள் கீழ்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன.

| போக்குவரத்துக் கழகங்கள் | டீசல் பேருந்துகள் | மின்சார பேருந்துகள் |
|---|---|---|
| மா.போ.க., | 497 | 320 |
| விழுப்புரம் | 365 | 0 |
| சேலம் | 313 | 0 |
| கோயம்புத்தூர் | 226 | 80 |
| கும்பகோணம் | 329 | 0 |
| மதுரை | 373 | 100 |
| திருநெல்வேலி | 63 | 0 |
| **மொத்தம்** | **2166** | **500** |

மேலும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு 500 மின்சாரப் பேருந்துகள் ஒதுக்கப்பட்டு உள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான மென்பொருள் மற்றும் வன்பொருள் உட்கட்டமைப்பு, பயணியர் தகவல் அமைப்புகள் மற்றும் செயல்பாட்டு மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த தீர்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலாம் கட்டத்தின் கீழ், 552 BS-VI தர தாழ்தள (Low-floor) பேருந்துகள் ஏற்கனவே பொதுப் போக்குவரத்து சேவையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 1,614 BS-VI தர நிலையான தள (Standard-

floor) பேருந்துகளின் இறுதி ஆய்வு 20.05.2026 அன்று நிறைவடைந்துள்ளது. இவையனைத்தும் விரைவில் இயக்கத்திற்கு கொண்டு வரப்படும்.

மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்களின் கீழ், KfW நிதியுதவியுடன் கூடுதலாக 9,161 பேருந்துகள் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 7,661 டீசல் பேருந்துகள் மற்றும் 1,500 மின்சாரப் பேருந்துகள் அடங்கும். இக்கட்டங்களுக்கான ஒப்பந்தம், எதிர்கால செயல்படுத்தல் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண். | நிதியுதவி | டீசல் பேருந்துகளின் எண்ணிக்கை | மின்சாரப் பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) - மூன்றாம் கட்டம் | 2369 | 750 |
| 2. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) - நான்காம் கட்டம் | 2369 | 650 |
| 3. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) - ஐந்தாம் கட்டம் | 2923 | 100 |

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டத்திற்கான திருத்தப்பட்ட மொத்தத் திட்ட மதிப்பீடு 2,658.88 கோடியாகும். இத்தொகை பேருந்துகள் கொள்முதல், மின்சாரப் பேருந்து பணிமனைகளில் (Electric Bus Depots) கட்டுமானம் மற்றும் மின்சாரப் பணிகள், ERP, ICT பின்தள மென்பொருள், ஆலோசனைச் சேவைகள், திட்ட செயலாக்க அலகு (Project Implementation Unit) அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம், KfW கடனுதவியின் கீழ் ரூ.1,667.20 கோடி, மானியமாக ரூ.21.52 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு மூலதனமாக ரூ.970.16 கோடி மூலம் செயல்படுத்தப்படுகிறது. 09.07.2026 நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் ரூ.835.20 கோடி நிதி பெறப்பட்டு, ரூ.682.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் – கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் – மதுரை ஆகியவற்றில்

நிறுவன வளத் திட்டமிடல் (ERP) அமைப்பை செயல்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- MTC மற்றும் SETC-ஐத் தவிர, ஆறு போக்குவரத்துக் கழகங்களில் (STUs) ICT (Information and Communication Technology) பின்தள மென்பொருள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 2,309 பேருந்துகள் ICT பின்தள அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

KfW கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், நிலையான பேருந்துப் போக்குவரத்திற்கான ஒருங்கிணைந்த நவீனமயமாக்கலின் கீழ், புதிய பேருந்துகள் கொள்முதல், பணிமனை உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் அமைப்புகள் ஆகியவற்றை ஒரே திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கிறது.

**ii) JICA உதவியுடன் சென்னையில் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (MTC)**

மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், ரூ.136 கோடி மதிப்பீட்டில், 51% JICA மற்றும் 49% தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் சென்னை நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (CITS) – நகரப் பேருந்து அமைப்பு (CBS)

திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தானியங்கி வாகன இருப்பிடக் கண்காணிப்பு அமைப்பு (AVLS), பயணிகள் தகவல் காட்சி அமைப்பு (PIS), பணிமனை மேலாண்மை அமைப்பு (DMS), பணியாளர் கைபேசி செயலி, தரவு மையம் (Data Centre) மற்றும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு மையம் (Integrated Command & Control Centre – ICCC) ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் (CSCL) மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், திட்டப் பணிகளின் முன்னேற்றப்படி நிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்ததாரருக்கு CSCL மூலம் பணம் வழங்கப்படுகிறது.

31.07.2026 நிலவரப்படி, MTC-யின் அனைத்து பேருந்துகளிலும் Onboard Unit (OBU) கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. 33 பணிமனைகளிலும் Depot Management System (DMS) மற்றும் பணியாளர் கைபேசி செயலி செயல்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் தகவல்

காட்சி அமைப்பின் கீழ் 605/616 இடங்களில் காட்சிப் பலகைகள் நிறுவ திட்டமிடப்பட்டதில், 500/500 இரு வரி (Two-Line), 95/96 நான்கு வரி (Four-Line) மற்றும் 10/20 பத்து வரிக் (Ten-Line) காட்சிப் பலகைகள் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு மையம் (ICCC) அமைக்கும் பணி தற்போது ஒப்பந்தப்புள்ளி (Tender) பரிசீலனை நிலையில் உள்ளது.

இத்திட்டம் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்தவுடன், நாளொன்றுக்கு சுமார் 35 லட்சம் பயணிகள் நேரடி பேருந்து வருகை தகவல், மேம்பட்ட பேருந்து இயக்க மேலாண்மை, சேவை நம்பகத்தன்மை மற்றும் சிறந்த பயணிகள் சேவைகளைப் பெறுவார்கள். மீதமுள்ள பயணிகள் தகவல் காட்சிப் பலகைகள் நிறுவுதல், ICCC அமைத்தல், அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மற்றும் இறுதி Go-Live நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**iii) உலக வங்கி நிதியுதவியுடன் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சேவையினை மேம்படுத்துவதற்கான திட்டம்**

உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின் (Chennai City Partnership Programme) கீழ், பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தம் (Public Transport Service Contract) ஒரு முக்கிய அங்கமாகும். தமிழ்நாடு அரசுக்கும் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வொப்பந்தம், பேருந்து இயக்கத் திறனை மேம்படுத்துதல், செயல்திறன் அடிப்படையிலான வெளிப்படையான நிதி வழங்கல் முறையை ஏற்படுத்துதல் மற்றும் புதுமையான இயக்க மாதிரிகள் (Innovative Operating Models) மூலம் புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ.959.40 கோடி ஆகும். இதில் 70 சதவீத நிதியை

உலக வங்கியும் மீதமுள்ள 30 சதவீதம் தமிழ்நாடு அரசும் வழங்குகிறது. பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தம் (Public Transport Service Contract) மேற்கொள்ளப்பட்டு, இவ்வொப்பந்தத்தின் கீழ், இடைவெளி நிதியுதவியை (Viability Gap Funding) தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

பொதுப் போக்குவரத்துச் சேவை ஒப்பந்தத்தின் கீழ், முக்கிய செயல்திறன் குறியீடுகளை (KPIs) எட்டியதன் அடிப்படையில், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் நிதி இடைவெளி மானியமாக (VGF), 2023–24 நிதியாண்டில் **ரூ.31.36 கோடியும்**, 2024–25 நிதியாண்டில் **ரூ.391.49 கோடியும்**, 2025–26 நிதியாண்டில் **ரூ.392.42 கோடியும்** பெற்றுள்ளது.

இதன் முதல் கட்டமாக, மொத்த செலவு ஒப்பந்த (Gross Cost Contract – GCC) முறையின் கீழ், 5 பணிமனைகளில் இருந்து 625 மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக (Phase II), மொத்த செலவு ஒப்பந்த (Gross Cost Contract – GCC) முறையின் கீழ், 7 பணிமனைகளில் (Depots) இருந்து மேலும் 750 மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.2 ஒன்றிய அரசின் நிதிஉதவித் திட்டங்கள் – பெண்களுக்கான பாதுகாப்பு நகரத் திட்டம் (Women Safe City Project)

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் நிர்பயா (Nirbhaya) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பெண்களுக்கான பாதுகாப்பு நகரத் திட்டம் (Safe City Project), பேருந்துகள், பேருந்து முனையங்கள், பணிமனைகள் (Depots) மற்றும் பிற பொதுப் போக்குவரத்து வளாகங்களை பெண்களுக்கு பாதுகாப்பானதாக மாற்றுவதையும், பாலின அடிப்படையிலான வன்முறை அல்லது இடையூறு குறித்த அச்சமின்றி பாதுகாப்பானப் பயணம் மேற்கொள்வதற்கும், பல்வேறு வாய்ப்புகளை

அணுகுவதற்கும் ஏதுவான சூழலை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2,500 பேருந்துகள், 66 பேருந்து முனையங்கள், பணிமனைகள் மற்றும் பிற அலகுகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் (Surveillance Cameras) பொருத்தப்படுகின்றன. மேலும், அவசரகாலங்களில் மாநகர் போக்குவரத்துக் கழகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்காக அவசர அழைப்பு பொத்தான்கள் (Panic Buttons) அமைக்கப்பட்டுள்ளன. மாநகர் போக்குவரத்துக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (Command & Control Centre), 2,500 பேருந்துகளின் இயக்கத்தை நிகழ்நேரத்தில் கண்காணித்து, அவசரநிலை பொத்தான் (Panic Button) செயல்படுத்தப்படும் இனங்களில் தொடர் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

இத்திட்டத்திற்கு ரூ.72.71 கோடிக்கு மத்திய அரசும் மாநில அரசும் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் நிதியுதவி வழங்குகின்றன. இத்தொகையில் இதுவரை ரூ.55.94 கோடி

பெறப்பட்டுள்ளதுடன், ரூ.49.68 கோடி செலவிடப்பட்டுள்ளது. 31.07.2026 அன்றுள்ளவாறு, 2500 பேருந்துகளில் 1,711 பேருந்துகள் மேலாண்மை அமைப்பில் (Management System) இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 789 பேருந்துகளில் இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அடையாளம் காணப்பட்ட 66 பணிமனை மற்றும் பேருந்து நிலையங்களில், 47 இடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

**3.3 மின் ஆளுமை மற்றும் சிறந்த சேவை வழங்கல் அமைப்பு**

**i) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு முறை (OTRS)**

தற்போது பயணிகள் அதிகாரப்பூர்வ இணையதளம் (https://www.tnstc.in), கைப்பேசி செயலி (TNSTC), உரிமம் பெற்ற முன்பதிவு மையங்கள் மற்றும் பயணச் சேவை ஒருங்கிணைப்பாளர்கள் (Travel Aggregators) மூலம் பயணச்சீட்டுகளை 90 நாட்களுக்கு முன்பிருந்தே முன்பதிவு செய்யலாம்.

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில், 65 இடங்களில் OTRS–இன் உரிமம் பெற்ற முன்பதிவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது, இணையவழியில் 4,927 பேருந்துகள் மூலம் சுமார் 2.45 இலட்சம் இருக்கைகள் முன்பதிவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு சராசரியாக 20,930 இருக்கைகள் முன்பதிவு செய்யப்படுகின்றன; அதிகபட்சமாக 42,898 இருக்கைகள் ஒரே நாளில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

OTRS-ஐ அணுகுவதை விரிவுபடுத்தும் நோக்கில், கூடுதல் பயண ஒருங்கிணைப்பாளர் (Travel Aggregator) தளங்களுடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போதுள்ள கைபேசி செயலி, பயணிகளை மையமாகக் கொண்ட கூடுதல் வசதிகள் மற்றும் எளிமையான தேடுதல் அம்சங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**(ii) தானியங்கி கட்டண அமைப்பு (Automatic Fare Collection System – AFCS)**

தானியங்கி கட்டண வசூல் முறை Automatic Fare Collection System (AFCS) மூலம், கடன் அட்டை, பற்று அட்டை, QR குறியீடு, UPI, தேசிய பொதுப் போக்குவரத்து அட்டை (NCMC) மற்றும் மொபைல் வாலெட்டுகள் வழியாக கட்டணம் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை பணப் பரிவர்த்தனை மற்றும் வருவாய் கசிவைக் குறைத்து, நிகழ்நேர பரிவர்த்தனை கண்காணிப்பு மற்றும் செயல்பாட்டு முடிவுகளுக்கான தரவுகளை வழங்குகிறது. தற்போது, டிஜிட்டல் பயணச்சீட்டு பரிவர்த்தனைகள் SETC-இல் 31%, MTC-இல் 20% மற்றும் பிற அரசு போக்குவரத்துக் கழகங்களில் 10% ஆக உள்ளன.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் எந்த மூலதன முதலீடும் செய்யாமல், 10 ஆண்டுகளுக்கு மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் (Electronic Ticketing Machines) மற்றும் மென்பொருள், அவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்பு சேவைகள் பெறுவதற்காக, பாரத

ஸ்டேட் வங்கி அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) ஏற்படுத்தியுள்ளது. இதற்காக, அரசு போக்குவரத்துக் கழகங்கள், தேவையான பணிமனை (Depot), உட்கட்டமைப்பு வசதிகளையும் பயணச்சீட்டுகளையும் வழங்குகிறது

தேசிய பொதுப் போக்குவரத்து அட்டை (NCMC) மற்றும் தானியங்கி கட்டண வசூல் முறை (AFCS) திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் (MTC), 'சிங்கார சென்னை NCMC' அட்டையை, பல்வேறு போக்குவரத்து முனைகளிலும் (Multimodal) தடையற்ற கட்டணம் செலுத்தும் வசதியையும், நிகழ்நேர வருவாய் கண்காணிப்பு வசதியையும் வழங்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கார சென்னை NCMC' அட்டை, விரைவான பரிவர்த்தனைகளுக்கான ஆஃப்லைன் வாலெட் அட்டையாக செயல்படுகிறது. இதனை பிற அரசு

போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், AFCS பரிவர்த்தனைத் தரவுகள், வழித்தட சீரமைப்பு (Route Rationalisation) மற்றும் எதிர்கால போக்குவரத்து சேவைகளைத் திட்டமிடுதல் ஆகியவற்றிற்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்படும்.

**iii) மின்னணு முறையில் ஏலமிடுதல்**

தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களினால் கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் தொடர்புடைய பொருட்களையும் அகற்றுவதற்கு, ஒரு முறையான மின்னணு ஏல முறையைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த டிஜிட்டல் அணுகுமுறை வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த ஏலத்தை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், சிறந்த விலையினையும் பெற்றுத் தருகிறது. குறிப்பாக, 2026–27 ஆம் நிதியாண்டில் **(ஜூலை 2026 வரை)**, கழிவு செய்யப்பட்ட பேருந்துகள், உதிரிப் பொருட்கள் மற்றும் தொடர்புடைய

பொருட்களை **மின்னணு ஏலம் (e-Auction)** விற்பனை செய்ததன் மூலம் **ரூ.2,892.62 இலட்சம்** வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**(iv) பயணத் திட்டமிடல் செயலி**

JICA உதவியுடன் செயல்படுத்தப்படும் CITS-CBS திட்டத்தின் கீழ், பயணிகளுக்கு பேருந்துகளின் நிகழ்நேர தகவல்களை வழங்குவதற்கும், அவர்களின் பயணத் திட்டமிடலை மேலும் எளிதாக்குவதற்கும் பயணியர் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு வருகிறது.

**(v) சென்னை ஒன் செயலி**

சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையத்தால் (CUMTA) உருவாக்கப்பட்ட 'சென்னை ஒன் செயலி, ஒருங்கிணைந்த போக்குவரத்து தளமாக செயல்பட்டு, ஒரே கைபேசி செயலியின் மூலம் பயணிகள் மாநகர் பேருந்து, சென்னை மெட்ரோ இரயில் மற்றும் புறநகர் மின்சார இரயில் சேவைகளை தடையற்ற முறையில் அணுகுவதற்கு வழிவகை செய்கிறது.

இந்த செயலி, பல்வேறு போக்குவரத்து முனைகளை ஒருங்கிணைத்து பயணத் திட்டமிடல், (multimodal

journey planning) பேருந்துகளின் நிகழ்நேர கண்காணிப்பு, மின்னணு பயணச்சீட்டு மற்றும் பேருந்து பயண அட்டை (Bus Pass) பெறுதல், பணமில்லா பரிவர்த்தனைகள் மற்றும் QR குறியீடு அடிப்படையிலான பயணச்சீட்டு சரிபார்ப்பு ஆகிய வசதிகளை வழங்குகிறது. இதன் மூலம் பயணச்சீட்டு பெறும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப் போக்குவரத்து தொடர்பான தகவல்களை எளிதில் அணுகும் வாய்ப்பும் மேம்படுத்தப்படுகின்றன. 31.07.2026 நிலவரப்படி, இச்செயலி மூலம் 19,67,450 பதிவிறக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், செப்டம்பர் 2025 முதல் ஜூலை 2026 வரையிலான காலகட்டத்தில், இத்தளத்தின் மூலம் 1,75,23,346 மின்னணு பயணச்சீட்டுகளும், 3,48,795 மின்னணு பயண அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. இது அரசின் ஒருங்கிணைந்த டிஜிட்டல் போக்குவரத்து முன்னெடுப்பை பொதுமக்கள் பெருமளவில் ஏற்றுக்கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

**(vi) ஒருங்கிணைந்த பயணிகள் குறைகள் மற்றும் புகார் தீர்வு உதவி மையம்**

24 x 7 குறைதீர் சேவை மூலம் பயணிகளுக்கு உடனடி உதவி வழங்கப்படுவதுடன், பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொதுப் போக்குவரத்து சேவைகள் வழங்கப்படுவதற்கும் இது துணைபுரிகிறது.

"149" என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் தொடர்புகொள்ளக்கூடிய 'ஒருங்கிணைந்த பயணிகள் குறைதீர்ப்பு மற்றும் புகார் தீர்வு உதவி மையம்', மாநிலத்தின் அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையமாகத் திகழ்கிறது. இதற்கென நியமிக்கப்பட்ட பணியாளர்கள், பயணத்தின்போது அல்லது பேருந்து நிறுத்தங்கள் மற்றும் நிலையங்களில் காத்திருக்கும் பயணிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரும் அழைப்புகளுக்கு விரைவாகப் பதிலளித்து உதவுகின்றனர். இம்முறையைப் பயன்படுத்திப் பயணிகள் புகார்களைப் பதிவு செய்யவும், குறைகளைத் தெரிவிக்கவும் அல்லது தகவல்களைப் பெறவும் இயலும்.

ஒவ்வொரு புகாரும் சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு, அந்த புகாருக்கென ஒதுக்கப்பட்ட பயனர் அடையாள எண்ணின் (User ID) மூலம் கண்காணிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்படுகிறது.

இவ்வுதவி மையத்தின் மூலம் பேருந்து இயக்கம், பேருந்து நிலையங்கள், பணியாளர்களின் நடத்தை தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம். மேலும், சிறப்பு பேருந்து இயக்கங்கள் குறித்த தகவல்களும் வழங்கப்படுகிறது.

ஜூலை 2026 வரை ஒருங்கிணைந்த உதவி மையத்தின் மூலம், பெறப்பட்ட 94,007 புகார்களில் 99% தீர்வு காணப்பட்டுள்ளது.

**(vii) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான வலைதளம் (Arasu Bus).**

பயணிகள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 'அரசு பஸ்' Arasu Bus மின்னஞ்சல் (www.arasubus.tn.gov.in) என்ற ஒருங்கிணைந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம், MTC இணையதளம், Chennai Bus App, ஆன்லைன் பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பு (Online Ticket Reservation System), தமிழ்நாடு அரசு, சாலைப் போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport), தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் (Tamil Nadu Transport Development Finance Corporation) மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (Chennai Metro Rail Limited) ஆகியவற்றின் இணையதளங்களுக்கான இணைப்புகளையும் (Link) வழங்குகிறது.

**(viii) அரசு பஸ்–சமூக ஊடகம் – எக்ஸ் தளம் (X Platform)**

@arasubus என்பது 'X' தளத்தில் அதிகாரப்பூர்வ சமூக ஊடகக் கணக்காகச் செயல்படுகிறது. போக்குவரத்துத் துறை மற்றும் அரசு போக்குவரத்து நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் செய்திகள், சிறப்புப் பேருந்து இயக்கங்கள், அறிவிப்புகள், அரசாணைகள் (GOs) மற்றும் செய்தி வெளியீடுகள் போன்ற முக்கியத் தகவல்களைப் பகிர்வதற்கான ஒரு தளமாக விளங்குகிறது. பயணிகளுக்கு இத்தகவல்கள்

விரைவாகவும் பரவலாகவும் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில், இப்பதிவுகள் @TNDIPRNEWS மற்றும் செய்தி ஊடகங்களின் கணக்குகளுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இத்தளம் பயணிகளின் கேள்விகள், புகார்கள் மற்றும் குறைகளுக்குத் தீர்வு காண உதவுகிறது. மேலும், இது பொதுப் போக்குவரத்தின் நன்மைகள், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பயணம் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை ஊக்குவிப்பதோடு, சிறப்புச் சேவைகள் மற்றும் சலுகைகளையும் எடுத்துக்காட்டுகிறது. X தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம், அரசு பஸ் தனது பயனர் தளத்துடன் வெளிப்படையான, அணுகக்கூடிய மற்றும் செயலூக்கமான தகவல்தொடர்பை வளர்க்கிறது.

**(ix) இணையதளத்தின் மூலம் பேருந்து அட்டை**

**அ) மாற்றுத்திறனாளிகள், விடுதலை போராட்ட வீரர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் விருது வென்றவர்கள்**

இணையதளபேருந்து பயணஅட்டை வழங்கும் அமைப்பு (Online Bus Pass Issuing System), பயண அட்டைக்கான

விண்ணப்பித்தல், புதுப்பித்தல் மற்றும் பயண அட்டை நிர்வாகம் ஆகிய செயல்முறைகளை மின்னணுமயமாக்குகிறது. விண்ணப்பதாரர்கள் தேவையான ஆவணங்களைப் பதிவேற்றம் செய்து, பாதுகாப்பான முறையில் இணையவழி பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம். மேலும், பயண அட்டைகளில் அச்சிடப்பட்டுள்ள QR குறியீடுகள் மூலம் நடத்துநர்கள் அவற்றை சரிபார்க்க இயலும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) மென்பொருள் ஆதரவுடன், இவ்வசதி முதலில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் மீதமுள்ள 6 அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இவ்வசதியின் கீழ் அறிவுசார் குறைபாடு அல்லது இயக்கத்திறன் குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளிகள், பார்வைக் குறைபாடுள்ளவர்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகள், தமிழறிஞர்கள், தமிழ் விருது பெற்றவர்கள் மற்றும் கலைமாமணி விருது பெற்றவர்கள் ஆகியோர் பயனடைகின்றனர்.

**ஆ) பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பயண அட்டை**

2024-25-ஆம் கல்வியாண்டிற்கு முன்பு, தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து பயண அட்டைகள், பள்ளிகள் வாயிலாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, அச்சிடப்பட்டு விநியோகத்திற்காகப் பள்ளிகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

2024-25 கல்வியாண்டு முதல், இச்செயல்முறை EMIS இணையதளம் மூலம் மின்னணுமயமாக்கப்பட்டது. 2023-24 கல்வியாண்டில் 20.00 இலட்சம் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்ட நிலையில், 2024-25 கல்வியாண்டில் சுமார் 35 இலட்சம் பேருந்து பயணஅட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

2025-26 கல்வியாண்டில், EMIS மூலம் 60.08 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கு பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டன. இது முந்தைய கல்வியாண்டை விட 35.00 இலட்சம் அதிகமாகும்; இதனுடன், கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிலைய (ITI) மாணவர்களுக்கு EMIS

மூலம் மேலும் 2.03 இலட்சம் பயண அட்டைகள் வழங்கப்பட்டன.

**இ) காவல் துறையினருக்கான** பயண அட்டை

ஆய்வாளர் (Inspector) பதவி வரையிலான சுமார் 1.24 இலட்சம் காவல்துறை பணியாளர்கள், தங்களது காவல் நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திற்குள் பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட காவல் நிலையங்கள், காவல்துறை பணியாளர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்து, அதற்குரிய பேருந்து பயண அட்டைகளைப் பதிவிறக்கம் செய்யும் வகையில், காவல்துறை மற்றும் TNeGA ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இணையவழி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

**(x) கைவிரல் ரேகை வருகைப்பதிவு முறை**

**கைவிரல் ரேகை** வருகைப் பதிவு அமைப்பு (Biometric Attendance System) என்பது, கைரேகை அல்லது முக அடையாளச் சரிபார்ப்பு மூலம் பணியாளர்களின் வருகையைத் துல்லியமாகப் பதிவு செய்து, அவர்கள் உரிய நேரத்தில் பணிக்கு வருவதை

உறுதி செய்வதன் மூலம் பணியாளர் நிர்வாகத்தை மேம்படுத்துகிறது. ஊதியப் பட்டியல் அமைப்புடன் ஒருங்கிணைப்பதன் மூலம் துல்லியமான சம்பளக் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு, நிர்வாகப் பணிச்சுமையும் செலவும் குறைக்கப்படுகின்றன.

அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், பணிமனைகள், பழுதுபார்ப்பு நிலையங்கள் (WORKSHOP), பயிற்சி மையங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்புகள் பாதுகாப்பான நிகழ்நேரக் கண்காணிப்பு வசதியை வழங்குவதுடன், 100% பணியாளர்களையும் உள்ளடக்கியதாக செயல்படுத்தப்பட்டுள்ளன.

**(xi) கண்காணிப்பு கேமரா (CCTV) பாதுகாப்பு அமைப்பு**

CCTV கண்காணிப்பு அமைப்பு, பேருந்துகள், பணிமனைகள், பழுதுபார்ப்பு நிலையங்கள், தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் மற்றும் பிற

அலகுகள் உள்ளிட்ட போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் சொத்துகளை கண்காணிப்பதன் மூலம், அவற்றின் உடைமைகளுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது.

இரவு நேரத்திலும் தெளிவாகக் காணக்கூடிய கேமராக்கள் (Night-Vision Cameras) மூலம் 24 x 7 கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படாத நுழைவு தடுக்கப்படுவதுடன், சம்பவங்கள் தொடர்பான ஆய்விற்குத் தேவையான காணொளி ஆதாரங்களும் பாதுகாக்கப்படுகின்றன. மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு மையங்கள் மூலம் நேரடி கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் வளாகங்களின் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் CCTV பாதுகாப்பு அமைப்புகள் 83.48% அளவிற்கு நிறைவு பெற்றுள்ளன.

**(xi) ஓய்வூதியதாரர்கள் உயிர்வாழ் சான்றிதழை இணையத்தின் வாயிலாக சமர்ப்பித்தல்**

இணையவழி மூலம், ஓய்வூதியதாரர்கள் தங்களது தொடர்ச்சியான தகுதியை உறுதிப்படுத்திக் கொள்ள, இல்லங்களிலிருந்தோ அல்லது அருகிலுள்ள மின்னணு சேவை மையங்களிலிருந்தோ பதிவேற்றம் செய்ய தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA), பிரத்யேக இணையதளத்தை உருவாக்கியுள்ளது. இது ஆவணப் பணிகளையும் நிர்வாகத் தாமதங்களையும் குறைப்பதுடன், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் ஓய்வூதியதாரர்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது. நிகழ்நேரச் சரிபார்ப்பு மூலம் ஓய்வூதியம் உரிய காலத்தில் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுவதுடன், தவறுகள் மற்றும் மோசடியான கோரிக்கைகள் குறைக்கப்பட்டு, இச்செயல்முறைக்கான நிர்வாகச் செலவும் குறைகிறது.

இதன் மூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 1,00,172 ஓய்வூதியதாரர்கள் தங்களது வாழ்நாள் சான்றிதழ்களை இணையவழியில் சமர்ப்பிக்க முடியும். குறியாக்கம் (Encryption) மற்றும் பல–காரணி

அங்கீகாரம் (Multi-Factor Authentication) ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஓய்வூதியதாரர்களின் தகவல்களைப் பாதுகாக்கின்றன. இணையதளம் மூலம் வாழ்நாள் சான்றிதழ்களைச் சமர்ப்பித்த ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை, தற்பொழுது 5,520 ஆக உள்ளது.

**(xiii) மின் அலுவலக (e-Office) போக்குவரத்துத் துறையின் செயல்பாடு**

TNeGA மூலம், தமிழ்நாடு அரசு, தேசிய தகவலியல் மையத்தின் (NIC) e-Office பயன்பாட்டை அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தி வருகிறது. இம்முறை, காகித அடிப்படையிலான கோப்பு நகர்வுக்கு மாற்றாக தானியங்கி முறையை அறிமுகப்படுத்தி, கோப்புகளை விரைவாகச் செயல்படுத்தவும், முடிவெடுக்கும் செயல்முறையை மேம்படுத்தவும், கோப்பு நகர்வைத் கண்காணிக்கவும் உதவுகிறது. குறியாக்கம் (Encryption) மற்றும் அணுகல் கட்டுப்பாடு மூலம் அரசு அலுவல் தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், காகிதப் பயன்பாடு

குறைவதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிர்வாகத்தை தருகிறது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை ஆகிய அனைத்திலும் e-Office செயல்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்த அலுவலகங்களின் கோப்புகளில் ஒரு பகுதி தற்போது மின்னணு முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழக அலுவலகத்திற்குள் கோப்புகள் நகர்த்தப்படும் நடைமுறை 100% மின்னணுமயமாக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறையில் கோப்புகளை கையேடு முறையில் நகர்த்தும் நடைமுறையை படிப்படியாக நீக்கி, நிர்வாகச் சேவை வழங்கலை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**3.4 பழைய பேருந்துகளை முழுமையாக புதுப்பித்தல்**

பயணிகளின் வசதியை மேம்படுத்துவதற்கும், பேருந்துகளின் இயக்க காலத்தை நீட்டிப்பதற்கும்,

நிர்ணயிக்கப்பட்ட தகுதி வரம்பிற்குள் வரும் பழைய பேருந்துகளை முழுமையாக மறுசீரமைத்தல் பணிகளை கழகங்கள் மேற்கொண்டு வருகிறது. சேதமடைந்த பேருந்துகளுக்கு மறுகூண்டமைப்புகள் பொருத்துதல், முழுமையாக வண்ணம் பூசுதல், முகப்பு, பின் மற்றும் உட்புற விளக்குகளை மாற்றுதல், பயணிகளின் இருக்கைகளை அதிக வசதி உடையதாக மாற்றுதல், புதிய தரைத்தளம் அமைத்தல் மற்றும் வெப்பத் தடுப்புத் திறனையும் பேருந்தின் ஒட்டுமொத்த தோற்றத்தை மேம்படுத்தல் ஆகியவை புதுப்பித்தல் பணிகளில் அடங்கும்.

2025–26 ஆம் நிதியாண்டில், மொத்தம் 761 பேருந்துகள் முழுமையாக புதுப்பித்தலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில், 23.08.2026 நிலவரப்படி 655 பேருந்துகளில் பணிகள் நிறைவடைந்துள்ளது. இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள், சேவையில் இயக்கத் தொடங்கிய நாளிலிருந்து மேலும் ஐந்து ஆண்டுகள் இயக்கப்படும்.

## 3.5 பழைய பேருந்துகளின் தோற்றப் பொலிவேற்றம் (Facelifting)

அடித்தளம் (Chassis) நல்ல நிலையில் இருந்தும், உடற்கூண்டு (Body) மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருந்த 1,419 பேருந்துகளுக்கு, **தோற்றப் பொலிவேற்றம்** (Face Lifting) பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணிகளில், பேருந்துகளின் அடித்தளம், படிக்கட்டுகள் (Footboards), பாதுகாப்புக் கதவுகள், மேற்கூரை, முன், பின் மற்றும் பக்கவாட்டு தகடுகள் (Body Panels), ஜன்னல்கள் மற்றும் பயணிகள் இருக்கைகள் ஆகியவற்றை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் அடங்கும். இத்திட்டம், பயணிகளின் பாதுகாப்பையும் வசதியையும் மேம்படுத்துதல், பழைமையான பேருந்துகளின் தோற்றம் மற்றும் செயல்திறனை உயர்த்துதல், குறைந்த செலவில் தற்போதுள்ள பேருந்துகளை நவீனமயமாக்குதல், அரசுப் பேருந்துச் சேவைகள் குறித்த பொதுமக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் உயர்த்துதல் மற்றும்

பேருந்துகளின் செயல்பாட்டு ஆயுளை குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் வரை நீட்டித்தல் ஆகிய நோக்கங்களுடன் செயல்படுத்தப்படுகின்றன.

## 3.6 பயணிகளின் பாதுகாப்பு: முன்னெடுப்புகள் மற்றும் நடவடிக்கைகள்

### 3.6.1 பேருந்துகளில் கதவுகள் பொருத்துதல்

பயணிகள் பேருந்தில் பயணம் மேற்கொள்ளும்போது படிக்கட்டிலிருந்து தற்செயலாக கீழே விழுதல் மற்றும் காயம் ஏற்படுதல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் தடுப்பாக பாதுகாப்புக் கதவுகள் செயல்படுகின்றன. இதன் மூலம், நகரும் பேருந்துகளில் ஏறுதல், இறங்குதல், படிக்கட்டுப் பயணம் மற்றும் திருட்டு போன்றவற்றைத் தடுக்க உதவுகின்றன.

பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்க, அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் பேருந்துகளில் படிப்படியாக பாதுகாப்புக் கதவுகளை பொருத்தி வருகின்றன. 21,198 பேருந்துகளில், 98.54% பேருந்துகளில் பாதுகாப்புக் கதவுகள்

பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குழந்தைகள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற பயணிகள் பாதுகாப்பாக பேருந்தில் ஏறி இறங்குவது உறுதி செய்யப்படுகிறது.

ஆறு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 100% பாதுகாப்புக் கதவு பொருத்தும் இலக்கை எட்டியுள்ளன. மாநகர் போக்குவரத்துக் கழகம் 95.06% அளவிற்கு பாதுகாப்புக் கதவுகளைப் பொருத்தியுள்ளது. மீதமுள்ள 170 பேருந்துகள் சிற்றுந்துகள் ஆகும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை (TNSTC–Madurai) சுமார் 94% அளவிற்கு பாதுகாப்புக் கதவுகளைப் பொருத்தியுள்ளது.

### 3.6.2 பேருந்துகளில் பக்கவாட்டு பாதுகாப்பு அலகு

பேருந்துகளில் பக்கவாட்டு பாதுகாப்பு அலகு அமைப்புகள்' (SUPUs), பாதசாரிகள், மிதிவண்டி ஓட்டுநர்கள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டுநர்கள் உள்ளிட்டோரைப் பாதுகாக்கின்றன. பேருந்தில் பயணிகள் ஏறும்போதோ, இறங்கும்போதோ அல்லது

விபத்து ஏற்படும் நேரத்திலோ, விபத்திற்குள்ளாகும் நபர்கள் அல்லது சிறிய வாகனங்கள் பேருந்தின் அடிப்பகுதிக்குள் செல்வதையோ அல்லது அதன் பின்சக்கரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதையோ தடுப்பதன் மூலம், கடுமையான காயங்கள் ஏற்படுவது அல்லது உயிரிழப்புகளைத் தடுக்கின்றது.

பேருந்துகளில் பக்கவாட்டு பாதுகாப்பு அலகு அமைப்புகள்' (SUPUs), விபத்துகளின் போது பேருந்தின் கட்டமைப்பில் ஏற்படும் சேதத்தையும் குறைக்க உதவுகின்றன.

அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள 10,341 நகரப் பேருந்துகளில் 8,408 பேருந்துகளுக்கு, அதாவது 81.31% பேருந்துகளுக்கு, 'பக்கவாட்டு அடியில் சிக்காமல் தடுக்கும் அமைப்புகள்' பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,933 பேருந்துகள் தாழ்தளப் பேருந்துகள் என்பதால், SUPUs பொருத்துவதற்கு தகுதியான தரைத்தள உயரம் கொண்ட

நகரப் பேருந்துகள் அனைத்தும் 100% அளவில் பாதுகாப்பு வசதியுடன் கொண்டுவரப்பட்டுள்ளன.

மேலும், SUPUs வசதியை புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

### 3.7 நீண்ட தூர மற்றும் நகரப் பேருந்துகளுக்கிடையே இணைப்பை மேம்படுத்துதல்

நெடுந்தூரப் பேருந்துகளுக்கும் நகரப் பேருந்துகளுக்கும் இடையேயான இணைப்பை மேம்படுத்தி, பயணிகளுக்குத் தடையற்ற மற்றும் வசதியான பயண அனுபவத்தை வழங்குவதற்காக ஒருங்கிணைந்த இணைப்பு பயணச்சீட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தொலைதூரப் பேருந்துகள் புறப்படுவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்னதாகவோ அல்லது வந்து சேர்ந்த பிறகு நான்கு மணி நேரம் வரையோ செல்லுபடியாகும் வகையில் அமைந்துள்ளன. சென்னையில் ரூ.40 மற்றும் கோயம்புத்தூரில் ரூ.30 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பயணச் சீட்டுகள், OTRS சேவையின் மூலம் தொலைதூர

பயணத்திற்கான பயணச்சீட்டுடன் முன்பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது வரை, இவ்வசதியை 3,16,907 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர்.

போக்குவரத்து வசதியில்லாத கடைக் கோடி பகுதிகளுக்கு போக்குவரத்து இணைப்பை வழங்குவதற்கு நீண்ட தூரப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்துவதன் மூலம், மொத்தப் பயணச் சிரமத்தைக் குறைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் இது உதவுகிறது.

### 3.8 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பேருந்து கட்டணம் தவிர்த்து பிற வருவாயினை அதிகரிப்பதற்கான முயற்சிகள்

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தங்களது பேருந்துகள் மற்றும் அசையாச் சொத்துகளை வணிக நோக்கில் சிறப்பாகப் பயன்படுத்துதல், பயணக் கட்டணத்தைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் வகையில், விளம்பரம், குத்தகை, மின்னணு தளங்கள் மூலம் வருவாய் ஈட்டுதல் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட

சேவைகள் ஆகியவற்றின் மூலம் கட்டணமில்லா வருவாயினை ஈட்டுவது, அடையாளம் காணப்பட்ட வருவாய் வழிமுறைகள் ஆகும்.

**கட்டணமில்லா வருவாய் ஈட்டுவதற்கான வழிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

| வ. எண் | விவரம் |
|---|---|
| 1 | பேருந்து பணிமனைகள் மற்றும் பேருந்து முனையங்களின் வணிக மேம்பாடு |
| 2 | பேருந்து முழுவதுமான விளம்பரம் |
| 3 | பேருந்தில் பிற விளம்பரங்கள் |
| 4 | பிற விளம்பரங்கள் |
| 5 | அடுத்த பேருந்து நிறுத்தம் குறித்த அறிவிப்பு |
| 6 | மோட்டல்கள் மற்றும் வாடகை இடங்களில் பேருந்துகளை நிறுத்துதல் |
| 7 | சாமான்கள் / பார்சல் |
| 8 | உலோகக் கழிவுகள் விற்பனை |
| 9 | நிலம் அல்லது கட்டிடக் குத்தகை |
| 10 | பெட்ரோல், டீசல் போன்றவற்றை விற்கும் சில்லறை விற்பனை நிலையங்கள் |
| 11 | ஓட்டுநர் பள்ளி / பயிற்சிப் பள்ளி |
| 12 | ஒப்பந்த அடிப்படையில் பேருந்துகள் இயக்குதல் |
| 13 | கடைகள் வாடகை |
| 14 | கூரியர் |
| 15 | TNSTC பேருந்துகளில் தளவாடங்கள் / சரக்கு சேவைகள் |

### 3.8.1. பேருந்து நிலையங்கள் / பேருந்து முனையங்களை வருவாய் ஈட்டக் கூடியதாக மேம்படுத்துதல்

மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துப் பணிமனைகள் மற்றும் பேருந்து முனையங்கள், CMDA, CMRL மற்றும் GCC போன்ற நிறுவனங்களின் மூலம் நவீனமயமாக்கப்பட்டு, பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதுடன், கட்டமைப்புகளை திறம்படப் பயன்படுத்தும் பல்நோக்குடன் வணிக ரீதியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) சார்பில், ஆறு பேருந்து முனையங்களின் நவீனப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், அய்யப்பன்தாங்கல், ஆவடி, வள்ளலார் நகர், திருவான்மியூர் மற்றும் பாடியநல்லூர் ஆகிய ஐந்து இடங்களில் பேருந்து முனையங்களை நவீனப்படுத்துதல் / மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. CMRL சார்பில், அண்ணாநகர் மேற்கு, வடபழனி, மந்தைவெளி மற்றும்

திருவொற்றியூர் ஆகிய இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், திருவொற்றியூர் பேருந்து முனையம் மற்றும் பணிமனை மறுகட்டமைப்பு, வடபழனி மற்றும் மந்தைவெளி பேருந்து முனையங்களில் வணிக வளாக மேம்பாட்டுப் பணிகள் அடங்கும். GCC சார்பில், எண்ணூர் மற்றும் சுங்கச்சாவடி பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான ஆறு பேருந்து முனையங்களில் மொத்தம் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், பெசன்ட் நகர் பேருந்து முனையத்தின் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. ஓய்வறைகள், பேருந்து சுத்தம் செய்யும் அமைப்புகள், பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசிய பணிமனை உட்கட்டமைப்பு வசதிகளை

உள்ளடக்கிய விரிவான பணிமனை மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.8.2. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான இடங்களில் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்களை அமைத்தல்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பணிமனைகள், மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமையகங்களில் உள்ள காலியிடங்களை வருவாய் ஈட்டும் வகையில் பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் பல சொத்துகள் வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் அமைந்துள்ளதால், அவற்றின் மூலம் கணிசமான வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாடு, வாகனங்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளதால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான நிலங்களில் சில்லறை எரிபொருள் விற்பனை நிலையங்கள் அமைக்க எண்ணெய் நிறுவனங்கள் முன்மொழிந்துள்ளன. முன்மொழியப்பட்ட திட்டத்தின்படி, எண்ணெய்

நிறுவனங்கள் உட்கட்டமைப்பு மற்றும் எரிபொருள் வழங்குவதுடன், நில வாடகை மற்றும் விற்பனைத் தரகுக் கட்டணத்தையும் (Commission) செலுத்தும். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எரிபொருள் விற்பனை நிலையங்களை இயக்கும்.

அடையாளம் கண்டறியப்பட்ட 372 இடங்களில், 195 இடங்களுக்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 41 இடங்கள் சாத்தியமானவையாகக் கண்டறியப்பட்டுள்ளன. இதில், பின்வரும் 11 எரிபொருள் விற்பனை நிலையங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

- அடையாறு – காந்தி நகர் – 07.05.2025 (MTC)
- ஜெ.ஜெ. நகர் மேற்கு, முகப்பேர் – (MTC)
- எம்.கே.பி. நகர் –(MTC)
- பெரம்பூர் – (MTC)
- ஆதனூர் –(SLM)
- எடப்பாடி –(SLM)
- இராமநாதபுரம் –(KUM)
- குடியாத்தம் – (VPM)
- பொன்மேனி – (MDU)
- கட்டபொம்மன் நகர் – (TNV)
- இராணித்தோட்டம் பணிமனை–I – (TNV)

### 3.8.3 போக்குவரத்து கழகங்களில் சிப்பம் மற்றும் சரக்கு சேவைகளை அறிமுகம் செய்தல்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான முக்கிய வருவாய், பயணச்சீட்டு கட்டணங்களிலிருந்து பெறப்படுகிறது. இதில், பேருந்துகளில் பயணச்சீட்டு, சலுகை கட்டணங்கள், கட்டணமில்லா பேருந்து பயணத்திற்கான செலவினத்தை ஈடுசெய்தல் ஆகியவை அடங்கும். நிதி நிலைத்தன்மையை மேம்படுத்த, போக்குவரத்துக் கழகங்கள் வருவாய் ஆதாரங்களை பெருக்க வேண்டும்.

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், பயணக் கட்டணம் இல்லாத இதர வருவாயினை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு கணினிமயமாக்கப்பட்ட சிப்பம் மற்றும் சரக்கு அனுப்புதல் சேவை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. சிப்பம் மற்றும் சரக்குகளை முன்பதிவு செய்தல், சேமித்தல், அனுப்புதல், வழங்குதல், நகர்வை கண்காணித்தல் மற்றும் குறைதீர்க்கும் மையம் ஆகிய செயல்பாடுகள் உள்ளடங்கியதாக இச்சேவை

இருக்கும். சிப்பம் மற்றும் சரக்குகள் சேகரிக்கப்பட்டு, பேருந்துகளில் அனுப்பப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும். இது, வணிக வருவாயை உருவாக்குவதோடு, போக்குவரத்துக் கழகங்களின் தொடர் இழப்புகளை குறைக்க உதவும்.

இது, பொது தனியார் கூட்டாண்மையின்கீழ் செயல்படுத்தப்படும். இதில் போக்குவரத்துக் கழகங்கள் சிப்பம் மற்றும் சரக்குகளை சேமித்தல் மற்றும் போக்குவரத்து வசதியினை வழங்கும். இதர பணிகள் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். ஒப்பந்த விதிமுறைகளின் அடிப்படையில், போக்குவரத்துக் கழகங்களுக்கான வருவாய் தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.

இத்திட்டத்திற்காக, சாத்தியக்கூறு அறிக்கையினை தயாரிக்க தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம், ஆலோசகர் நிறுவனத்தை நியமித்துள்ளது. வரைவு சாத்தியக்கூறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அரசு துறைகள்

மற்றும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் (TNIDB) ஆலோசனைகளைப் பெற்று நடைமுறைபடுத்தப்படும்.

### 3.9 மாநில அரசின் பழைய வாகனங்களை பயன்பாட்டிலிருந்து நீக்கும் கொள்கை (State Condemnation Policy)

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் (MoRTH) 16.01.2023 தேதியிட்ட அறிவிப்பு G.S.R. 29(E)-இன் படி, 01.04.2023 முதல், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும் (மாநிலப் போக்குவரத்துக்கழகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் வாகனங்கள் உட்பட), பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு கழிவு செய்யப்பட (Scrap) வேண்டும்.

மாநில அரசின் பழைய பேருந்தினை பயன்பாட்டிலிருந்து நீக்கும் மற்றும் மாற்றீடு கொள்கையானது, வாகனத்தின் வயது மற்றும் இயக்கப்பட்ட கி.மீ ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது. வாகனத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்,

மாறிவரும் சாலைத் தொழில்நுட்பம், மின்சாரம் மற்றும் சிஎன்ஜி (CNG) போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து மற்றும் பராமரிப்பு நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகள் ஆகியவற்றிற்கு ஏற்ப இக்கொள்கை அவ்வப்போது மறுஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

போக்குவரத்து (அ) துறையின் 08.07.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 70-இன் படி, SETC பேருந்துகள் 7 ஆண்டுகள் அல்லது 12 லட்சம் கிலோமீட்டர், இவ்விரண்டில் எது முதலில் வருகிறதோ அதனடிப்படையில் கழிவு செய்யப்பட வேண்டும். பிற போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளைப் பொறுத்தவரை 9 ஆண்டுகள் அல்லது 12 லட்சம் கிலோமீட்டர், இவ்விரண்டில் எது முதலில் வருகிறதோ அதனடிப்படையில் கழிவு செய்யப்பட வேண்டும்.

01.08.2026 நிலவரப்படி, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் நிர்ணயித்துள்ள

15 ஆண்டுகள் என்ற அதிகபட்ச ஆயுட்கால வரம்புடன் ஒப்பிடுகையில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துத் தொகுப்பின் சராசரி வயது 5.52 ஆண்டுகளாக உள்ளது. இருப்பினும், பேருந்துகளை மாற்றுவது என்பது கொள்கை ரீதியாக அனுமதிக்கப்பட்ட ஆயுட்காலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, அவற்றின் செயல்பாட்டு நிலை, பராமரிப்புச் செலவு, எரிபொருள் சிக்கனம், நம்பகத்தன்மை, பாதுகாப்பு மற்றும் பயணிகளின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகிறது.

பழைய மற்றும் அதிக தூரம் ஓடிய பேருந்துகளை உரிய நேரத்தில் மாற்றுவது, தொடர்ச்சியான பராமரிப்புச் செலவுகள், பழுதுகள் மற்றும் சேவைக் குறைபாடுகளை களைவதை மட்டுமின்றி, எரிபொருள் செயல்திறன் மற்றும் பேருந்துகள் இயக்கத்திற்கு கிடைக்கப்பெறுவதையும் உறுதிபடுத்தும். பயன்பாட்டு நேரத்தை மேம்படுத்துவதும் அவசியமாகும். சிறந்த இருக்கை அமைப்பு, சஸ்பென்ஷன், காற்றோட்டம்,

அணுகக்கூடிய தன்மை, பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பயணிகளுக்கான வசதிகள் கொண்ட நவீன பேருந்துகளை அறிமுகப்படுத்துவது, வசதியான மற்றும் நம்பகமான பயண அனுபவத்தை வழங்கும். தற்போதுள்ள பயணிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், குறிப்பாக பொது–தனியார் கலப்புப் போக்குவரத்து வழித்தடங்களில், தனியார் பேருந்து சேவைகளில் இருந்து அரசு பேருந்திற்கு பயணிகளை ஈர்ப்பதற்கும் இத்தகைய மேம்பாடுகள் அவசியமாகின்றன. இதன் மூலம், அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் போட்டித்திறனையும் பொதுச் சேவைப் பங்கையும் வலுப்படுத்த முடியும்.

## 4. பசுமை முன்னெடுப்புகள்

### 4.1 சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய பேருந்துகள் கொள்முதல்

KfW, உலக வங்கி நிதியுதவி மற்றும் அரசு நிதியுதவியுடன் 2,415 மின்சார பேருந்துகள் மற்றும் 857 சிஎன்ஜி (CNG) பேருந்துகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் 625 மின்சாரப் பேருந்துகளும், 857 சிஎன்ஜி பேருந்துகளும் பெறப்பட்டு இயக்கத்தில் உள்ளன. மீதமுள்ள பேருந்துகள் மார்ச் 2027–க்குள் பெறப்படும்.

| நிதி உதவி / திட்டம் | எரிபொருள் வகை | மொத்த பேருந்துகளின் எண்ணிக்கைகள் | பெறப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கைகள் (23.08.2026 அன்றுள்ளவாறு). | பெறப்பட வேண்டிய பேருந்துகளின் எண்ணிக்கைகள் |
|---|---|---|---|---|
| மாநில அரசின் நிதி உதவி (2025–26) | CNG பேருந்துகள் | 746 | 746 | 0 |
| மாநில அரசின் நிதி உதவி (2025–26) கூடுதல் எண்ணிக்கை | CNG | 111 | 111 | 0 |
| KfW (ஜெர்மன் வளர்ச்சி வங்கி) | மின்சாரப் பேருந்துகள் | 500 | 0 | 500 |
| உலக வங்கி GCC – MTC முதல் கட்டம் | மின்சாரப் பேருந்துகள் | 625 | 625 | 0 |
| உலக வங்கி GCC – MTC இரண்டாம் கட்டம் | மின்சாரப் பேருந்துகள் | 750 | 0 | 750 |

| நிதி உதவி / திட்டம் | எரிபொருள் வகை | மொத்த பேருந்துகளின் எண்ணிக்கைகள் | பெறப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கைகள் (23.08.2026 அன்றுள்ளவாறு). | பெறப்பட வேண்டிய பேருந்துகளின் எண்ணிக்கைகள் |
|---|---|---|---|---|
| CMRL கடைக்கோடி பகுதிகளுக்கு – சிற்றுந்துகள் சேவை (GCC – MTC) | மின்சாரப் பேருந்துகள் | 220 | 0 | 220 |
| இணைப்புப் பேருந்து (GCC – MTC ) | மின்சாரப் பேருந்துகள் | 300 | 0 | 300 |
| இரட்டை அடுக்குப் பேருந்து MTC | மின்சாரப் பேருந்துகள் | 20 | 0 | 20 |
| **மொத்தம்** | | **3272** | **1482** | **1790** |

இத்திட்டம், தூய்மையான சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலைத்தன்மை வாய்ந்த பொதுப் போக்குவரத்து அமைப்பை நோக்கிய படிப்படியான மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

### 4.2 டீசல் பேருந்துகளை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு பேருந்துகளாக மாற்றுதல்

அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), டீசல் எரிபொருளுடன் ஒப்பிடுகையில் மாசுபடுதல் குறைவதால், சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று எரிபொருளாகும். CNG பேருந்துகள் மேம்பட்ட எரிபொருள் சிக்கனத்தை வழங்குவதுடன், இயக்கச்

செலவையும் குறைக்கின்றன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் CNG எரிவாயு எளிதாகக் கிடைப்பதுடன், விலையும் குறைவாக உள்ளது.

டீசல் பேருந்துகளுடன் ஒப்பிடுகையில், CNG பேருந்துகளின் இயக்கச் செலவு சுமார் 13.24% குறைவாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தற்போது, டீசல் பேருந்துகளிலிருந்து CNG பேருந்துகளாக மாற்றப்பட்ட 507 பேருந்துகளையும், 857 புதிய CNG பேருந்துகளையும் இயக்கி வருகின்றன. டீசல் பேருந்துகளிலிருந்து CNG பேருந்துகளாக மாற்றப்பட்ட 507 பேருந்துகளில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் (MTC) 61, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் (SETC) 78, விழுப்புரம் 103, சேலம் 69, கோயம்புத்தூர் 27, கும்பகோணம் 120, மதுரை 39 மற்றும் திருநெல்வேலி 10 பேருந்துகள் அடங்கும்.

எனவே, பயணிகளின் பாதுகாப்புத் தேவைகளை உறுதி செய்தபடி, இயக்கச் செலவைக் குறைப்பதுடன்

குறைந்த அளவிலான மாசுபடுதலை ஏற்படுத்துவதால், CNG பேருந்துகளின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

**4.3 டீசல் பேருந்துகளை மின்சார பேருந்துகளாக மாற்றும் முன்முயற்சி:–**

பசுமை மற்றும் நிலையான பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில், பயன்பாட்டில் உள்ள டீசல் பேருந்துகளை மின்சார பேருந்துகளாக மாற்றும் புதுமையான முன்முயற்சியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, சுமார் 7 ஆண்டுகள் பயன்பாட்டில் உள்ள 100 டீசல் பேருந்துகளில், தற்போதைய டீசல் இயக்க அமைப்பு அகற்றப்பட்டு, மின்சார இயக்கத் தொகுப்பு (Electric Drivetrain Kit) மற்றும் டிராக்க்ஷன் பேட்டரி தொகுப்பு (Traction Battery Pack) பொருத்தப்பட்டு, முழுமையான மின்சார பேருந்துகளாக மாற்ற திட்டமிடப்படுள்ளது. இதனை மொத்த செலவு ஒப்பந்தத்தில் (GCC MODEL) செயல்படுத்தலாம்.

இந்த முன்முயற்சியின் மூலம் ஏற்கனவே உள்ள பேருந்துகளின் பயன்பாட்டு ஆயுளை நீட்டிப்பது மட்டுமல்லாது, பொதுச் சொத்துகளை மறுபயன்படுத்துதல், டீசல் பயன்பாட்டைக் குறைத்தல், காற்று மாசுபாடு மற்றும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல், இயக்கச் செலவினங்களை குறைத்தல் மற்றும் குறைந்த காலத்தில் மின்சார பேருந்துகளை பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் போன்ற பலன்கள் ஏற்படும்

## 4.4 போக்குவரத்துக் கழகங்களின் கட்டடங்களில் மேற்கூரை சூரிய மின்சக்தி

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், பேருந்துப் பணிமனைகள், மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமையகங்களின் மேற்கூரைகளில் சூரிய ஆற்றல் அமைப்புகளை நிறுவி வருகின்றன. இதன் மூலம், மரபுசார் மின்சாரப் பயன்பாடு மற்றும் கார்பன் உமிழ்வு குறைவதுடன், மரபுசாரா உபரி மின்சாரத்தை மின்வலையமைப்பிற்கு வழங்கவும் வழிவகுக்கிறது.

மேற்கூரை சூரிய மின்சக்தி அமைப்புகளுக்கான மூலதன நிதி தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் (TNTDFC) மூலம் வழங்கப்படுகிறது. அடையாளம் கண்டறியப்பட்ட 373 இடங்களில், 280 இடங்களில் சாத்தியக்கூறு ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டு, 191 இடங்கள் பொருத்தமானவையாகக் கண்டறியப்பட்டுள்ளன.

சூரிய ஆற்றல் அமைப்புகள் மொத்தம் 45 இடங்களில் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளன; இவற்றின் மொத்த மின் உற்பத்தித் திறன் 498.50 கிலோவாட் (KW) ஆகும். இவ்வமைப்புகள் தற்போது நாளொன்றுக்கு 1,994.00 KWH மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன; இது மாதத்திற்கு 49,850 KWH மற்றும் ஆண்டிற்கு 5,98,200 KWH அளவிலான உற்பத்தியாகும். இதன் விளைவாக, ஆண்டுதோறும் சுமார் 426 டன் கார்பன்–டை–ஆக்சைடு ($CO_2$) வெளியேற்றம் குறைவதோடு, ஏறக்குறைய ரூ.53.80 லட்சம் சேமிக்கப்படுகிறது.

| வ. எண் | ரசுப் போக்குவரத்துக் கழகம் | சூரிய மின்னாற்றல் தகடுகள் மற்றும் மின்சார உற்பத்தி | | | |
|---|---|---|---|---|---|
| | | சூரிய மின்தகடுகள் நிறுவப்பட்ட இடங்களின் எண்ணிக்கை | நிறுவப்பட்ட சூரிய மின்திறன் (KW) | நாளொன்றுக்கு மொத்த மின் உற்பத்தி (KWh) | மாதத்திற்கு மொத்த மின் உற்பத்தி (KWh) |
| 1 | மா.போக.க | 3 | 30.00 | 120.00 | 3,000 |
| 2 | அ.வி.போ.க | 1 | 10.00 | 40.00 | 1,000 |
| 3 | த.நா.அ.போ.க (விழுப்புரம்) | 20 | 214.00 | 856.00 | 21,400 |
| 4 | த.நா.அ.போ.க (சேலம்) | 4 | 80.00 | 320.00 | 8,000 |
| 5 | த.நா.அ.போ.க (கும்பகோணம்) | 8 | 107.00 | 428.00 | 10,700 |
| 6 | த.நா.அ.போ.க (கோயம்புத்தூர்) | 3 | 13.00 | 52.00 | 1,300 |
| 7 | த.நா.அ.போ.க (மதுரை) | 3 | 9.00 | 36.00 | 900 |
| 8 | த.நா.அ.போ.க (திருநெல்வேலி) | 2 | 20.00 | 80.00 | 2,000 |
| 9 | சா.போ.நி | 1 | 15.50 | 62.00 | 1,550 |
| மொத்தம் | | 45 | 498.50 | 1,994.00 | 49,850 |

மீதமுள்ள 146 இடங்களிலும் மேற்கூரை சூரிய மின்சக்தி உற்பத்தி அமைப்புகளை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவாக்கம், எரிசக்தி தன்னிறைவை மேம்படுத்தி, மின்சாரச் செலவு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும்.

## 4.5 உள்ளடக்கிய, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் தொழில்நுட்ப திறன் பெற்ற போக்குவரத்து இயக்கம்

சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து திட்டத்தின் கீழ், 625 மின்சாரப் பேருந்துகள் இயக்கத்தில் உள்ளன. மேலும், 2,415 மின்சாரப் பேருந்துகளை அறிமுகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனுடன், 507 டீசல் பேருந்துகள் CNG–ஆக மாற்றப்பட்டுள்ளதுடன், பேருந்துகளை நவீனமயமாக்கலின் கீழ் 857 CNG பேருந்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கூரை சூரிய மின்சக்தி உற்பத்தி மற்றும் கார்பன் வரவு (Carbon Credit) மூலம் வருவாய் ஈட்டுதல் ஆகிய நடவடிக்கைகளுடன் இணைந்து, இத்திட்டங்கள் டீசல் சார்புநிலையையும் கிரீன் ஹவுஸ் வாயு உமிழ்வையும் படிப்படியாகக் குறைக்க உதவுகின்றன. மேலும், டீசல் பேருந்துகளை மின்சாரப் பேருந்துகளாக மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முன்னோட்டமாக 100 பேருந்துகளை மின்சாரப் பேருந்துகளாக மாற்றியமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 5. சாலைப் பாதுகாப்பு முன்னெடுப்புகள்

### 5.1 தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு

01.07.2026 நிலவரப்படி, தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 405.73 லட்சமாகும். இதில், போக்குவரத்து வாகனங்கள் 16.92 லட்சமாகவும், போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 388.81 லட்சமாகவும் உள்ளன. இருசக்கர வாகனங்கள் மற்றும் பிற போக்குவரத்து அல்லாத வாகனங்களின் பெருமளவிலான பயன்பாடு காரணமாக, சாலைப் பாதுகாப்பு என்பது இன்றியமையாததாகும். இச்சூழலில், ஓட்டுநர் பயிற்சி, வாகனங்களின் தகுதி நிலை, பயணிகளின் பாதுகாப்பு சாதனங்கள், விபத்துகள் குறித்த பகுப்பாய்வு மற்றும் பிற துறைகளுடனான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளின் பாதுகாப்புச் செயல்பாடுகள் அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகின்றன.

## 5.2 அரசு போக்குவரத்து கழகங்களின் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முக்கிய நோக்கமானது சாலை விபத்துகளைத் தடுப்பதாகும். "விபத்துகளற்ற தமிழ்நாடு" என்ற அடிப்படையில், காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத் துறை மற்றும் கல்வித் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த, போக்குவரத்து ஆணையரகம், அரசு போக்குவரத்து கழகங்களுடன் இணைந்து பணியாற்றுகிறது; அவையாவன:–

- தானியங்கி கதவுகள் பொருத்துதல்.
- பார்வைக்கு புலப்படாத பகுதிகளைக் (blind–spots) காண உதவும் கண்ணாடிகளைப் பொருத்துதல்.

- அதிக விபத்துகள் நடைபெறும் வழித்தடங்களைக் கண்டறிந்து ஆய்வு செய்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பான ஓட்டுநர் பயிற்சி அளித்தல்.
- பணியாளர்களுக்கான ஓய்வு வசதிகளை மேம்படுத்துதல்.

## 5.3 சாலை விபத்துகளைக் குறைக்க அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காக மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அவையாவன:

- பணியின்போது அலைபேசி பயன்பாடு மற்றும் மது அருந்துதல் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.
- பணியை தொடங்குவதற்கு முன் ஓட்டுநர்களுக்கு சுவாசப் பரிசோதனை (Breath Analyser Test) மேற்கொள்ளப்படுகிறது.

- மது போதையில் பேருந்துகள் ஓட்டுவதை கண்டறியக் காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை மூலம் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.
- சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து, பார்வை வரம்பிற்குள் வராத பகுதிகளைக் (blind spots) கண்டறிதல், வரைபடமாக்குதல் மற்றும் சரிசெய்தல்.
- உயிரிழப்பை ஏற்படுத்தும் விபத்துகளில் தொடர்ந்து ஈடுபடும் ஓட்டுநர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு, மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான யோகா மற்றும் தியானப் பயிற்சிகள் நடத்துதல்.
- 185 இடங்களில் குளிர்சாதன வசதி உள்ளிட்ட நவீன வசதிகளுடன் பணியாளர் ஓய்வறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 48

பணிமனைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.4 அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கான விபத்து புள்ளிவிவரங்கள்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் நிகழ்ந்த உயிரிழப்பை ஏற்படுத்திய சாலை விபத்துகள் மற்றும் அவற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் ஆண்டு வாரியான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு | உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | மொத்த உயிரிழப்புகள் |
|---|---|---|
| 2021 (கோவிட் - 19) | 675 | 725 |
| 2022 | 917 | 987 |
| 2023 | 830 | 936 |
| 2024 | 953 | 1,020 |
| 2025 | 847 | 940 |
| 2026 (01.01.2026 முதல் 31.07.2026 வரை) | 481 | 519 |

01.01.2026 முதல் 31.07.2026 வரையிலான காலகட்டத்தில், 2025-ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், உயிரிழப்பை

ஏற்படுத்திய சாலை விபத்துகளின் எண்ணிக்கை 3 சதவீதமும், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 5 சதவீதமும் குறைந்துள்ளன.

01.01.2026 முதல் 31.07.2026 வரையிலான காலகட்டத்திற்கான பகுப்பாய்வின்படி, உயிரிழப்பை ஏற்படுத்திய சாலை விபத்துகளில் இருசக்கர வாகனங்கள் தொடர்புடையவை 54 சதவீதமாகவும், உயிரிழப்புகளில் 52 சதவீதமாகவும் உள்ளது. அதேபோல், பாதசாரிகள் தொடர்புடைய உயிரிழப்பு விபத்துகள் 29 சதவீதமாகவும், உயிரிழப்புகளில் 27 சதவீதமாகவும் உள்ளது. இதில் பயணிகள் தொடர்பான உயிரிழப்பு விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் தலா 7 சதவீதமாக உள்ளது.

பயணிகள் தொடர்பான இவ்விபத்துக்கள், பேருந்துகளின் கதவுகளை முறையாக மூடும் நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதையும், பயணிகள் பாதுகாப்பாக ஏறி இறங்கும்

நடைமுறைகளை உறுதியாக அமல்படுத்துவதையும் வலியுறுத்துகின்றன.

எனவே, அதிக அபாயமுள்ள பிரிவுகள் மற்றும் அதிக விபத்துகள் நிகழும் வழித்தடங்களுக்கு, இலக்கு வைக்கப்பட்ட பாதுகாப்பு மேற்பார்வை, வழித்தட அளவிலான இடர் ஆய்வு, புத்துணர்வுப் பயிற்சி, ஆலோசனை மற்றும் அமலாக்கம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**5.5 சாலைப் பாதுகாப்பு மாதம்**

சாலைப் பாதுகாப்பு குறித்த பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் சாலைப் பாதுகாப்பு மாதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து விதிகள், பாதுகாப்பான வாகனத்தை இயக்கும் முறைகள் மற்றும் சாலைகளில் கவனக்குறைவாகச் செயல்படுவதால் ஏற்படும் அபாயகரமான விளைவுகள் குறித்து மக்களுக்கு

விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இத்தகைய முயற்சிகளின் நோக்கமாகும்.

இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக, அனைத்து வயது பிரிவினரையும் ஈடுபடுத்தும் வகையில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள், சாலைகளை பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு, அனைவருக்கும் பாதுகாப்பான சாலைப் போக்குவரத்தை உருவாக்குவதற்கும் பங்களிக்கின்றன.

## 6. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்: நிலையான வளர்ச்சிக்கான தமிழ்நாட்டின் அர்ப்பணிப்பு

### 6.1 நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

ஐக்கிய நாடுகள் சபையின் 2030 இலக்குகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs), அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூக சமத்துவம், நெகிழ்திறன் மிக்க உட்கட்டமைப்பு, தூய்மையான ஆற்றல், நிலைத்தன்மை வாய்ந்த நகரங்கள், காலநிலை நடவடிக்கை மற்றும் பொறுப்புமிக்க முகமைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கான ஒரு செயல்கட்டமைப்பை வழங்குகின்றன. தனிநபர் வாகனப் பயணங்களை ஒப்பிடுகையில், பொதுப் போக்குவரத்தானது சாலையினை திறனுடன் பயன்படுத்தி, மக்களை வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் பிற வாய்ப்புகளுடன் இணைப்பதன் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையப் பங்களிக்கிறது.

நிதி ஆயோக்கின் (NITI Aayog) 'எஸ்டிஜி இந்தியா குறியீடு 2023–24'–இன் (SDG India Index) படி, தமிழ்நாடு 78 புள்ளிகளைப் பெற்று, மாநிலங்களுக்கான தரவரிசையில் 'முன்னணி பட்டியலில்' (Front Runner status) மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது. அனைவருக்குமான போக்குவரத்து (Inclusive Mobility), சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகன மாற்றம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், டிஜிட்டல் அமைப்புகள் மற்றும் முகமைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் போக்குவரத்துத் துறை, இவ்விலக்குகளை அடைய வழிவகுக்கிறது.

நிலைத்தன்மை வாய்ந்த நகரங்கள் மற்றும் சமூகங்கள் என்ற இலக்கை அடைவதில் போக்குவரத்துத் துறை, நேரடியாகப் பங்களிக்கிறது. குறிப்பாக, பாதுகாப்பான, குறைந்த செலவிலான, அனைவரும் எளிதில் அணுகக்கூடிய மற்றும் நிலைத்தன்மை வாய்ந்த போக்குவரத்து வசதிகளை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்ட இலக்கு

11.2–ஐ செயல்படுத்துவதில் இத்துறை முக்கியப் பங்காற்றுகிறது. இத்துறையின் திட்டங்கள், சாலைப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு தொடர்பான நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) 3, கல்வி அணுகல் தொடர்பான SDG 4, பாலின சமத்துவம் தொடர்பான SDG 5, தூய்மையான ஆற்றல் தொடர்பான SDG 7, உற்பத்தித் திறன் மிக்க வேலைவாய்ப்பு தொடர்பான SDG 8, நெகிழ்திறன் மிக்க உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கம் தொடர்பான SDG 9, ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் தொடர்பான SDG 10, வளங்களின் திறன்மிக்க பயன்பாடு தொடர்பான SDG 12, காலநிலை நடவடிக்கை தொடர்பான SDG 13, வெளிப்படைத்தன்மைமிக்க நிறுவனங்கள் தொடர்பான SDG 16, மற்றும் கூட்டாண்மைகள் தொடர்பான SDG 17 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கின்றன.

### 6.2 பொதுப் போக்குவரத்து மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு (SDG)-11

அனைவருக்கும் பாதுகாப்பான, குறைந்த செலவிலான மற்றும் எளிதில் அணுகக்கூடிய

போக்குவரத்து வசதியை வழங்குவதால், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) 11.2–ஐ அடைவதில் பொதுப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக, பெண்கள், குழந்தைகள், முதியோர், திருநர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த பயணிகளின் தேவைகளுக்கு இதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள், 10,160-க்கும் மேற்பட்ட வழித்தடங்களில், 19,283 திட்டமிடப்பட்ட சேவைகள் உட்பட மொத்தம் 21,198 பேருந்துகளை இயக்குகின்றன. இவை தினமும் சுமார் 84.75 லட்சம் கிலோமீட்டர் பயணித்து, ஏறத்தாழ 2.12 கோடி பயணிகள் பயணிக்க உதவுகின்றன. குறைந்த செலவிலான பொதுப் போக்குவரத்து வசதியின் மூலம் நகர்ப்புற மையங்கள், கிராமப்புற குடியிருப்புகள், மலைப்பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளை இவை இணைக்கின்றன.

முக்கிய முன்னெடுப்புகள் மற்றும் அவை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDGs) அளிக்கும் பங்களிப்புகள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன:

| நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான பங்களிப்பு | முன்னெடுப்பு மற்றும் முக்கிய மதிப்புகள் |
|---|---|
| பரவலான மற்றும் நெகிழ்திறன் மிக்க போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலமும், தனியார் வாகனங்களின் மீதான சார்பைக் குறைப்பதன் மூலமும், நிலையான வளர்ச்சி இலக்கு SDG 9 மற்றும் SDG 11 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | பொதுப் போக்குவரத்து வலையமைப்பு: 21,198 பேருந்துகள், 19,283 திட்டமிடப்பட்ட சேவைகள், 10,160 வழித்தடங்கள், தினசரி சுமார் 84.75 லட்சம் கிலோ மீட்டர் இயக்கம் மற்றும் ஏறத்தாழ 2.12 கோடி தினசரி மக்களின் பயணங்கள் போன்றவை. |
| வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் பொது சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலமும், குடும்பங்களின் போக்குவரத்துச் செலவைக் குறைப்பதன் மூலமும், SDG 5, SDG 8, SDG 10 மற்றும் SDG 11 போன்ற நிலையான வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தில் பங்களிக்கிறது. | மகளிருக்கான கட்டணமில்லா பயணம்: 23.08.2026 வரை 1023.18 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; தினசரி சராசரியாக 71.70 லட்சம் மகளிர் பயணிகள் பயன்பெறுகின்றனர். இதில் 7,537 சாதாரண நகரப் பேருந்துகள் மற்றும் 173 சாதாரண மலைப் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. |
| பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மற்றும் மாறுபட்ட தேவைகளைக் கொண்ட பயணிகளுக்கான போக்குவரத்து தடைகளை நீக்குவதன் மூலம், SDG 10 மற்றும் SDG 11 ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | உள்ளடக்கிய பயணம்: 23.08.2026 வரை திருநங்கைகளால் 54.14 லட்சம் பயணங்களும், மாற்றுத் திறனாளிகளால் 813.81 லட்சம் பயணங்களும், தகுதியுடைய உதவியாளர்களால் 41.54 லட்சம் பயணங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2026–27 நிதியாண்டில், முறையே தினசரி சராசரியாக 2,662, 47,402 மற்றும் 2,060 பயணங்கள் பதிவாகியுள்ளன. |

| | |
|---|---|
| எளிதில் அணுகுவதற்கேற்ற உட்கட்டமைப்பு, மேம்பட்ட நம்பகத்தன்மை மிக்க சேவை, கிராமப்புற–நகர்ப்புற இணைப்பு மற்றும் முதல் மற்றும் கடைக்கோடி வரை (First-mile & Last-mile) ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வலுப்படுத்துவதன் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் SDG 9, SDG 10 மற்றும் SDG 11 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | **பேருந்துகளை நவீனமயமாக்கல்:** புதிய பேருந்துகள் கொள்முதல் திட்டம்; 23.08.2026 நிலவரப்படி 4,785 பேருந்துகள் பெறப்பட்டுள்ளன. இதில், 1,375 தாழ்தள (Low-floor) பேருந்துகளும், 627 மினி / கடைக்கோடி (Last-mile) இணைப்புப் பேருந்துகளும் அடங்கும். |
| தூய்மையான ஆற்றல் பயன்பாடு, வளங்களின் திறன்மிக்க பயன்பாடு, உள்ளூர் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கிரீன் ஹவுஸ் வாயு (Greenhouse Gas) உமிழ்வைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் SDG 7, SDG 11, SDG 12 மற்றும் SDG 13 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | பசுமை போக்குவரத்து: நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 16 லட்சம் லிட்டர் டீசல் பயன்பாடு, தற்போது இயக்கத்தில் உள்ள 625 மின்சாரப் பேருந்துகள், 2,415 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் திட்டம், CNG–ஆக மாற்றப்பட்ட 507 பேருந்துகள் மற்றும் புதிய 857 CNG பேருந்துகள் ஆகியவற்றின் மூலம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. |
| புதுப்பிக்கத்தக்க மின்சக்தி பயன்பாட்டை ஊக்குவித்தல், மின்சாரச் செலவைக் குறைத்தல் மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் SDG 7, SDG 12 மற்றும் SDG 13 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | **புதுப்பிக்கத்தக்க ஆற்றல்:** 45 இடங்களில் 498.50 கிலோவாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய மின்சக்தி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவை ஆண்டுதோறும் சுமார் 5,98,200 கிலோவாட்–மணிநேரம் (kWh) மின்சாரத்தை உற்பத்தி செய்து, சுமார் ரூ.53.80 லட்சம் மின்சாரச் செலவை மிச்சப்படுத்துவதுடன், ஆண்டிற்கு சுமார் 426 டன் கார்பன் டைஆக்சைடு ($CO_2$) உமிழ்வைக் குறைக்கின்றன. |

| | |
|---|---|
| பாதுகாப்பான வாகனங்கள், ஓட்டுநர் பயிற்சி, சிசிடிவி (CCTV), அவசர எச்சரிக்கை பொத்தான்கள் (Panic Buttons), தானியங்கி கதவுகள், தரவுகளின் அடிப்படையிலான விபத்து மறு ஆய்வு மற்றும் பாதுகாப்பான பயண நடைமுறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வளர்ச்சி இலக்குகள் SDG 3 மற்றும் SDG 11 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | சாலைப் பாதுகாப்பு 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 01.01.2026 முதல் 31.07.2026 வரையிலான காலகட்டத்தில் உயிரிழப்பை ஏற்படுத்திய சாலை விபத்துகள் 496 லிருந்து 481 ஆக குறைந்துள்ளன, உயிரிழப்புகளின் எண்ணிக்கை 544 லிருந்து 519 ஆக குறைந்துள்ளது. இது முறையே 3% மற்றும் 5% ஆகும். |
| சேவையின் நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை, வருவாய் பொறுப்புணர்வு, பயணிகளுக்கான தகவல் சேவைகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வளர்ச்சி இலக்குகள் SDG 9, SDG 11 மற்றும் SDG 16 ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது. | **டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப முன்னெடுப்புகள்:** மின்னணு பயணச்சீட்டு (Electronic Ticketing), இணையவழி முன்பதிவு, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள், வாகனக் கண்காணிப்பு, பயணிகள் தகவல் அமைப்புகள், கட்டுப்பாட்டு மையங்கள், குறைதீர் தளங்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு பலகைகள் (Data Dashboards) ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளன. |

## 6.3 நிலையான போக்குவரத்திற்கான செயல்திட்ட முன்னுரிமைகள்

மின்சார மற்றும் CNG பேருந்து சேவைகளை விரிவுபடுத்துதல், முதல் மற்றும் கடைகோடி வரையிலான போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துதல், தாழ்தள மற்றும் அனைவரும் எளிதில் பயன்படுத்தக்கூடிய பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், பயணிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பை

வலுப்படுத்துதல், டிஜிட்டல் அமைப்புகளை விரிவாக்குதல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் கார்பன் கணக்கீட்டு முறைகளை ஊக்குவித்தல், மேலும், வழித்தட மேம்படுத்துதல் மற்றும் கட்டணமல்லாத வருவாய் ஆதாரங்கள் மூலம் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம், போக்குவரத்துத் துறை தனது நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG) பங்களிப்பை தொடர்ந்து வலுப்படுத்தும்.

இந்நடவடிக்கைகளின் மூலம், நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வளர்ச்சிக்கான முக்கிய கருவியாகப் பொதுப் போக்குவரத்தை தமிழ்நாடு தொடர்ந்து நிலைநிறுத்தும்.

## 7. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் நோக்கமானது, மாநிலம் முழுவதும் இயக்கப்படும் ஏறத்தாழ 20,808 அரசுத் துறை வாகனங்களை சிக்கனமானதாகவும், திறன்மிக்கதாகவும் பழுதுபார்த்து பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வதாகும். இத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் அரசுத் துறை ஊர்திகளுக்கு எரிபொருள் நிரப்பிட 10 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அரசுத் துறை வாகனங்களை பராமரிக்கும் பணிகளுடன் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, வனத்துறை, காவல்துறை, வருவாய்துறை, உணவு பொருட்கள் வழங்கல் துறை ஆகிய துறைகள் மூலம் பறிமுதல் செய்யப்படுகின்ற அனைத்து வாகனங்களும் தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாணைகளின்படி, ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு, ஏலமிடும் பணிகளையும், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

தலைமைச் செயலகம் அருகிலுள்ள சேவை நிலையமானது முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அதிகாரிகளின் வாகனங்களின் சிறு பழுதுகளை சரிசெய்யும் பணிகளையும், அரசு வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையானது, சென்னை மற்றும் பல்வேறு மாவட்டத் தலைமையகங்களில் அமைந்துள்ள 20 அரசு தானியங்கி பணிமனைகள் மற்றும் மூன்று மண்டல துணை இயக்குநரகங்கள் உட்பட மாநிலம் முழுவதும் உள்ள அரசுத் துறை வாகனங்களைப் பராமரிப்பதற்காக செயல்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள அரசு மத்திய தானியங்கி பணிமனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பாதுகாப்பு வாகனங்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மிகவும் முக்கிய பிரமுகர்கள், அரசுச் செயலாளர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் வாகனங்களின்

பராமரிப்பினை மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பணிமனையானது எரிபொருள் திறன் மற்றும் பாதுகாப்பை மையமாகக் கொண்ட உயர் தொழில்நுட்ப வாகனங்களை பழுதுநீக்க நவீனமயமாக்கப்பட்ட புதிய இயந்திரங்களைக் கொண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்கிறது.

வாகனங்களின் பராமரிப்பு பணிகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வாகனங்கள் பராமரிப்பு பணிக்காக காத்திருக்கும் கால அளவைக் குறைக்கும் விதமாகவும், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு தானியங்கி பணிமனைகள் ரூ.53.00 இலட்சம் செலவில், நவீனமயமாக்கம் செய்யப்பட்டது.

அரசுத் துறை வாகன ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்திட மதுரை, திருச்சி மற்றும் சேலத்தில் உள்ள அரசு தானியங்கி பணிமனையில் ஓட்டுநர் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மதுரை

ஓட்டுநர் பயிற்சி மையத்தில் புத்தாக்கப் பயிற்சி பெறும் அரசு துறை ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், திருச்சி மற்றும் சேலம் ஓட்டுநர் பயிற்சி மையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.110 இலட்சம் செலவில் மேம்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் அரசு தானியங்கி பணிமனைகளில் ரூ.30 இலட்சம் செலவில் புதிய நவீன ரக வாகனங்களுக்கு மின்னணு பழுது கண்டறியும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. தஞ்சாவூர், திருநெல்வேலி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் தருமபுரி அரசு தானியங்கி பணிமனைகளில் ரூ.100 இலட்சம் செலவில் நவீனமயமாக்கல் மற்றும் மேம்படுத்துதல் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநர் அலுவலகம் மற்றும் 20 சார்நிலை

பணிமனைகளின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்திடும் பொருட்டு, எல்.இ.டி. (L.E.D.) திரை வசதிகளுடன் கூடிய கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்திட ரூ.102.64 இலட்சம் செலவில் தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (ELCOT) மூலமாக செயல்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு தானியங்கி பணிமனை இல்லாத இடங்களில், அரசு துறை வாகனங்களை பராமரிக்க மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல், சேலம், திருநெல்வேலி, தருமபுரி, காஞ்சிபுரம், வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அரசு நடமாடும் பணிமனைகள் இயங்கி வருகின்றன.

01.04.2025 முதல் 31.07.2026 வரை இத்துறையின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 42,711 ஆகும். மேலும், 1,524 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவை கழிவு செய்யப்பட சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 8. இரயில்வே திட்டங்கள் – துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

தமிழ்நாட்டில் தென்னக இரயில்வேயால் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதில், போக்குவரத்துத் துறை ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படுகிறது. புதிய இரயில் பாதைகளை அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள இரயில் பாதைகளை இரட்டிப்பாக்கும் பணிகள் ஆகியவை இத்திட்டங்களில் அடங்கும். நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில உரிமை மாற்றம் போன்ற செயல்முறைகளை எளிதாக்கவும் விரைவுபடுத்தவும், இத்துறை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நில நிர்வாக ஆணையரகம் ஆகியோருடன் இணைந்து செயல்படுகிறது. மேலும், மாநிலம் முழுவதும் இரயில்வே மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகத் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் உரிய நேரத்தில் முடித்தல் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, ஒன்றிய அரசு மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதிலும் இத்துறை முக்கியப்

பங்காற்றுகிறது. இம்மாநிலத்தில் பின்வரும் திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன:–

| வ. எண். | இரயில்வே திட்டத்தின் பெயர் | உள்ளடக்கப்பட்ட மாவட்டங்களின் பெயர்கள் | பட்டா நிலம் கையகப்படுத்துதல் (ஹெக்டேர்) | அரசு நிலம் மாற்றம் (ஹெக்டேர்) |
|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் – திண்டுக்கல் இடையேயான அகலப்பாதை இரட்டை இரயில் பாதை அமைத்தல் | விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, கடலூர், திண்டுக்கல் | 146.58.71 | 43.27.41 |
| 2 | மதுரை – தூத்துக்குடி இடையேயான அகலப்பாதை இரட்டை இரயில் பாதை அமைத்தல் | மதுரை, விருதுநகர், தூத்துக்குடி | 90.58.02 | 21.15.56 |
| 3 | கன்னியாகுமரி – திருவனந்தபுரம் இடையேயான அகலப்பாதை இரட்டை இரயில் பாதை அமைத்தல் (கன்னியாகுமரி–நாகர்கோவில், நாகர்கோவில்–இரணியல், இரணியல்–பாரசாலை) | கன்னியாகுமரி | 50.30.53 | 6.05.13 |
| 4 | சென்னை கடற்கரை (Chennai Beach) – கொருக்குப்பேட்டை இடையே 3 மற்றும் 4வது புதிய இரயில் பாதை அமைத்தல் | சென்னை | 0.05.06 | 0.60.83 |
| 5 | கொருக்குப்பேட்டை – எண்ணூர் இடையே 4வது புதிய இரயில் பாதை அமைத்தல் | சென்னை | 0.44.93 | 0.28.68 |
| 6 | மொரப்பூர் – தருமபுரி இடையே புதிய அகல இரயில் பாதை அமைத்தல் | தருமபுரி | 78.11.38 | 13.68.56 |
| 7 | செங்கல்பட்டு – விழுப்புரம் இடையே புதிய அகல இரயில் பாதை அமைத்தல் | செங்கல்பட்டு | 2.89.14 | 3.39.03 |
| 8 | மதுரை – தூத்துக்குடி அருப்புக்கோட்டை வழியாக புதிய அகல இரயில் பாதை அமைத்தல் (கட்டம் 1 & 2) | மதுரை, விருதுநகர், தூத்துக்குடி | 717.29.61 | 77.27.22 |
| 9 | திண்டிவனம் – திருவண்ணாமலை புதியஅகலஇரயில்பாதைஅமைத்தல் | விழுப்புரம், திருவண்ணாமலை | 229.23.19 | 46.44.36 |
| **புதிய இரயில் பாதை திட்டங்கள்** | | | | |
| 10 | மன்னார்குடி – பட்டுக்கோட்டை புதிய அகல இரயில் பாதை அமைத்தல் | தஞ்சாவூர், திருவாரூர் | 177.02.25 | 26.56.01 |
| 11 | தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை புதிய அகல இரயில் பாதை அமைத்தல் | தஞ்சாவூர் | 119.00.70 | 31.63.70 |

## 9. சாலை போக்குவரத்து நிறுவனம்

### 9.1 முன்னுரை

**சாலை போக்குவரத்து நிறுவனம்** 1976 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் போக்குவரத்துத் துறையில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளை மேற்கொள்வதாகும். பொதுமக்கள் மற்றும் அரசு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கான ஓட்டுநர் பயிற்சி அளிப்பதாகும். இதில், இலகுரக மோட்டார் வாகன (LMV) மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, மாநில போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கான மறுபயிற்சி, போக்குவரத்துப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

இதனுடன், மாநில போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான முக்கியப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கான முகமையாகவும் செயல்படுகிறது. மேலும், மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கான ஓட்டுநர்–நடத்துநர் (Drivers cum Conductors) பணியாளர் தேர்வு செயல்முறையையும் மேற்கொள்கிறது.

இவ்வாறான செயல்பாடுகளின் மூலம், திறமையான ஓட்டுநர்களை உருவாக்குதல், மனிதவளத்தை வலுப்படுத்துதல், தொழில்முறை ஓட்டுநர் தரநிலைகளை மேம்படுத்துதல், சாலைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் போன்றவற்றில் முக்கியப் பங்காற்றுகிறது.

### 9.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்கள் உள்ள கும்மிடிப்பூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கீழ்க்கண்ட 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது:–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 6. | மதுரை | 11. | பொள்ளாச்சி |
| 2. | வேலூர் | 7. | திண்டுக்கல் | 12. | ஈரோடு |
| 3. | விழுப்புரம் | 8. | திருநெல்வேலி | 13. | கும்பகோணம் |
| 4. | சேலம் | 9. | நாகர்கோவில் | 14. | காரைக்குடி |
| 5. | தருமபுரி | 10. | விருதுநகர் | 15. | புதுக்கோட்டை |

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியங்களின் நிதியுதவி மூலமாகவும் இலகுரக / கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளில், அரசின் வழிகாட்டுதலின்படி வழங்கப்படும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | துவங்கிய நாள் முதல் | 2025–26 | மொத்தம் |
| A | கனரக மோட்டார் வாகன ஓட்டுநர் பயிற்சி | | | |
| 1. | கும்மிடிப்பூண்டி | 28313 | 208 | 28521 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 3738 | 49 | 3787 |
| 3. | இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கனரக வாகன பயிற்சி மையங்கள் | 35117 | 149 | 35266 |
| **மொத்தம்** | | **67168** | **406** | **67574** |
| B புத்தாக்கப் பயிற்சி – கும்மிடிப்பூண்டி | | **75250** | **559** | **75809** |

## 9.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

இலகுரக மோட்டார் வாகன (LMV) ஓட்டுநர் பயிற்சி வழங்குவதற்காக, 1997 ஆம் ஆண்டு இரண்டு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. அவற்றில் ஒன்று சென்னையிலும், மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் அமைந்துள்ளன. பொதுமக்களுக்கு நேரடியாகவும், நிதியுதவி வழங்கப்படும் திட்டங்கள் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்படுவதுடன், பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற பிற துறைகளைச் சேர்ந்த ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி மற்றும் திறன் தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் (2026–27), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பெண்களுக்காக மட்டும் **"வுமன் ஆன் வீல்ஸ்" (Women on Wheels)** என்ற சிறப்புப் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 314 பெண்கள் இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டுவதற்கான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

**இலகுரக மோட்டார் வாகன ஓட்டுநர் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை:**

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | துவங்கிய நாள் முதல் மார்ச் 2026 வரை | 2026–2027 (ஜூலை 2026 வரை) | மொத்தம் (ஜூலை 2026 வரை) |
| **A** | **இலகுரக மோட்டார் வாகன ஓட்டுநர் பயிற்சி** | | | |
| 1. | தரமணி, சென்னை | 4,336 | 297 | 4633 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1,433 | 7 | 1440 |
| **மொத்தம்** | | **5,769** | **304** | **6073** |
| **B** | தரமணி பயிற்சி மையத்தில் புத்தாக்கப் பயிற்சி திட்டங்கள் | **46933** | **356** | **47289** |

## 9.4 திறன் மேம்பாட்டு பயிற்சி

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அப்பயிற்சி, தரமணியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. மார்ச் 2026 வரை பயிற்சி வகுப்புகளின்

மூலம் மொத்தம் 47,291 போக்குவரத்துக் கழக பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

**9.5 சாலை போக்குவரத்து இதழ்**

ஐ.ஆர்.டி–யின் ஆராய்ச்சிப் பிரிவு, போக்குவரத்து தொடர்பான பல ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. மேலும், இந்த ஆராய்ச்சிப் பிரிவு, விபத்து விசாரணை கையேடு ஒன்றையும் உருவாக்கியுள்ளது.

சாலைப் போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு, விபத்துப் பகுப்பாய்வு போன்ற தகவல்களைக் கொண்ட "சாலைப் போக்குவரத்து இதழ்" (Journal of Road Transport) ஐ.ஆர்.டி–யால் வெளியிடப்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து (STUs) பெறப்படும்

காலாண்டு விபத்துப் பகுப்பாய்வுகள் தொகுக்கப்பட்டு இந்த ஆய்விதழில் வெளியிடப்படுகின்றன.

### 9.6 கொள்முதல் நடவடிக்கைகள்

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் போன்ற பொருட்களை கொள்முதல் செய்வதற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

### 9.7 கல்வி நிறுவனங்கள்

சாலை போக்குவரத்து நிறுவனம் மூலம், அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கீழ்க்கண்ட கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

- அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை (முன்னர் சாலை

போக்குவரத்து நிறுவனம் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை).

- அரசு பொறியியல் கல்லூரி, ஈரோடு (முன்னர் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, ஈரோடு ).
- அரசு பல் தொழில்நுட்பக் கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி (முன்னர் சாலை போக்குவரத்து நிறுவனம் பாலிடெக்னிக் கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி).

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (PMCH) 2019 – 20 –ஆம் ஆண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீடு பாதுகாப்புடன் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின்

வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரியை அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றி, உயர்கல்வி துறை ஆணை வெளியிட்டுள்ளது.

2022-23-ஆம் கல்வியாண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் சாலை போக்குவரத்து நிறுவனம் பாலிடெக்னிக் கல்லூரிகளை அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளாக மாற்றி, உயர்கல்வி துறை ஆணை வெளியிட்டுள்ளது.

இதுவரை, இக்கல்வி நிறுவனங்களின் மூலம் 1,969 மருத்துவர்களும், 11,648 பட்டதாரி பொறியாளர்களும், 13,135 பட்டயப் பொறியாளர்களும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

## 10. தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம்

முன்னர் 'பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு' (PTCS) என அறியப்பட்ட ' தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம்' (TNMLC), ஏப்ரல் 1984–இல் தமிழ்நாடு அரசின் ஒரு பொதுத்துறை நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. சாலைப் போக்குவரத்துத் துறையில் உயர்தர ஆலோசனை சேவைகளை வழங்கும் நோக்கில் TNMLC செயல்பட்டு வருகிறது.

இதுவரை, போக்குவரத்து மற்றும் போக்குவரத்துப் பொறியியல், நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகள் (ITS), எண்மயமாக்கல் (Digitalization) உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சுமார் 67 ஆலோசனைத் திட்டங்களை TNMLC வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது.

**தற்போது, TNMLC பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:**

1. **தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பு (OTRS).**
2. **மின்வாகனங்களுக்கான மின்னேற்றக் கட்டமைப்பு மேம்பாடு – இந்திய அரசின் கனரகத் தொழில்கள் அமைச்சகத்தின் (MHI) நிதியுதவியுடன், 'PM E–DRIVE' திட்டத்தின் கீழ் ரூ.34.61 கோடி மதிப்பில் பொது மின்வாகன மின்னேற்ற நிலையங்களை அமைத்தல்.**
3. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான ஒருங்கிணைந்த பயணிகள் குறைதீர்ப்பு மற்றும் புகார்கள் நிவாரண அமைப்பு.
4. **"Arasu Bus" (அரசுப் பேருந்து) என்ற பெயரில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான ஒருங்கிணைந்த இணையதளம்.**
5. **தானியங்கி பயணக்கட்டண வசூல் அமைப்பின் (POS திட்டம்) செயல்பாடுகளைக் கண்காணித்தல்.**
6. பேருந்து இயக்கங்களுக்கு மாற்று எரிபொருள் (CNG) பயன்பாட்டினை ஆய்வு செய்தல்.

7. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சிப்பங்கள் மற்றும் சரக்கு போக்குவரத்துச் சேவைகளை அறிமுகப்படுத்துதல்.
8. EMIS (கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு) அடிப்படையில் மாணவர்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்குவதைக் கண்காணித்தல்.
9. பின்வரும் குழுக்களுக்கு இணையவழி அமைப்புகள் மூலம் பேருந்து பயண அட்டைகள் வழங்குவதை எளிதாக்குதல்:
    a) மாற்றுத்திறனாளிகள்.
    b) சுதந்திரப் போராட்ட வீரர்கள்.
    c) தமிழ்ப் புலவர்கள் / விருது பெற்றவர்கள் போன்றவை.
    d) ஆய்வாளர் (Inspector) வரையிலான காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையவழி வாயிலாகப் பேருந்து பயண அட்டைகளை வழங்குதல்.
10. அரசுப் போக்குவரத்துக் கழக வளாகங்களில் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதைக் கண்காணித்தல்.

11. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு (TNMLC) KfW உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பேருந்து சேவைகளை சூற்றுப்புறச்சுழலுக்கு உகந்த (Eco–Friendly) முறையில் நவீனமயமாக்குதல்.

## 11. முடிவுரை மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள்

**பாதுகாப்பு, அறிவார்ந்த, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைத்தன்மைமிக்க (Sustainable) பொதுப் போக்குவரத்து.**

தமிழ்நாட்டின் பொதுப் போக்குவரத்து அமைப்பு, அன்றாடப் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும், சமச்சீரான பிராந்திய வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் இன்றளவும் அடித்தளமாக விளங்கி வருகிறது. 2026–27 ஆம் ஆண்டில், எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களில் இயங்கும் 21,198 பேருந்துகள் மூலம், நகர், புறநகர், மலைப்பாதை மற்றும் தொலைதூரப் பேருந்துச் சேவைகளை சுமார் 2.12 கோடி பயணிகளுக்கு நாள்தோறும் வழங்கி வருகிறது. இப்பேருந்து சேவைகள் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகரங்கள், நகரங்கள், சிறுநகரங்கள், கிராமங்கள், தொழில் மையங்கள், கல்வி நிறுவனங்கள், சுகாதார நிலையங்கள் மற்றும் சந்தைகளை திறம்பட இணைத்து வருகின்றன.

இந்தியாவிலேயே மிகவும் குறைந்த கட்டணத்தைக் கொண்ட பொதுப் போக்குவரத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

நடைபெற்று வரும் பேருந்து போக்குவரத்து நவீனமயமாக்கல் திட்டம், தூய்மையான, பாதுகாப்பான, அணுகத்தக்க மற்றும் பயணிகளுக்கு உகந்த பொதுப் போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதற்கான முக்கியமான முன்னேற்ற நடவடிக்கையை கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ், 8,390 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளன. இதில், 23.08.2026 நிலவரப்படி 4,785 பேருந்துகள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், தாழ்தள, மின்சார, அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகள், சிற்றுந்துகள், கடை கோடிப்பகுதியை இணைக்கும் பேருந்துகள் (Last Mile Connectivity) மற்றும் குளிர்சாதன வசதி இல்லாத புறநகர் பேருந்துகள் அடங்கும். முழுமையான பேருந்து மறுசீரமைப்பு, பாதுகாப்பு சாதனங்கள் பொருத்துதல், பணிமனைகளை வலுப்படுத்துதல், தூய்மையான எரிபொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும்

பராமரிப்பு அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் பயணிகளின் வசதி, நம்பகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் செயல்திறனும் மேலும் வலுப்படும்.

தமிழ்நாட்டின் எதிர்கால பொதுப் போக்குவரத்து, தொழில்நுட்பம் சார்ந்த, மாசற்ற உமிழ்வை நோக்கமாகக் கொண்ட பேருந்து போக்குவரத்து அமைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும். குறிப்பாக, முக்கிய நகர்ப்புற மையங்களில் குளிர்சாதன வசதியுள்ள மின்சாரப் பேருந்துகள், தாழ்தள பேருந்துச் சேவைகள், உயர்தர மின்சாரப் பேருந்துச் சேவைகள், இணைப்புப் (Feeder) பேருந்துகள் மற்றும் மெட்ரோ இரயில் சேவைகளுடன் ஒருங்கிணைந்த கடை கோடிப்பகுதியை இணைக்கும் (Last Mile Connectivity) பேருந்துச் சேவைகள் போன்றவை படிப்படியாக விரிவுபடுத்தப்படும். அரசின் ஆரம்பகட்ட மூலதன முதலீட்டைக் குறைப்பதற்கும், இயக்கச் செலவுகளை முன்கூட்டியே கணிக்கக்கூடியதாக மாற்றுவதற்கும், பேருந்துகளின் கிடைப்புத் திறனை மேம்படுத்துவதற்கும், தொழில்முறை சேவைத் தரநிலைகளைப் பராமரிப்பதற்கும், தேவைக்கேற்ப மொத்த

செலவு ஒப்பந்த (Gross Cost Contract - GCC) முறை பின்பற்றப்படும்.

தூய்மையான போக்குவரத்திற்கான மாற்றுப் பயணத்தில் மின்சாரப் பேருந்துகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதேவேளையில், ஹைட்ரஜன் மூலம் இயங்கும் பேருந்துகள் உள்ளிட்ட உருவெடுத்து வரும் மாசற்ற உமிழ்வு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் முன்னோடி (Pilot) திட்டங்கள் மூலம் ஆராயப்படும். நீண்ட தூர, அதிக பயணிகள் திறன் கொண்ட மற்றும் சிறப்புச் சேவைகளுக்காக இத்தகைய தொழில்நுட்பங்களை செயல்படுத்துவது அவற்றின் தொழில்நுட்ப முதிர்ச்சி, பாதுகாப்புத் தரநிலைகள், எரிபொருள் கிடைப்புத் தன்மை, உட்கட்டமைப்பு தயார்நிலை மற்றும் செலவினச் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

அடுத்த தலைமுறை பொதுப் போக்குவரத்து அமைப்பின் முக்கிய அடித்தளமாக டிஜிட்டல்

தொழில்நுட்பம் அமையும். நிகழ்நேர வாகனக் கண்காணிப்பு (Real-time Vehicle Tracking), தானியங்கி கட்டண வசூல் முறை (Automatic Fare Collection System), தேசிய பொது இயக்க அட்டை (National Common Mobility Card) ஒருங்கிணைப்பு, பயணிகள் தகவல் அமைப்புகள், CCTV கண்காணிப்பு அமைப்புகள், அவசர எச்சரிக்கை பொத்தான்கள் (Panic Buttons), செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான கட்டுப்பாட்டு மையங்கள், முன்கணிப்பு பராமரிப்பு (Predictive Maintenance), மின்னணு பணிமனை மேலாண்மை (Digital Depot Management), வழித்தடப் பகுப்பாய்வு (Route Analytics), நிறுவன செயல்திறன் கண்காணிப்புப் பலகைகள் (Enterprise Dashboards) மற்றும் கைப்பேசி அடிப்படையிலான பயணிகள் சேவைகள் ஆகியவை படிப்படியாக மேலும் வலுப்படுத்தப்படும். இத்தொழில்நுட்ப அமைப்புகள், பேருந்துகளின் நேரந்தவறாமை, சேவையின் நம்பகத்தன்மை, வருவாய் பொறுப்புணர்வை

உறுதிப்படுத்துதல், பராமரிப்புத் திட்டமிடலை மேம்படுத்துதல் மற்றும் பயணிகளின் வசதியை உயர்த்துதல் ஆகியவற்றிற்கு உறுதுணையாக அமையும்.

பயணிகளின் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் இன்றி எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் பேருந்துகளில், ஓட்டுநருக்கான மேம்படுத்தப்பட்ட உதவி அமைப்புகள் (Advanced Driver Assistance Systems – ADAS), மோதல் எச்சரிக்கை அமைப்பு, வழித்தட ஒழுங்கு எச்சரிக்கை, ஓட்டுநர் சோர்வு கண்காணிப்பு, வேகக் கண்காணிப்பு, கேமரா அடிப்படையிலான பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பிரேக்கிங் உதவி அமைப்புகள் போன்றவை படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும். மேலும், ஓட்டுநர்களுக்கான பயிற்சி, புத்தாக்கபயிற்சி, சிமுலேட்டர் (Simulator) அடிப்படையிலான பயிற்சி, உளவியல் ஆலோசனை, சாலைப் பாதுகாப்புத் தணிக்கைகள், விபத்துத் தரவுப் பகுப்பாய்வு மற்றும்

நடத்தை அடிப்படையிலான கண்காணிப்பு ஆகியவை வலுப்படுத்தப்பட்டு, விபத்துகளைக் குறைப்பதற்கும் பயணிகளின் நம்பிக்கையை மேலும் உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசு போக்குவரத்து கழகங்களின் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்தும் நடவடிக்கைகள், பயணிகளுக்கான குறைந்த சேவை கட்டணம் மற்றும் அவற்றின் பொதுச் சேவைப் பொறுப்புகளை பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும். வழித்தட சீரமைப்பு, பேருந்துப் பயன்பாட்டுத் திறன் மேம்பாடு, மின்னணு வருவாய் கண்காணிப்பு, கட்டணமில்லா வருவாய் ஆதாரங்களை அதிகரித்தல், சிப்பம் மற்றும் சரக்குப் போக்குவரத்து சேவைகள், பணிமனைகளின் வணிகப் பயன்பாடு, எரிசக்தித் திறன் மேம்பாடு, முன்னெச்சரிக்கை பராமரிப்பு மற்றும் செலவின ஒப்பீட்டு மதிப்பீடு (Cost Benchmarking) போன்றவை பரீட்சார்த்த முறையில் நடைமுறைப்படுத்தப்படும்.

பாதுகாப்பு, அனைவரும் எளிதில் அணுகும் தன்மை, பயணிகளின் வசதி, நிதி ஒழுங்குமுறை மற்றும் குடிமக்களை மையப்படுத்திய நிர்வாகம் ஆகியவற்றிற்கு தொடர்ந்து முன்னுரிமை அளிப்பதன் மூலம், பயணியருக்கு நம்பகமான மற்றும் தரமான பொதுப் போக்குவரத்து சேவைகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

**ஆ. விஜய் தமிழன் பார்த்திபன்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

*******

# இணைப்பு

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2026-2027

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம் | 8,596,15,53 | 3,945,81,07 | 941,53,09 | 13,483,49,69 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 77,41,02 | 55,00 | -- | 77,96,02 |
| | **மொத்தம்** | 8,673,56,55 | 3,946,36,07 | 941,53,09 | 13,561,45,71 |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் 17.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் 25.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்பில் ரூ.127.21 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் 300 புதிய பேருந்துகளின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் 25.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்பில் 300 புதிய பேருந்துகளின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்துத் தொடங்கி வைத்து, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 29A வழித்தட புதிய பேருந்தில் பயணம் செய்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் 25.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்பில் 300 புதிய பேருந்துகளின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்துத் தொடங்கி வைத்து, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 29A வழித்தட புதிய பேருந்தில் பயணம் செய்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் 25.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்பில் 300 புதிய பேருந்துகளின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்துத் தொடங்கி வைத்து, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 29A வழித்தட புதிய பேருந்தில் பயணம் செய்தார்.




மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் தலைமையில், 08.06.2026 அன்று பல்லவன் சாலையில் உள்ள மாநகர் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் 13.07.2026 அன்று சென்னை, வியாசர்பாடியில் செயல்பட்டுவரும் மாநகர் போக்குவரத்துக் கழக மின்சாரப் பேருந்து பணிமனையைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பேருந்து மின்னேற்றச் செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் 13.07.2026 அன்று சென்னை, வியாசர்பாடியில் செயல்பட்டுவரும் மாநகர் போக்குவரத்துக் கழக மின்சாரப் பேருந்து பணிமனையைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பேருந்து மின்னேற்றச் செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.




மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் 16 வாரிசுதாரர்களுக்கும் (நடத்துநர்), அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் பணிக்காலத்தில் இறந்த ஒரு பணியாளரின் வாரிசுதாரர் (ஓட்டுநருடன் நடத்துநர்) என மொத்தம் 17 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை 07.08.2026 அன்று வழங்கினார்.




மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், 07.08.2026 அன்று விழுப்புரம் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் திரு.சுமேஷ், நடத்துனர் திரு.பாரதி மற்றும் மதுரை போக்குவரத்துக் கழக ஓட்டுநர் திரு.பி.நாகராஜன், நடத்துனர் திரு.செல்லதுரை ஆகியோர், பேருந்தில் பயணம் செய்த பெண் பயணிக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்ட நிலையில், பயணியை மருத்துவனையில் அனுமதித்து, சிகிச்சை அளிக்க உதவியதை பாராட்டியும், தனது சம்பளத்திலிருந்து தலா ரூ.5000/– வீதம் நான்கு பணியாளர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்.




மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் 11.07.2026 அன்று மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் வியாசர்பாடி மின்சார பேருந்து பணிமனையை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




பள்ளி மாணவர்கள் கூட்ட நெரிசலின்றி, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள வசதியாக, மாணவர்களை அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தங்களிருந்து பள்ளிக்கு அழைத்துச் சென்றுவர ஏதுவாக, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் நாளொன்றுக்கு 41 சிறப்புப் பேருந்துகள் வாயிலாக 84 பயண நடைகள் 13.07.2026 திங்கட்கிழமை அன்று முதல் இயக்கப்பட்டு வருகிறது. அப்பேருந்துகளை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் 11.07.2026 அன்று பார்வையிட்டார்.



தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயை பெருக்கும் நோக்கில் சரக்குகளை எடுத்துச் செல்லும் விதமாக பேருந்தில் வடிவமைக்கப்பட்டுள்ள பகுதியினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் 29.07.2026 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், 07.08.2026 அன்று அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் நீண்ட தூரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு தரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.10/–க்கு "பயணி" (Payani) குடிநீர் பாட்டில் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்து வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச.ஜோசப் விஜய் அவர்கள் 25.08.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 290 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 250 புதிய பேருந்துகளின் சேவையைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச.ஜோசப் விஜய் அவர்கள் 25.08.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 290 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 250 புதிய பேருந்துகளின் சேவையைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, பேருந்திலுள்ள வசதிகளைப் பார்வையிட்டார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.